Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර්

மே.16-22,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 309

## ஜே.வி.பி.எழுச்சியும் தமிழ்க் கட்சிகளின் வீழ்ச்சியும்

## கடற்புலிகளும் கடற் பலியும்!

## பதிலடி வியூகம்?



## அரசியல் களம் படையெடுப்பாரா ரஜினி

## என் மகள் வருவாளா?

## மந்த்ராவின் அம்மா கண்ணீர்

# முரசம்

## பதில் சொல்வார்களா?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

தென்மாகாணசபைத்
தேர்தலும்
நடக்கவிருக்கிறது!

மாகாணசபை முறை
என்பது
இனப்பிரச்சனைக்குத்
தீர்வாக முன்வைக்கப்பட்ட
நிர்வாக அலகு!

தமிழ் பேசும் மக்களுக்கு
அதிசயமான எதனையும்
கொடுத்துவிடவில்லை
என்று சிங்கள மக்களை
திருப்தி செய்வதற்காக
நாடு முழுவதற்கும்
அது அறிமுகம் செய்யப்பட்டது!

அன்று மாகாணசபை முறையை
முன்னின்று எதிர்த்தது
சிறீலங்கா சுதந்திரக் கட்சி!

நாட்டின் செல்வத்தை
விரயமாக்கும் தேவையற்ற
நிர்வாக அலகுதான்
மாகாண சபைகள்
என்று கூறியது!

எனினும், தாமும்
பாராளுமன்றம் செல்ல
முடியவில்லையே,
மந்திரிகளாக முடியவில்லையே,
என்று முகத்தைத் தொங்கப்
போட்டுக் கொண்டிருந்த
பெரும்பான்மை இனக் கட்சிகளது
பிரமுகர்களுக்கு
மாகாணசபை பதவிகள்
வடிகாலாக மாறின!

இதனால்-
உட்கட்சிப் பிரச்சனைகள்
ஓரளவு குறைந்தன!

அதேபோல
சிங்களக் கட்சிகள்
பொதுத் தேர்தலுக்கு முன்னர்
தம் பலத்தை
பரிசோதிக்கும் களமாகவும்
மாகாண சபைத் தேர்தல்கள்
பல நடந்துவிட்டன!

இம் மாகாண சபைகளால்
சிங்கள மக்களுக்கும்
பயன் ஏதும் கிடையாது!

ஆக, மொத்தத்தில்
இனப்பிரச்சனைக்கு
மாகாணசபை தீர்வைத்
தரவில்லை என்பது
உண்மையானாலும்
பெரும்பான்மை இனக்
கட்சிகளது
பிரச்சனைகளுக்கு
தீர்வைக் கொடுத்துள்ளது!

மாகாண சபைகளால்
சிங்களக் கட்சிப் பிரமுகர்களே
இலாபம் அடைகின்றனர்.
இதனைக் கண்டுவிட்டு
தமிழ்க் கட்சிகளுக்கும் சபலம்
தலை தூக்கியிருக்கிறது!

வடக்கு-கிழக்கில்
மாகாண சபைத் தேர்தலை
நடத்துமாறு கோருகின்றன!

இனப்பிரச்சனைக்குத்
தீர்வாக
இன்றைய அரசால்
கூறப்பட்ட தீர்வு
பிராந்திய சபைகள்!

இந்த ஆண்டுக்குள்
இனப்பிரச்சனையைத்
தீர்ப்பதாக
ஜனாதிபதி கூறுகிறார்!

அப்படியானால்
அடுத்த ஆண்டு
பிராந்திய சபையோடு
ஆரம்பமாகப் போகிறது
என்றுதானே அர்த்தம்!

அதற்கிடையே
எதற்கு
மாகாண சபைத் தேர்தல்?

அப்படியானால்
தமிழ்க் கட்சிகள்
ஜனாதிபதியின் வாக்குறுதிகளை
நம்புவதே கிடையாதா?

பின்னர் எதற்கு
ஜனாதிபதியின் உத்தரவாதங்களை
இவர்கள் பத்திரிகைகளுக்கு
விநியோகம் செய்கின்றனர்?

தமிழ் பேசும் மக்கள்
ஜனாதிபதியின் வாக்குறுதிகளை
நம்பிக் கொண்டிருக்க வேண்டும்.
அப்போதுதான்
தமது இருப்பும் தக்க வைக்கப்படும்
என்று தான் தமிழ்க் கட்சிகள்
நினைக்கின்றனவா?

அரசியல் தீர்வு
வருவதற்கு முன்னர்
இருப்பதை பயன்படுத்த
நினைக்கிறோம் என்று
கூறுவார்களேயானால்,
எம்மிடம் சில
கேள்விகள் உள்ளன!

ஜனாதிபதியால் தீர்வை
கொண்டுவர முடியாது
என்று நம்புகிறீர்களா?

மக்கள் நலன்தான்
முக்கியம்: அதற்கு
மாகாணசபைத் தேர்தல்
அவசியம் என்றால்
தேர்தலை நடத்துமாறு
வழக்குத் தொடுக்க
தயக்கம் ஏன்?

மக்கள் நலனைவிட
ஆட்சியாளர்
முகம் கோணாதிருப்பதற்கே
முக்கியத்துவம் தருகிறீர்களா?

ஏன் இந்த முரண்பாடுகள்?
கேள்விகள் தந்துவிட்டோம்
தமிழ்க் கட்சிகள்
பதில் தந்தால் பிரசுரிப்போம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## நம்பிக்கை

இறை இருப்பு என்பது நம்பிக்கையில் பிரகாசிப்பது. பக்தர்களுக்கு உதவக் காத்திருக்கும் இறைவன். நம்பிக்கையோடு நாடுபவர்களுக்குத் தக்க தருணத்தில் உதவிக்கரம் நீட்டுவான். உதவி எந்த ரூபத்தில் கோரப்படுகிறதோ அந்த வடிவத்தில் ஆண்டவன் நல்குவான். துரியன் சபையில் துரௌபதி துகில் உரு வப்படுகின்றபோது தன் கையால் துணியைப் பிடித்துக் கொண்டு இறை நாமத்தை உச்சரித்தபோது? இறைவன் உதவிக்கு வரவில்லை. இடுப்புத் துணியின் இறுதிச் சுற்றுக்கு வந்தபோது அவள் தன்னை மறந்தாள். இரு கரங்கூப்பி இறைவனிடம் பூரண சரணாகதி அடைந்தாள். இறைவனில் முழு நம்பிக்கை வைத்து விட்டாள். இவ்வேளையில்தான் இறைவன் அவள் துணிபெருக அருள் பாலித்தான். இதைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் திரௌபதி கிருஷ்ணபகவானிடம் கேட்டாள்.

"துகில் உரியும் போது கடைசிக்கட்டத்தில் வந்து உதவக் காரணம் என்ன கண்ணா?"

"நீ உன் கையில் நம்பிக்கை வைத்து இருகரத்தாலும் துணியைப் பிடித்துக் கொண்டு என்னை அழைத்தாய். அப்போது நான் வரவில்லை. இறுதி நிலையில் நீ பூரண சரணாகதி அடைந்தாய். இறைவனில் முழு நம்பிக்கை வைத்தாய் அப்போது தான் நான் உனக்கு உதவ முன்வந்தேன்!" காலங்கடந்துதான் காத்தருளக் காரணம் என்ன வென்று கண்ணன் விளக்கினான்.

தொகுப்பு: தம்பிலுவில், ரி.தவராஜா.



## சிறு பாவங்களையும் தவிர்ப்போம்

ஒரு முறை தூரப் பிரயாணமொன்றின்போது நபி (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்கள் சிலரும் களைப்பு நீங்கிச் செல்வதற்காக ஓரிடத்தில் தரித்தார்கள். அங்கு அவர்களுக்கு உணவு சமைப்பதற்கு விறகு தேவைப்பட்டது. எந்த வித பயிர் பச்சைகளும் இல்லாத வறண்ட இடம் அது. இருந்தாலும் நபி (ஸல்) அவர்கள் விறகு சேகரித்து வருமாறு தன் தோழர்களிடம் வேண்டிக் கொண்டார்கள். தோழர்களோ அதற்கு, "நாம் பாழ்பட்ட ஒரு பூமியில்தான் இருக்கிறோம். இங்கு விறகு ஏது?" எனக் கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "ஒவ்வொருவரும் தமக்கு முடிந்த அளவு பொறுக்கி வாருங்கள்" எனக்கூறினார்கள்.

ஸஹாபாக்கள் விறகு தேடலாயினர். ஆங்காங்கு காணப்பட்டு காய்ந்து போன சின்னஞ்சிறு செடிகளையும் சிறு சுள்ளிகளையும் சேகரித்து வந்து ஓரிடத்தில் குவித்தார்கள். அப்போது சமையலுக்கு போதுமானதைவிட மேலதிகமாகவும் விறகு இருந்தது.

அதனைப் பார்த்து விட்டு நபி (ஸல்) அவர்கள் "சிறிய சுள்ளிகள் இவ்வளவு பெரிய குவியலாக மாறியுள்ளது போலத்தான் சிறிய பாவங்கள் அனைத்தும் குவிந்து விடுகின்றன. எனவே சின்னஞ்சிறு பாவங்கள் விடயத்தில் மிகவும் எச்சரிக்கையோடு இருங்கள்!" என உபதேசித்தார்கள்.

தொகுப்பு:- ஜப்பார் எம்.ஜெனில், சாய்ந்தமருது-08.

## கவிதைப் போட்டி இல.306

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### பரிசுக்குரிய கவிதை

### எல்லாம் மனித எலும்பக்கா!

ஒரு குழியத் தோண்டத் தோண்ட
ஒருகடகம் எலும்பக்கா!- அதை
எடுக்கலாமோ? எறியலாமோ?
எல்லாம் மனித எலும்பக்கா!
அடுத்த குழியத் தோண்டத் தோண்ட
ஆறுகடகம் எலும்பக்கா!-அதை
எரிக்கலாமோ? புதைக்கலாமோ?
எல்லாம் நம்மவர் எலும்பக்கா?

கு. திருமால்-அமிர்தகழி-மட்டக்களப்பு.

### மாற்றம்

மண் தோண்டி
பொன் எடுக்கும்
காலம் மாறி
மண் தோண்டி
எலும்புக்கூடுகள்
எடுக்கும்
காலம் இது!

ராபியாஉம்மா-
இரத்தினபுரி.

### மண் உரிப்போம்

வெங்காயம் உரித்திடவே
தோலின்றி வேறில்லை!
இந்த நாட்டினிலே
மண் உரிப்போம்;
மண் உரிப்போம்!
மண்ணோடு மண்டையோடு
இதுவன்றி வேறில்லை.

திக்கபத்தன்-அல்வாய்.



### கிடைப்பவை...!

நிலத்தைக் கிண்டினால்
எலும்புக்கூடு!
குப்பையைக் கிளறினால்
மண்டையோடு!!

அ.சந்தியாகோ-கண்டி

### வேண்டாம்

ஆண்டவா! இந்த
இடத்திலாவது
வேண்டாமடா மனிதக் கூடு!

ச.மகாலிங்கம்-வெலிமடை.

### வீடுகள் அழிப்பு

தேடியும்
பலன் இல்லை!
புல்டோசர்
போட்டு எல்லாம்
இடித்து
முடித்தாச்சு!

நகுலேஸ்வரன்- கல்லடி
மட்டக்களப்பு

### எச்சங்கள்

அகழ்ந்து ஆய்ந்த
இனம்-இன்று,
எச்சங்களாய்
அகழப்படுகின்றது!

சிறீ ஹரி-வத்தளை.

### மூத்த இனம்!

மண்தோண்டி,
கல் தோண்டி,
கடல் தோண்டி,
பார்க்கிலும்;
எல்லாமே எலும்புகள்தான்!


த.சிவகுமார்- ஈச்சந்தீவு,
கிண்ணியா.

### சண்டை ஒடு

தோண்டிய இடமெல்லாம்
மண்டையோடு
தூண்டில் புழுக்களாய்
துடிக்கிறோம் கண்டதோடு

கவிஞர் 'திக்கவயல்'-அம்பாறை.

## கவிதைப் போட்டி இல.309



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 22.05.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.309
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை





அன்பின் முரசே

'டிசம்பர் பௌர்ணமி' எம்மை ஒரு அசத்தல் அசத்தி விட்டது. அந்த தொடர் நாடகத்தை எழுதிய ராஜேஸ்குமார் அவர்களுக்கும் எனது நன்றிகள். அது மட்டுமல்ல இடி அமீனின் கதையும் மிக மிக பரபரப்பாக தொடர்ந்து வருகின்றது. அதை வாசிக்கும் எமக்கும் ஓர் இடி இடிக்கிறது.

லக்ஷ்மி மது, குருதேனியா.

## மறைந்த பௌர்ணமி

எதிர்பாராத முடிவைத் தருவதில் வல்லவரான ராஜேஸ்குமார் 'டிசம்பர் பௌர்ணமி'யிலும் அப்படி ஒரு முடிவைத் தந்து என்னைப் போன்ற வாசகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டார்.

ஆ. சிதம்பரம், பதுளை.

## இன ஒற்றுமை

இன ஒற்றுமை, ஐக்கிய இலங்கை, சமாதானம்பற்றி தமிழ்பேசும் தரப்பு பேசக் கூடாது. அப்பேச்சு கேட்டுப் பழகிப் போன சிங்கள... தமிழ்த் தேசிய இனம் நோக்கி அரவணைப்பாக வரவேண்டும். அன்றுமுதல் இன்று வரை தமிழ்க் கட்சிகளும், சில தமிழ் பேசும் நிறுவனங்களும் வலிந்து வலிந்து இன ஐக்கியம் பேசும் பரிதாபக் காட்சிகளை பல முறை கண்டாயிற்று. ஒற்றுமைக்கு மாறாக தமிழ் பேசும் மக்கள் எப்போதுமே நடந்ததில்லை. இன ஒற்றுமை பற்றி வடக்கு-கிழக்கில் பாராளுமன்றவாதிகளாக இருந்த கம்யூனிஸ்டுகள் பேசிப் பேசி நம் காதுகளை புளிக்கவைத்தனர். இறுதியில் அவர்களது கட்சிகள்கூட தமிழ் பேசும் மக்களை நட்டாற்றில் விட்டன. எனவே எமக்குரிய தீர்வை நாம் கேட்போம். எத்தகைய தீர்வை தரவிருக்கிறார்கள் என்பதை ஆளும் தரப்பு உறுதியாகக் கூறட்டும்.

மீ. விஸ்வநாதன், திருமலை.

## அடுத்த நூற்றாண்டும் கடந்த பின்னர்

முரசுக்கு,

தமிழ் பேசும் தரப்பு சர்வதேச அரங்கில் எதிர்கொள்ளும் சவால்களையும், அவற்றை எப்படி முகம் கொடுப்பது என்பது பற்றியும் 'முரசு' இராஜதந்திரி பலமுறை விளக்கியுள்ளார். இவ் விளக்கங்கள் எம்மை விழிப்பூட்டுகின்றன. ஆனால் தமிழ்க் கட்சிகளை...? அது ஒருபோதும் நடக்காது. அரசியல் தீர்வை அடுத்த நூற்றாண்டு கடந்த பின்னர் வரும் தலைமுறை பார்த்துக் கொள்ளட்டும். இப்போது கிடைக்கும் சலுகைகளை பயன்படுத்தி பதவிகளை பெற்றுக் கொள்வோம் என்றே தமிழ்க் கட்சிகள் எண்ணுகின்றன. இப் போக்கில் போனால் அடுத்த நூற்றாண்டின் பாதியிலேயே தமிழ் மக்கள் முழுதாக காணாமல் போய்விடுவர். அது பற்றி என்ன கவலை?

எம். தயானந்தரூபன், மட்டக்களப்பு.

## ஆதரிக்கும் கட்சிகள்

முரசே! முன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வலியுறுத்துவதற்கு தமிழ்க் கட்சிகள் தயக்கம் காட்டுவது ஏன்? முக்கால் மட்டும் முணுமுணுப்பது ஏன்? நோக்கம் நமக்குப் புரிகிறது! மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு எதிராக பேசினால் அம்பலமாகிவிடுவோம் என்று பயப்படுகின்றனர். அதனால் அதனை எதிர்க்காமல், அதேசமயம் அரசியல் தீர்வை பின்தள்ளிப் போடுவதையும், இராணுவத் தீர்வு வெற்றி பெறுவதையும் தமிழ்க்கட்சிகள் ஆதரித்து வருகின்றன.

இ. சிவநாயகம், யாழ்ப்பாணம்.

அன்பின் முரசே,

வாரந்தோறும் உன் வரவை எதிர்பார்த்து நிற்கும் வாசகர்களில் நானும் ஒரு ஜீவன். நீ சுமந்து வந்த கிரைம் சக்ரவர்த்தி ராஜேஸ்குமாரின் கைவண்ணத்தில் உருவான 'டிசம்பர் பௌர்ணமி' னை நல்ல முறையில் முடிந்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். என்றும் சார்பிலும் நித்தியன்-சாந்தா தம்பதியினருக்கு வாழ்த்துக்கள். மறுபடியும் ராஜேஸ்குமார் வந்து எம்மை எல்லாம் கலக்குகிறாரே!

எப். ரிஸானா, ஹந்தஸ்ஸ.

## அவகாசம் தேவையில்லை

ஆட்சியில் எக்கட்சி வந்தாலும் தாமதத் தீர்வு தராது. சூரியன் திசை மாறி உதித்தாலும் பெரும்பான்மைக் கட்சிகள் மனம் திருந்தாது. திருந்தும் என நாம் கொடுக்கும் அவகாசத்தில் நம் இனம் வருந்தும் நிலையே உருவாகி வருகிறது. ஆகவே, இராஜதந்திரியார் கூறியதுபோல உடனடியாக சர்வதேச அழுத்தம் கொடுப்பதே அவசியம்.

பூ. மாதவன்,
யாழ்ப்பாணம்.

இனிய முரசே!

நீ தரும் தொடர்கள் ஏதும் சோடைப் போவதில்லை 'டிசம்பர் பௌர்ணமி' கடந்த 26 வாரங்களாக எம்மை உலுக்கிவிட்டது தொடர் தந்த முரசுக்கும், 'கிரைம் சக்கரவர்த்தி' ராஜேஸ்குமாருக்கும் எனது நன்றிகள்.

சுபாஷினி திலகரட்ணம்,
மட்டக்களப்பு.





கோ. பவானி, கந்தப்பளை.

## நம்புவதற்கு ஆட்கள் இல்லை

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஆளும் கட்சிக்கும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் இணக்கம் ஏற்படும் என்று நம்புவதற்கு இப்போதும் ஆட்கள் இருக்கிறார்களா? கிடையவே கிடையாது. மக்களை ஏமாற்றி, தமது இயலாமையை முடிமறைக்க நினைக்கும் கூட்டணி போன்ற கட்சிகள்தான் அவ்வாறு கூறி வருகின்றன. எதுவுமே நடக்காது என்று கூறாமல் மக்களை எதிர்பார்க்க வைத்து, அடுத்த தேர்தலிலும் வென்று பாராளுமன்றம் புகுவதே இவர்களது ஒரே அபிலாசை.

இ. சங்கரப்பிள்ளை, கொழும்பு-13.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266


## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடலாம். மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எமக்குப் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

# இந்தியத் தூதரகம் முன்னால் ஆர்ப்பாட்டம்?

## திட்டமிட்டு நடத்தப்பட்ட நாடகம்!

(நமது நிருபர்)

**கொ**ழும்பில் 10.05.99 அன்று இந்தியத் தூதரகம் முன்பாக மீனவர்கள் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

இப் போராட்டம் தொடர்பாக வெளியான செய்திகள் பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன.

இந்திய மீனவர்களது போராட்டத்திற்கு ஆதரவாக இப் போராட்டம் நடத்தப்பட்டதாக பத்திரிகைகளுக்கு கூறப்பட்டது. ஆனால் இந்தியாவிலுள்ள இலங்கை மீனவர்களை விடுவிக்குமாறுதான் பிரதான கோஷம் காணப்பட்டது.

அதுமட்டுமன்றி, இந்திய மீனவர்களது பிரதான கோரிக்கைகளை முடிமறைக்கும் விதமாகவும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

இந்திய மீனவர்களது பிரதான கோரிக்கையும், போராட்டமும்-இலங்கை படையினரால் இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவது தொடர்பானதாகவே இருந்தது.

ஆனால் இந்திய மீனவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறியவர்கள் அதுபற்றி பிரஸ்தாபிக்கவில்லை. இந்திய மீனவர்களுக்கெதிரான துப்பாக்கி சூடுகள் பற்றிய பிரச்சனையை பின்தள்ளிவிட்டு, கைது பிரச்சனையை மட்டுமே பெரிதுபடுத்திஇருந்தனர். இலங்கை மட்டும் மீனவர்களை கைது செய்யவில்லை இந்தியாவும்தான் கைது செய்கிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்தவே முயன்றுள்ளனர்.

இந்தியாவில் மீனவர்களது போராட்டத்தின் தாக்கத்தை குறைத்து, இரு நாட்டிலும் மீனவர் பிரச்சனை உண்டு என்று பிரச்சனையை சமப்படுத்திக் காண்பிக்க கச்சிதமாக அரங்கேற்றப்பட்ட நாடகமே கொழும்பு ஆர்ப்பாட்டமாகும்.

இந்திய மீனவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாக இருந்தால், அங்குள்ள மீனவர் சங்கங்களுக்கு இவர்கள் தகவல் தெரிவித்திருப்பர். அவ்வாறான தகவல் எதுவும் தமக்கு தெரியாது என்றும், இப் போராட்டம் பற்றி யாரும் தம்மோடு தொடர்பு கொள்ளவில்லை என்றும் இந்திய மீனவர்கள் சங்கத்தினர் கூறியுள்ளனர்.

### சகோதரத்துவம்

வடக்கு-கிழக்கு கடற்பரப்பில் பல மீனவர்கள் பலியாகியுள்ளனர். மீன்பிடிக்கும் உரிமையும் மறுக்கப்பட்டு பல்லாயிரம் தமிழ் பேசும் மீனவக் குடும்பங்கள் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளன.

இந்திய மீனவர்களுக்கு ஆதரவாக போராடுவதாகக் கூறும் இச் சங்கங்களின் நோக்கம் உண்மையானால், முதலில் இங்கு தமது சகோதரத்துவத்தைக் காண்பித்திருப்பார்கள். எனவே, இந்தியாவில் மீனவர்கள் போராட்டத்தைக் கண்டு அதிருப்தியுற்ற தென்னிலங்கை சக்திகள் சிலவே கொழும்பு ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் நின்றதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் மீனவர்கள் போராட்டத்தின் பயனாக இலங்கை அரசிடம் இந்தியா ஆட்சேபம் தெரிவிக்கு முன்பாக, இந்தியா மீதும் குற்றத்தை சுமத்தும் தந்திரமாகவும் கொழும்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்திய மீனவர்களது போராட்டம் இந்தியாவில் இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு உகந்த சூழலை மறுபடி ஏற்படுத்துமோ என்று சில சக்திகள் அஞ்சுகின்றன. எனவே, இவ்வாறான நாடகங்களை அவை தூண்டிவிடக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

மீனவர் போராட்டத்தில் கலந்து கொண்டோரில் பலர் மடிப்புக் கலையாத சட்டைகளுடன் 'டிப்டொப்' ஆசாமிகளாக காணப்பட்டனர். பெண்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

தூதரகங்கள் முன்பாக போராட்டம் நடத்த அவசரகால சட்டத்தின்கீழ் அனுமதி மறுக்கப்படுவதுண்டு. இப் போராட்டத்திற்கு மட்டும் அனுமதி கிடைத்தமையும் கேள்விக்குறியாக இருக்கிறது.

# மாணவர்கள் மீதும் பாயும் அவசரகால சட்டம்!

## யாழ் குடாநாட்டு மாணவர்கள் கொதிப்பு!

(நமது நிருபர்)

**யா**ழ் குடாநாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பாடசாலை மாணவன் ஒருவரும் கைதானார். பின்னர் பல்கலைக்கழக மாணவர் இருவரும் விடுதலையாகினர். யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவன் மட்டும் அவசரகாலசட்டத்தின்கீழ் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டார்.

இதனையடுத்து மாணவர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஒரே சந்தேகத்தில் கைதான மாணவர்களில் இருவர் விடுதலையாகியும், ஒருவரை மட்டும் தடுத்து வைப்பானேன்? என்று கேள்வி எழுப்பினர்.

### அதிருப்தி

மாணவர்கள் கைதாவது தொடர்பாக தமிழ்க் கட்சிகள் எதுவும் கவனம் செலுத்தவில்லை. குரல் எழுப்பவும் இல்லை. இதனால் தமிழ்க் கட்சிகள்மீதும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களும், ஏனைய பாடசாலை மாணவர்களும் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

எங்கள் பெற்றோரிடம்தான் அடுத்த முறை வாக்கு கேட்டு வரவேண்டும் என்பதை இக் கட்சிகள் மறந்துவிட்டன. மக்களது அன்றாடப் பிரச்சனைகளுக்கு பரிகாரம் செய்வதற்காக என்றுகூறிக்கொண்டுதான் கடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் போட்டியிட்டனர்.

இப்போது நிலைமை முன்னைவிட மோசமாகி வருகிறது. இனிமேல் பத்து வயது மாணவர்களும் அடையாள அட்டையுடன் நடமாடவேண்டிய நிலை தோன்றிவிட்டது. இந்த அன்றாட அவலங்களை நிறுத்த இக் கட்சிகள் சிறிதும் அக்கறை காட்டவில்லையே என்று யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் 'முரசு'க்கு தெரிவித்தனர்.

யாரையும் நம்பத் தயாராக இல்லை. நாமாக போராடி எமது பிரச்சனையை முன்னெடுத்தால்தான், அதில் குளிர்காய்வதற்கு தமிழ்க் கட்சிகள் ஓடிவருகின்றன. தமிழ்க் கட்சிகள் எம்மை கைவிட்டுவிட்டன என்றும் அவர்கள் கூறினார்கள்.

யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவன் சிவரூபன் கைதான விடயத்தில் தலையிடாதது மட்டுமல்ல, அவர் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற தகவலைக்கூட இரண்டு வாரங்களாகியும் பெற்றுத் தருவதற்கு தமிழ்க் கட்சிகளால் முடியவில்லை.

அவசரகால சட்டம் மாணவர்கள்மீதும் பாயத் தொடங்கியுள்ளது. கைது செய்யப்பட்டவர் எங்குள்ளார் என்பதைக்கூட தெரிவிக்கவில்லை என்று ஆசிரியர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### போராட்டங்கள்

இதற்கிடையே மாணவர் கைதானதை அடுத்து பல்கலைக் கழக மாணவர்கள் பெரும் போராட்டம் ஒன்றுக்கு தயாராகினர். பல்கலைக்கழக மாணவர் இருவரும் விடுதலையானதால் அப் போராட்டம் கைவிடப்பட்டது.

ஆனாலும் பாடசாலை மாணவர்கள் மாபெரும் பகிஷ்கரிப்பு போராட்டம் நடத்தியுள்ளனர். இப் போராட்டங்கள் மறுபடி யாழ் குடாநாட்டில் உணர்வு எழுச்சிகளை தோற்றுவித்து வருகின்றன.

தாமுண்டு தம் படிப்பு உண்டு என்று சில காலமாக ஒதுங்கியிருந்த யாழ் மாணவர்கள் தற்போது மறுபடி போராட்டங்களில் குதிக்கத் தொடங்கியுள்ளனர். இவற்றை அடக்க படையினர் முரட்டுத்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டால் நிலைமை மேலும் தீவிரமடையலாம் என்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இப் போராட்டங்களால் தமிழ்க் கட்சிகளும் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளன. மாணவர்கள் எழுச்சியே முன்னர் கூட்டணிக்கு ஆபத்தாக முடிந்தது. இப்போது தமது அரசியலுக்கும் உலை வைத்துவிடுமோ என்று அஞ்சுகின்றனராம்.

மாணவர்களது போராட்டங்களுக்கு பெற்றோர்களும் ஆதரவாக உள்ளனர். "கைதுகளை கண்டுகொள்ளாதிருந்தால் எமது பிள்ளைகளுக்கும் இது நேரலாம்!" என்று கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவர் ஒருவரது தந்தை எமது நிருபரிடம் தெரிவித்தார்.

# ராஜீவ் கொலை வழக்கு!

## ஒரு கோடி செலவு

**ரா**ஜீவ் காந்தி கொலை வழக்கில் மேன்முறையீடு செய்யப்பட்டமை தெரிந்ததே. ஏற்கனவே 26 பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருந்தது.

தற்போது நான்கு பேருக்கு மட்டுமே மரணதண்டனையும், மூன்று பேருக்கு மட்டும் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டவர்களான நளினி, பேரறிவாளன், இலங்கையர்களான முருகன், சாந்தன் ஆகியோருக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதில் நளினி, முருகன், சாந்தன் ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம் மூன்றாம் எதிரிகளாவர். பேரறிவாளன் 18வது எதிரியாவார்.

ரொபேட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் முறையே 9வது, 10வது, 16வது எதிரிகளாக குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

இவர்களில் ரொபேட் பயஸ், ஜெயக்குமார் இருவரும் இலங்கையர்கள். ரவிச்சந்திரன் தமிழ்நாடு மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்தவர். புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றவர்.

ராஜீவ் கொலை வழக்கில் இந்திய புலனாய்வுத்துறை சுமத்திய குற்றச்சாட்டுக்களில் உள்ள முரண்பாடுகள் முரசின் அரசியல் தொடரில் இடம்பெற்று வருவது அறிந்ததே. இக் கட்டத்தில் தீர்ப்பும் வெளியாகியுள்ளது.

முன்னர் தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஊகங்களின் பேரிலும், தன் மன உணர்வின் அடிப்படையிலுமே தீர்ப்புக் கூறியிருந்தார்.

வெளிநாடுகளில் உள்ள தமிழர்களிடம் நிதி திரட்டியே ராஜீவ்கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடப்பட்டது. இந்திய பண மதிப்பில் 50 இலட்சம் ரூபாய்கள் மேன்முறையீட்டு வழக்குக்கு மட்டும் தேவைப்பட்டது. நம் நாட்டு மதிப்பில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய். நிதி திரட்டும் குழுவுக்கு இந்திய பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் புரவலராக இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயுள் தண்டனை பெற்ற மூன்று பேரும் விரைவில் விடுதலையாகிவிடுவர். ஏற்கனவே எட்டு ஆண்டுகள் அவர்கள் சிறைவாசம் இருந்துள்ளனர்.

# ஈ.பி.டி.பி. சூடு—தீவுப்பகுதியில் புலிகள்

**யா**ழ் குடாநாட்டில் ஊர்காவற்றுறைப் பகுதியில் கரம்பனில் ஈ.பி.டி.பி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானார்.

08.05.99 அன்று ஊர்காவற்றுறை கரம்பனில் உள்ள ஈ.பி.டி.பி முகாமருகே சந்தேகத்துக்குரிய நடமாட்டங்கள் காணப்பட்டன. இதனையடுத்து ஈ.பி.டி.பியினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் அப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் தேடுதல் நடத்தியபோது, கூரைப் பகுதியில் ஒருவர் பதுங்கி இருப்பதாக வீட்டில் உள்ளவர்கள் கூறினார்களாம். கூரையை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது, அதற்குள் பதுங்கியிருந்த இளைஞர் பலியானார்.

சம்பவதினம் தமது வீட்டுக்கு மூன்று இளைஞர்கள் வந்ததாகவும், அவர்கள் கொச்சைத் தமிழில் பேசியதாகவும் குறிப்பிட்ட வீட்டு உரிமையாளர் கூறியுள்ளனர். பலியானவர் யார் என்பது இதுவரை இனம் காணப்படவில்லை.

எனினும் தீவுப் பகுதிகளில் புலிகளது நடமாட்டங்களும் சமீபகாலத்தில் அதிகரித்துள்ளதாக தெரிகிறது. எனவே இப்பகுதியில் தாக்குதல்கள் நடக்கலாம் என்னும் சந்தேகம் நிலவுகிறது.

# காயமடைந்தவர் இனம் கண்டார்

## பழிக்குப் பழி- அப்பாவி பலி

**வ**வுனியாவில் புளொட்- ரெலோ மோதல் தொடர்ந்து வருகிறது. இடையே சில மாதங்கள் மோதல் தணிந்திருந்தது போல வெளியே தெரிந்தது. ஆனால் இரு தரப்பும் தக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தன.

புளொட் நடத்திய மேதினக் கூட்ட பிரசுரத்தில் ரெலோ இயக்க வவுனியா மாவட்டப் பொறுப்பாளரின் பெயரும் இடம் பெற்றிருந்தது. இப் பொறுப்பாளர் முன்னர் புளொட் இயக்கத்தினரால் சுடப்பட்டு காயமடைந்தவராவார்.

ரெலோவிடம் அனுமதி கேட்காமல் அவர்களது பொறுப்பாளரது பெயரை புளொட் தமது பிரசுரத்தில் வெளியிட்டிருந்தது. இது மக்களிடம் நல்ல பெயர் சம்பாதிக்க புளொட் மேற்கொண்ட தந்திரம் என்று ரெலோவினர் கோபமுற்றனர்.

இந்நிலையில் 05.05.99 அன்று கரப்பன்காடு என்னுமிடத்தில் வைத்து வீ.குணரெட்ணம் (42) என்பவரும், எஸ்.கிருபாகரன் (19), என்பவரும் சுடப்பட்டனர். அதில் கிருபாகரன் காயத்தோடு தப்பிக் கொண்டார். குணரெட்ணம் பலியானார். குணரெட்ணம் புளொட்டின் வவுனியா லொறிச் சங்கப் பொறுப்பாளர். இவரை சுட்டது யார்? என்று சந்தேகங்கள் கிளப்பப்பட்டபோது, உண்மை தெரியவந்துள்ளது.

பிஸ்டலை பயன்படுத்தியே இருவரையும் சுட்டுள்ளனர். இரண்டு பேரையும் தீர்த்துக்கட்டுவதே திட்டம். அத் திட்டம் சற்றுப் பிசகியதால் தம்மைச் சுட்டவர்களை கிருபாகரன் இனம் கண்டு கொண்டார். ரெலோ உறுப்பினர்களே சுட்டதாகக் கூறியுள்ளார்.

இதனையடுத்து பழிக்குப் பழியாக யாராவது ஒருவரைத் தீர்த்துக்கட்ட புளொட் நினைத்தது.

குணரெட்ணம் சுட்டுக்கொல்லப்பட்ட அதே இடத்தில்- தோணிக்கல் சிவன் கோவிலடியில் கடைவைத்திருக்கும் அப்பாவியான ஒருவரைச் சுட்டுப் போட்டனர். இவர் ரெலோவுக்கு பெரிய நெருக்கமானவரும் அல்ல. ஆதரவாளராக இருந்தவர். பழிக்குப் பழி என்று வீரம் காட்ட அப்பாவிகளை கொல்வது நியாயமற்றது என்று மக்களும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

# கைமாறிய குண்டு மாட்டியது!

## குண்டு கொடுத்தவர் தப்பிச் சென்றார்

**ம**ட்டக்களப்பு-கதுருவெல எல்லைச் சோதனைச் சாவடி மாதுறு ஓயா சந்தியில் குண்டுடன் சென்ற ஒருவர் பிடிபட்டார்.

காத்தான்குடியிலிருந்து கொழும்பு சென்ற பஸ்ஸிலேயே இவரும் பயணம் செய்தார்.

உண்மையில் இவர் கொண்டு சென்ற பையில் குண்டு இருந்தது இவருக்கும் தெரியவில்லை. பரிசோதனையின்போது குண்டு கண்டு பிடிக்கப்பட்ட வேளையில் தான் தனது பைக்குள் குண்டு இருந்த சங்கதி அவருக்கும் தெரிந்தது.

மட்டக்களப்பு-செங்கலடியில் புளொட் இயக்கத்தினர் தமது வெளியீடுகளை விற்பதற்காக பஸ் வண்டியை வழி மறித்த போதுதான் அவ்விடத்திலே வைத்து, குண்டுடன் பிடிபட்ட அந்த வயோதிபரும் பஸ்ஸில் ஏறியிருக்கிறார். இவர் பஸ்ஸில் ஏறும்போது அவ்விடத்தில் நின்ற பெண்ணொருவர் ஒரு கடையில் கொடுத்து விடும்படி குறிப்பிட்ட அந்த பையை ஒப்படைத்தாராம்.

குறித்த அந்தப் பெண் மட்டக்களப்பு-பதுளை வீதியிலுள்ள புலிகளின் ஆளுகைப் பகுதியில் வசிப்பவர் என்று கூறப்படுகிறது.

சல்லடை போட்டுச் சோதிக்கப்படும் மாதுறு ஓயாச் சந்தியில் குண்டுப் பை மாட்டியது. பின்னர் விசாரித்தபோது எங்கு ஒப்படைக்குமாறு பை கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியவந்தது. விசாரணை வழியே மேலும் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து பதுளை-லுணுகலைத் தோட்டத்தில் இரு இளைஞர்கள் கைதாகியுள்ளனர்.

மாதுறு ஓயாச் சந்தி சோதனையைத் தவிர்த்தே கொண்டு செல்லும் திட்டத்துடன் தான் குண்டுப் பை கைமாறப்பட்டிருக்க வேண்டும். எனினும்,அதைக் கொண்டு சென்றவருக்கு இந்த நடைமுறை தெரியாமலேயே குண்டு மாட்டியிருக்கிறது என்று கருதப்படுகிறது.

இதேவேளை கண்டி, மாத்தளை, பதுளை பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டைகள் நடந்துள்ளன. வடக்கு-கிழக்கை சேர்ந்தோர் இருந்தால் உடனடியாக கைது செய்யப்படுகின்றனர்.

மலையகத்தில் அரசியல் தலையீடுகள் காரணமாக சோதனைகள் நடத்த முடியாது இருப்பதாக ஐ.தே.க எம்.பி திலக் கருணாரத்ன மிகக் கவலை தெரிவித்துள்ளார். இவர் முன்னர் ஹெல உறுமய அமைப்பில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை சிறுமிமீது பாலியல் வன்முறை

## காமக் கொடூர ஆசிரியர்! நடவடிக்கை எங்கே?

(நமது நிருபர்)

**தி**ருக்கோணமலைக் கல்வி வலயத்தின் நிருவாகத்துக்குட்பட்ட நிலா வெளி தமிழ் மகாவித்தியாலயத்தின் மாணவி அப்பாடசாலை ஆசிரியர் ஒருவரால் பாலியல் முறைகேட்டுக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் வெளியானதையடுத்து அந்தக் கிராமமே கொதித்துப் போயிருக்கிறது.

பன்னிரண்டு வயதுச் சிறுமியை பாடசாலை நேரத்தில் கழிவறைக்கு லோகேஸ்வரன் என்னும் ஆசிரியர் அழைத்துச் சென்றதைக் கண்ட மாணவர்கள் சிலர் பிறிதொரு பட்டதாரி ஆசிரியரிடம் உடனே தெரிவித்த போது, "தேவையற்ற அலுவல் பார்த்தால் சேட்டிபிக்கட்டைத் தந்து துரத்திவிடுவேன்!" என்று அந்த ஆசிரியர் மாணவர்களைப் பயமுறுத்தியதோடு, அந்தச் சம்பவத்தைத் தடுக்காமல் பேசாமல் இருந்து விட்டாராம். இந்தச் சம்பவங்களை நன்கு அறிந்த அதிபர் கூட அமைதியாகவே இருந்தாராம்.

மூன்று வாரங்கள் கழித்து விஷயம் ஊருக்குள் கசிந்தபோது ஆத்திரமடைந்த பொதுமக்கள் மே. 3ந் திகதி காலை பாடசாலையை சுற்றிவளைத்து ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். அதிபரும் முறை கேடாக நடந்த ஆசிரியரும் ஆர்ப்பாட்டக்காரர்களிடையே சிக்கிக் கொண்டனர். பட்டதாரி ஆசிரியர் அவரது தோட்டத்தில் வெங்காயக் குவியல்களுக்கிடையில் ஒளிந்திருந்து கும்பிட்ட நிலையில் இளைஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பாடசாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

வகையாகச் சிக்கிக்கொண்ட வாத்திமார்கள் ஒருவரையொருவர் காட்டிக்கொடுக்கத் தொடங்கிவிட்டனர். முறைகேடாக நடந்தவர் தனது கைப்பட ஒப்புதல் கடிதமொன்றையும் எழுதிக் கொடுத்துள்ளார்.

### முன்பும் ருசிகண்டவர்

இதற்கு முன்னர் பல சம்பவங்கள்-அந்தப் பாடசாலையில் நடந்த விடயங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. பெற்றோரின் ஏழ்மையையும் அறியாமையையும் சாதகமாக்கிக்கொண்டு தனக்கு வக்கிரங்களைத் தேடும் பாடசாலைப் பிஞ்சுகளை இந்த ஆசிரியர்கள் பல தடவைகள் பலியாக்கியுள்ளதாக உறுதியான தகவல்கள் வெளியாகியுள்ளன.

முறைகேடாக நடந்த 'ஆசிரியர்' நகரின் கல்லூரியொன்றில் சிற்றூழியராகக் கடமையாற்றிய நேரத்தில் அதிபரின் போலிக் கையெழுத்திட்டுச் சான்றிதழ் வழங்கிப் பிடிபட்டவர் என்றும், சுற்றுலா நேரத்தில் மாணவியொருத்தியுடன் தவறாக நடந்து கொள்ள முற்பட்ட வேளையில் அதிகாரியொருவரால் கண்டிக்கப்பட்டவர் என்றும் கல்வித்துறை சார்ந்தோர் கூறுகின்றனர்.

இம்முறைகேடான ஆசிரியருக்கு உதவிய பட்டதாரி ஆசிரியர் ஏற்கனவே ஒரு சம்பவத்தில் சிக்கி நீண்டகாலமாகத் தாபரிப்புச் செலுத்தி வருகிறார் என்றும் ஊர்மக்கள் 'முரசு' நிருபரிடம் தெரிவித்தனர்.

### மிருகத்தனமானவர்கள்

திணைக்கள அதிகாரி ஒருவருடன் முரசு தொடர்புகொண்டபோது- "இவர்கள் மிருகத்தனமானவர்கள்" என வருணித்த அவர், "நீதித்துறையும் இந்தச் சிறுமி விடயத்தில் அக்கறை செலுத்தியுள்ளது" என்று தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர் இடைநிறுத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும் இதுவரை அவ்வாறான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று 'முரசு'க்கு தெரியவந்துள்ளது. இவ்விடயம் புலிகளது கவனத்திற்குச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# அகதி நிவாரண இடை நிறுத்தம்

## அதிகாரிகளும் உடந்தை

(மட்டக்களப்பு நிருபர்)

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணம் கடந்த 5 மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்கள் மூலமாக கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரணம் வழங்கியமைக்காகக் கொடுக்க வேண்டிய கோடி ரூபாய்க்கு மேல் கொடுப்பனவுகள் கிடைக்காததால் கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரண விநியோகத்தை நிறுத்தியுள்ளன.

இதனால் 'அகதி' மக்கள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்தகால வன்செயல்களாலும் தொடர்ந்து செல்லும் போரினாலும் மட்டக்களப்பு மாவட்டமும் கணிசமான பாதிப்பைக் கண்டிருக்கிறது. இருந்தபோதிலும், மட்டக்களப்பு புனர்வாழ்வு, புனரமைப்புக் காரியாலயத்தின் அசமந்தப் போக்குக் காரணமாகப் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மக்கள் மேலும் மேலும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்று பல பிரதேச செயலக வட்டாரங்கள் கூறுகின்றன.

நிதி வழங்கப்படாததால் நிவாரண விநியோகம் நிறுத்தப்பட்டமைக்கு தாம் பொறுப்பல்ல; அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களமே பொறுப்பென்று மட்டக்களப்பு அரசாங்க அதிபரும், மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புக் காரியாலயமும் நழுவிவிட்டது, பொறுப்பற்ற போக்கு என்று பலரும் விசனம் தெரிவிக்கிறார்கள்.

இதற்கு முன்னரும் சில தடவைகள் பலமாத இழுபறி நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரணத்தை இடை நிறுத்திய போதுதான் அவற்றுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனை பல மாதங்களும் நிவாரணம் நிறுத்தப்பட்டபோது அரச அதிபர் தொடக்கம் ஏனைய அதிகாரிகள் வரை ஏன் கவனமெடுக்கவில்லை என்பது அவர்களது அசமந்தப் போக்கைக் காட்டுகிறது.

## தொலைத் தொடர்பகங்களில் அதிக கட்டணம்!

# மன்னார் மக்கள் பெரும் கவலை!

(மன்னார் நிருபர்)

மன்னார் நகரில் இயங்கும் பல தொலைத் தொடர்பு நிறுவனங்கள் அங்கு வரும் வாடிக்கையாளர்களிடம் அதிக பணம் கறக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

சில தொலைத்தொடர்பு நிலையங்களில் தொலைபேசி அழைப்புப் பெற ஒரு நிமிடத்திற்கு 20 ரூபாவும், வேறு சில நிலையங்களில் 10 ரூபாவும் அறவிடுகின்றன. உள்வரும் அழைப்புக்குக்கூட ஒரு நிமிடத்திற்கு 4 ரூபா முதல் 6 ரூபா வரை அறவிடப்படுகின்றது.

அத்துடன் ஒரு பக்கம் 'பெக்ஸ்' பண்ணுவதற்கு 40 ரூபா முதல் 60 ரூபா வரை அறிவிடப்படுகின்றது. போட்டோப் பிரதிகளுக்கும் கடுமையான கட்டணம் அறவிடப்படுகின்றது.

கடந்த தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ரெலிகொம் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலவச சலுகைத் தொலைபேசி அழைப்புக்கள் நகரிலுள்ள ஒரு சில நிறுவனங்களில் மட்டுமே வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இச்சலுகையை மக்களுக்கு வழங்காமல் சில தொடர்பகங்கள் இயங்கியதுடன், அநேகமான நிலையங்கள் அன்றைய தினம் நேரகாலத்துடன் இழுத்து மூடப்பட்டு விட்டன.

நாட்டின் ஏனைய பாகங்களில்- குறிப்பாக வவுனியாவில் ஒரு நிமிட அழைப்புக்கு 5 ரூபா மட்டுமே அறவிடப்படுகின்றது. அத்துடன் 'பெக்ஸ்' கட்டணம் கூட 20 ரூபா முதல் 30 ரூபா வரையாகும்.

நெரிசலான நேரத்தில் ஒரு நிமிட அழைப்புக்காக ஸ்ரீலங்கா ரெலிகொம் பாவனையாளர்களிடமிருந்து 1 ரூபா 65 சதம் மாத்திரமே அறவிடுகின்றது. விடுமுறை தினங்களில் இக்கட்டணம் 55 சதமாக குறைகின்றது.

அப்படியிருக்க மன்னாரில் மட்டும் தாம் விரும்பும் கட்டணத்தை அறவிடுவது எந்த வகையிலும் நியாயமற்ற ஒன்றாகும்.

தற்போது வெளிநாட்டுக்கான நேரடி ஐ.டீ.டீ. வசதி செய்து கொடுக்கப்பட்டும் கூட வெளிநாட்டு அழைப்புகளுக்கும் அதிக கட்டணம் கறந்தெடுக்கப்படுகின்றது.

# புலியை விரட்டிய புலிகள்!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றான கொக்குப் படையான் கிராமத்தில் 09 வருடங்களுக்குப் பின் சுமார் 50 தமிழ்க்குடும்பங்கள் குடியேறியுள்ளன.

வில்பத்துக் காட்டின் ஓரத்தில் அமைந்திருக்கும் இக்கிராமம் காடடர்ந்து காணப்படுவதால் இரவு, பகலாக பல்வேறு வன விலங்குகள் மக்களை அச்சுறுத்திவருகின்றன.

யானை, புலி (சிறுத்தை), கரடி என்பன தினமும் கிராமங்களுக்குள் அத்துமீறி நுழைகின்றன. இப்பகுதியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாதளவுக்கு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

அண்மையில் இரவு வேளை இங்கு வந்த யானை ஒன்று குடும்பமொன்று தங்கியிருந்த ஓலை வீட்டின் மேற்கூரையை பிய்த்துக் கொண்டு நெல்லை கபளீகரம் செய்து சென்றது.

மறுநாள் யானையை விரட்ட புலிகள் துப்பாக்கியுடன் காத்திருந்த போதும் அது அங்கு வரவில்லை.

காட்டுப் புலிகள் கிராமத்தில் வளர்க்கும் ஆடு, மாடு என்பவற்றை அடித்துக் கொன்று விடுகின்றன. இதனையும் விரட்டும் பணியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு மக்களுக்கு உதவி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

## அகதிகளுக்கு நிவாரணம் கிட்டவில்லை!

# கொல்லப்பட்டவர்களுக்கு இழப்பீடு இல்லை!

(மட்டக்களப்பு நிருபர்)

கடந்த கால வன்செயல்களாலும் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தினாலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கணிசமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

இருந்த போதிலும் மட்டக்களப்பு புனர் வாழ்வு, புனரமைப்பு கிளையின் அசமந்தப் போக்குக்காரணமாக பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மக்கள் மேலும் மேலும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்று பல பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அகதிகளுக்கான உலர் உணவு நிவாரண விநியோகத்திற்காக கடந்த 5 மாதங்களாக எந்தவொரு நிதியும் கொடுக்கப்படாததால் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நிதி நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளன. அகதி மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளார்கள்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு 5 மாதங்களாக அவற்றுக்குக் கிடைக்க வேண்டிய நிதி வழங்கப்படாததால் அவை தொடர்ந்து நிவாரண விநியோகம் செய்ய மறுத்து வருகின்றன.

புனர் வாழ்வு கிடைக்கக்கூடிய நிதி ஒதுக்கீடுகள் மட்டக்களப்புப் புனர்வாழ்வுக் கிளைக்குக் கிடைத்தும் அந்த நிதி விடுவிக்கப்படாததால் பிரதேச செயலகங்கள் பல பிரச்சனைகளுக்குள்ளாகியுள்ளன.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இழப்பீடு வழங்க வேண்டிய கொல்லப்பட்டவர்களின் ஆயிரக்கணக்கான கோவைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. உறவினர்கள் இழப்பீட்டை எதிர்பார்த்து தினமும் அலைகிறார்கள். இதே கதியில்தான் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு காயங்களுக்குள்ளானவர்களின் இழப்பீடும் உள்ளன.

இடம் பெயர்ந்தவர்களுக்கான வீடமைப்பு மானியக் கொடுப்பனவும் முதல் கட்ட நிதி வழங்கப்பட்டதுடன் இடைநடுவில் நிறுத்தப்பட்டுவிட்டன. இதனால் கட்டப்பட்ட வீடுகள் அரை குறையாகச் சிதைந்து வருகின்றன. பல நூற்றுக்கணக்கான வீடமைப்புப் பணிகள் கவனிப்பின்றி விடப்பட்டுள்ளன.

# ஊதியத்தில் பாரபட்சம்

(மன்னார் நிருபர்)

புத்தளம் வலயப் பகுதிப் பாடசாலைகளில் கடமையாற்றும் இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் பலருக்கு நிரந்தர நியமனச் சம்பளம், மற்றும் சம்பள நிலுவை என்பன வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

1995 ஆம் ஆண்டு நிரந்தர நியமனம் கிடைத்த பலருக்கு 1998 டிசம்பர் மாதமே புதிய சம்பளம் வழங்கப்பட்டது. எனினும் சம்பள நிலுவை ஒருசிலருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் சிலருக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

அதே வேளை ஜனசவிய ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மாதம் 100 ரூபா அவர்களது சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டது. இத்தொகையும் இதுவரை சிலருக்கு மீளளிப்புச்செய்யப்படவில்லை.

இவற்றைப் பெறுவதில் பல ஆசிரியர்கள் கல்விக்காரியாலயம் ஏறி இறங்குவதிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனர்.


## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

* தொய்வு * இழுப்பு
* இளைப்பு * மாய்ச்சல்
* மூச்சுத்தட்டல் * சளி
* இருமல் * கண் கடி
* மூக்கடைப்பு * பீனிசம்
* தலைவலி * தும்மல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான், சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்.

டாக்டர் சுராஜ் சோமசுந்தரம்

அஸ்மா சிகிச்சை நிபுணர்

Ph.DH(Ind); M.B.B.SCH (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)

25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை
மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்)

தொலைபேசி 074-201582

தினமும் மாலையில் 4 மணி முதல் 7 மணி வரை

தூர மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும். சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பதிவு செய்து வரவும்.



## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தில் எண்ணங்களை எண்ணிய வாறு மின்சார வேகத்தில் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வெற்றிபெற்றவர்கள் எத்தனை எத்தனையோ. இனி உங்கள் குறை என்ன. கணவன் மனைவி பிணக்கா. காதல் தோல்வியா பிரயாணத் தடையா. இன்னும் அனேக குறைகளுக்கு உங்கள் பிறப்பு திகதியுடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு தொலைபேசி அடிகள் இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே ஏற்றுக் கொள்ளப்படும். தேவை எனில் உலக மாந்திரிக ஜோதிட சக்கரவர்த்தி

P. K. Samy (J. D. G. A. N) J.P
162, Kotahena Street, May Feild Road,
Clombo 13.
Tel: 342463, 344831, 431137
Fax: 0094 1 342464


# விளம்பரப் பகுதி


## கலை அலங்கார வகுப்புக்கள்

1. மணப்பெண் அலங்காரம்
2. சிகை அலங்காரம்


2 மாத கற்கை நெறி சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம் 01.06.1999

தொடர்பு:
18/1A, WIJAYASEKARA ROAD,
DEHIWALA.
T.P. 731074


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 ❖ 02 ❖ 1940

மறைவு 23 ❖ 04 ❖ 1998




சுப்பையா தங்கேஸ்வரன்

**நயினாதீவு-01, திதி:துவாதசி 12.05.1999**

"தந்தை மகற்காற்றும் உதவி-அவனியில் முந்தி இருப்பச் செயல்"
எங்கள் உள்ளத்தின் ஒளிவிளக்கே!
நீங்கள் அன்பின் திருவுருவாய்- பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் பாசறையாய்- உண்மையின் உறைவிடமாய்
நேர்மையின் நிறைகுடமாய் திகழ்ந்து- எம்மைப் பெற்று வளர்த்து நல்வழி நடத்திய எங்கள் அன்பு அப்பா! நீங்கள் மறைந்து
ஆண்டு ஒன்று ஆகினும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சில் என்றும் நீங்காத நினைவுகளாக
கனவிலும் நனவிலும் நிலைத்து நிற்கும் அப்பா!
உங்கள் பாதகமலங்களுக்கு எங்கள் சிரம் தாழ்த்தி கரம்கூப்பி வணங்குகின்ற இன்றைய தினத்திலே உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறை சக்தியை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன், பேத்தி, பெறாமக்கள், சகோதர சகோதரியர், மைத்துன மைத்துனியர்.

தகவல்: அன்பு மனைவி த. அன்னபூரணி.



## 2வது பிறந்தநாள் வாழ்த்து

**துவாஹரணி**
(துயானா)
04.05.1999

தயாபரன்-குகநாயகி தம்பதியின் அன்புப் புதல்வி **துவாஹரணி** 04.05.1999 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, அன்புத் தாத்தாமார், பாட்டிமார், சித்தப்பாமார், சின்னம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், நோர்வே மாமா, மாமி, அண்ணன்மார், அக்காமார், சுவிஸ் சித்தப்பா, சின்னம்மா, மற்றும் உற்றார், உறவினர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்கள்.

தகவல்: தயா (சுவிற்ஸர்லாந்து)

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி நிவேதிகா கேதீஸ்வரன் (12.05.1999)**

மன்னாரைச் சேர்ந்த கேதீஸ்வரன்-கலையரசி தம்பதியினரின் செல்வப் புதல்வி நிவேதிகா தனது முதலாவது பிறந்தநாளை 12.05.99ல் CANADA TORONTOவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், அன்ரா, சித்தி, சித்தப்பாமார், அண்ணாமார், அக்கா, தங்கை, மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் நிவிக்குட்டியை எல்லாம் வல்ல விநாயகர் துணையுடன் பல்கலையும் பெற்று பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: பாலசுப்பிரமணியம் (மாமா)


## BRIGHT BOOK CENTRE (PVT) LTD

தபால் மூலமான பாடநெறிகள்



**SPOKEN ENGLISH & SINHALA**

மூன்றேமாத காலத்தில் ஆங்கிலம்/சிங்களம் ஆகியவற்றை பேச, எழுத, வாசிக்க கற்றுக் கொள்ள முடியும். ஆயிரக்கணக்கான மாணவர்கள் கடந்த பத்து வருடங்களாக கற்று பயன் பெற்றுள்ளனர்.



**METHOD OF COMPUTERISED BOOK KEEPING & ACCOUNTANCY (M.C.B.A)**

கடைக் கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு பேணுவது என்பதும், E.P.F, E.T.F, G.S.T, சம்பளம் தயாரிப்பது, சரக்கிருப்பு கட்டுப்பாடு ஆகிய அனைத்தும் கணனியின் உதவியுடன் தயாரிக்கும் முறை என்பன கற்றுத் தரப்படும் இப்பாட நெறியை மூன்றே மாதகாலத்தில் கற்றுத் தேறமுடியும்.

**BUSINESS ENGLISH**



வியாபார கடிதங்கள், வேலைக் கான விண்ணப்பங்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது என்பதும் நேர்முகத் தேர்வு, சம்பாஷனை ஆகியவற்றுடன் கூடிய பாடத்திட்டம் மேலதிக விபரங்களுக்கு விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.

APPLICATION FORM
NAME :....................
ADDRESS :....................
....................
விரும்பும் பாடநெறி :....................

BRIGHT FUTURE IN YOUR HAND

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX P. O. BOX NO: 162, COLOMBO - 11. TELE: 434770, 074-718592


## 90ம் நாள் நினைவஞ்சலி

08.05.1999

மலர்வு 06 * 10 * 1978



உதிர்வு 08 * 02 * 1999

**அமரர் செல்வன் பேரின்பநாதன் ரமேஷ் கண்ணா (ரமேஷ்)**

1ம் வட்டாரம்- புங்குடுதீவு

தத்தித் தவழ்ந்து வரத் தாவி யெடுத்தாசையுடன் பார்த்தோம் சின்னக் கண்ணா என்ற நாமம் ரமேஷ் கண்ணாவுக்கே அருமையாய் அமைந்ததென்று அயலார் போற்ற முடிசூடா திலகமாய் கல்வியில் திகழ்கிறாய் என்று உற்றார் சொல்ல உன் கண்ணாடி முகத்தை காண இருந்த வேளையில் எங்களை, எல்லாம் ஏமாற்றி இறையுடன் சேர்ந்தோ 90 நாள் ஆகிவிட்டதே இந்நேரம் ரமேஷ் உன் நாமம் தன்னை ஏற்றிப் போற்றி நினைவு கூருவோம்.

துயருறும் அன்பு அத்தான், அக்கா, க.கருணாநிதி,
மஞ்சுளா, சஜிதன்,
பிரான்ஸ், பாரீஸ்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பதிலடிக்கு தயாராகும் கடற்புலிகள்

**மே** முதலாம் திகதி முல்லைத்தீவு கடற்பரப்பில் நடந்த சமரில் கடற்புலிகளுக்கு பாரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வியூகங்களில் கடற்புலிகள் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

திருமலையில் மே 1இல் இருந்து தொடர் அணியாக சென்ற கடற்புலிப் படகுகள்மீது கடற்படையினர் தாக்குதல் தொடுத்தனர்.

இதனையடுத்து முல்லையில் உள்ள கடற்புலித் தளத்துக்கு தகவல் அனுப்பியபடி கடற்புலிகள் கடற்படையினருடன் மோதலை ஆரம்பித்தனர்.

முல்லைத் தளத்தில் இருந்து கடற்புலிகளது தாக்குதல் பிரிவு தளபதி தர்சன் (முத்துக்குமார் கலைஞானராஜா) தலைமையில் கடற்புலிப் படகுகள் விரைந்தன.

சுமார் நான்கு மணிநேரம் கடற்பரப்பில் கடும் சமர் மூண்டது. கடற்புலிப் படகுகளை நோக்கி கடற்படையின் பீரங்கிப் படகுகள் சரமாரியாக பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தன.

கடற்புலிகளால் கடற்படையினரின் சண்டைப் படகுகளை நெருங்க முடியவில்லை. கடற்படையினரின் கையே மேலோங்கிக் கொண்டிருந்தது.

கடற்படை பீரங்கிப் படகின் கடும் தாக்குதலில் கடற்புலிப் படகு ஒன்று தகர்ந்தது. கடற்புலி தளபதி தர்சன் உட்பட மேலும் சில புலிகள் அப்படகில் இருந்தனர். படகு தகர்ந்ததில் அவர்களும் பலியாகினர்.

வேறு கடற்புலிப் படகுகளில் இருந்தோரும் பலியாகியும், காயமடைந்தும் கடற் புலித் தரப்பு பலவீனமடைந்தது. இதனையடுத்து சண்டையை நிறுத்தி திரும்புமாறு கடற்புலிகளுக்கு தளத்தில் இருந்து உத்தரவு கிடைத்தது.

சண்டையில் கடற்புலித் தளபதி தர்சன் உட்பட 11 பேர் பலியானார்கள். இச் சண்டையில் பெண் கடற்புலிகளும் ஈடுபட்டனர்.

பலியானவர்கள் விபரங்கள் வருமாறு: லெப்டினன்ட் கேணல் தர்சன் (முத்துக்குமார் கலைஞானராஜா) யாழ்ப்பாணம். மேஜர் குணசீலன் (மார்க்கண்டு கந்தசாமி) மட்டக்களப்பு, மேஜர் இமய காந்தன் (சண்முகம் சத்தியசீலன்) முல்லைத்தீவு. கப்டன் பரிதி சின்னத்தம்பி ஜெகதீஸ்வரன் (யாழ்ப்பாணம்), கப்டன் ஈழமைந்தன் (நவரட்னம் நவநீதன்) கிளிநொச்சி, லெப்டினன்ட் புதியவன் (நித்தியானந்தன் உதயகுமாரன்) யாழ்ப்பாணம். லெப்டினன்ட் வான்கவி (குமாரசாமி செல்வரஜினி) யாழ்ப்பாணம், இரண்டாம் லெப்டினன்ட் தமிழளவள் (சுப்பிரமணியம் விக்னேஸ்வரி) யாழ்ப்பாணம், இரண்டாம் லெப்டினன்ட் எழில் வள்ளி (அற்புதலிங்கம் சுசிர்தா) யாழ்ப்பாணம், இரண்டாம் லெப்டினன்ட் ஈழவன், இரண்டாம் லெப்டினன்ட் றொனால்ட், வீரவேங்கை மலையரசி ஆகியோரே பலியான கடற்புலிகளாவர்.

கடற் கரும்புலிகள் எவரும் இச் சமரில் பங்கேற்கவில்லை.

நன்கு திட்டமிடப்பட்ட சண்டையாக இருந்தால் கடற்கரும் புலிகளும் பங்கேற்றிருப்பார்கள். திடீர் சமர் என்பதால் கடற்புலிகள் மட்டுமே பங்கேற்றுள்ளனர்.

இச் சமரில் கடற்படையினரே வெற்றி பெற்றுள்ளனர். தமது தரப்பில் இழப்பு எதுவுமின்றி கடற்புலிகளுக்கு பாரிய இழப்பை கொடுத்திருக்கின்றனர். கடற்புலிகளது தளபதி ஒருவர் பலியானதும் பாரிய இழப்புத்தான்.

தமது இழப்புகளுக்கு தருணம் பார்த்து பதிலடி கொடுப்பது கடற்புலிகளது பாணியாகும். சில மாதங்களுக்கு முன்பும் கடற்படையினர் தொடர்ச்சியான தாக்குதல்களை தொடுத்தனர். கடற்புலிகள் தரப்பில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.

அதனையடுத்து சிறுத்தை படையணியின் கடற் பிரிவு கிளாலியில் அதிரடியான கடற் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டது.

எனவே கடற்பரப்பில் சமர்கள் விரிவதற்கான அறிகுறி தெரிகிறது. கடற்படையினருக்கும் கடற்புலிகள் பதிலடியில் ஈடுபடுவார்கள் என்பது தெரியும்.

கடலில் எங்கே, எந்த ரூபத்தில் பொறி இருக்கப்போகிறது என்பதை முன்கூட்டியே அறிவது கடினம்.

எனினும், கடற்படையினர் சமீப காலத்தில் கடற்புலிகளது பொறிகளில் சிக்காது சாதுரியமாகவே செயற்பட்டு வருகின்றனர். அதே சமயம் கடற்புலிகளுக்கு எதிரான பல தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர்.

அதேசமயம் சமீபகாலத்தில் கடற்புலிகளது தாக்குதல்கள் குறைந்துள்ளன. போக்குவரத்து, விநியோகம், களஞ்சியப்படுத்தல் போன்றவற்றிலேயே கடற்புலிகள் சமீப காலத்தில் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றனர்.

—●●—

# சாரதிகைதும் அதிகாரிமீது வலையும்



**வ**வுனியாவில் சிறீலங்கா செஞ்சிலுவைச் சங்க அதிகாரியான கிஷோர் கைது செய்யப்பட்டு, இதனை எழுதும்வரை விடுதலையாகவில்லை.

சிறீலங்கா செஞ்சிலுவைச் சங்க வடபகுதி இணைப்பாளரான கிஷோர் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவர்.

மனித உரிமைப் பிரச்சனைகள் தொடர்பாக கிஷோர் சற்று உரத்துப் பேசி வந்ததை அடுத்து, படையினரின் அதிருப்திகளையும் சம்பாதித்துக் கொண்டார்.

மனித உரிமைகள் பற்றியோ, நியாயமான பிரச்சனைகள் பற்றியோ தமிழர் ஒருவர் பேசுவாராயின் அவரை 'புலி' என்ற கோணத்தில் நோக்குவது பொது விதிபோலாகிவிட்டது.

அந்த விதி கிஷோரையும்விட்டு வைக்கவில்லை. 'புலி' முத்திரை குத்தும் முயற்சிகள் நடந்து வந்தன.

ஐ.தே.கட்சி. பா. உ டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா மடுவுக்கு சென்று வந்தபோது, அவருக்கு கிஷோரும் உதவியிருந்தார். அதனையடுத்து கிஷோரின் சாரதியை புலிகளுடன் தொடர்பு என்று கூறி கைதுசெய்து நீண்ட காலம் தடுத்து வைத்தனர். தற்போது விடுதலையாகிவிட்டார்.

இந்த விடயத்தில் தனது சாரதி நிரபராதி என்று கிஷோர் துணிந்து வாதாடியதும் பேட்டிகள் கொடுத்ததும்கூட படையினருக்கு திருப்தியான விஷயமல்ல.

எனினும் கிஷோர் படையினருக்கும் தேவையான ஒருவராகவே இருந்தார். சமரில் பலியாகும் படையினரின் உடல்களை புலிகளிடம் இருந்து பெற்று வருபவரும் அவர்தான். அதே போல படையினர் ஒப்படைக்கும் புலிகளது சடலங்களை புலிகளிடம் சேர்ப்பிப்பதும் அவர்தான்.

இந்தப் பணிகளில் ஈடுபடும் ஒருவருக்கு படையினருடனும், புலிகளுடனும் நல்ல தொடர்பு இருந்தேயாகும். இருக்கவும் வேண்டும்.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரி என்ற கோதாவில் புலிகளுடன் அவர் தொடர்பு கொள்வது சட்டபூர்மாக அங்கீகரிக்கப்பட்ட விடயம்.

புலிகளுடன் மட்டுமல்ல, தமிழ்க் கட்சிகளுடனும் கிஷோருக்கு பரிச்சயம் அதிகம். கைது செய்யப்படுவதற்கு சில தினங்கள் முன்பாகத்தான் கொழும்பு சென்று ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை கிஷோர் சந்தித்தார்.

கிஷோர் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர். நகரசபைத் தேர்தலிலும் ஐ.தே.கட்சி சார்பாக முன்பு ஒருதடவை போட்டியிட்டவர்.

டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனாவுக்கு கிஷோர் உதவியதை கிஷோரின் அரசியல் பின்னணியோடும் முடிச்சுப்போட்டுப் பார்த்ததாகத் தெரிகிறது.

ஆனால் வவுனியா மக்களிடம் கிஷோருக்கு அபாரமான செல்வாக்கு. 'ஜயசிக்குறுய்' ஆரம்பமான நாட்களில் ஷெல் வீச்சுக்களால் காயமடைந்த பலரை தன் உயிரையும் பொருட்படுத்தாது சென்று மீட்டுவந்து வவுனியா மருத்துவமனையில் சேர்ப்பித்திருந்தார்.

புளொட் எம்.பி. வசந்தன் கிளைமோர் தாக்குதலில் சிக்கியபோது, முதன்முதலில் அந்த இடத்திற்கு விரைந்து, வேன் கதவைத் திறந்து உள்ளே இருந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு சென்றதும் கிஷோர்தான்.

வவுனியாவில் கைதுகளின்போது பொலிசாருடனும், படையினருடனும் அடிக்கடி தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கைதானோரின் உறவினர்களுக்கு கூறுவதும் அவர்தான்.

மொத்தத்தில் கிஷோர் சிறந்த மனிதாபிமானி, சமூக சேவையாளர். ஆனால் தற்போது இவரைக் கைது செய்து 'புலி' முத்திரை குத்தியதும் தமிழ்க் கட்சிகள் உட்பட மனித உரிமை அமைப்புக்கள்கூட கைவிரித்துள்ளன.

சிறீலங்கா செஞ்சிலுவைச் சங்கமும் அநியாயம் செய்திருக்கிறது. விசாரணை முடிவடையும்வரை இணைப்பாளர் பதவியில் இருந்து இடை நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளது.

அநியாயக் கைதுக்கு எதிராக குரல் கொடுத்து போராட முன்வராதது மட்டுமன்றி தனது நேர்மையான அதிகாரி ஒரு வரையும் சங்கம் கைவிட்டுள்ளது.

இதே ஒரு சிங்கள அதிகாரியாக இருந்தால் போராட்டம், வேலை நிறுத்தம் என்று பல்வேறு நடவடிக்கைகளில் குதித்திருப்பர்.

ஒரு தமிழர்மீது 'புலி' என்று முத்திரை குத்தப்பட்டால், அப்படி இருக்குமோ என்றுதான் சிங்கள அதிகாரிகள் யோசிக்கின்றனர். எனவே விசாரணைகளுக்கு ஒத்துழைப்பது என்ற பெயரில் தமது சக அதிகாரியை கைவிட்டு விடுகின்றனர்.

இப்படித்தான் இந்து சமய கலாச்சார திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெய்வ நாயகம்பிள்ளை கைதானார். ஜனாதிபதியை தீர்த்துக் கட்ட திட்டம் தீட்டியதாக செய்திகள் வெளியாகின.

அக் குற்றச்சாட்டு பொருத்தமற்றது என்று நாம் தெளிவாக சுட்டிக்காட்டியிருந்தோம்.

பல மாதங்களாக தெய்வநாயகம்பிள்ளை தடுத்து வைக்கப்பட்டிருந்தார். தாக்கப்பட்டுமிருந்தார். இத்தனைக்கும் 'தொல்லை தவிர்ப்புக் குழு' தலைவராக இருக்கும் அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடிதான் இந்துகலாசார திணைக்களத்திற்கும் பொறுப்பு.

அப்படியிருந்தும் தனது பொறுப்பின் கீழ் பணிபுரியும் ஒரு நிரபராதியை அந்த அமைச்சரால்கூட, விடுவிக்க முடியவில்லை. முடிய வில்லை என்பதைவிட முயலவில்லை என்பதே சரியானது.

தொல்லைத் தவிர்ப்புக் குழு சார்பாக கேட்டபோது, ஆதாரத்துடன் கைதானதாக பதில் கூறப்பட்டது. தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு அது போதும்.

பின்னர் தெய்வநாயகம்பிள்ளை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த பின்பே விடுதலையானார். அப்படியானால் ஆதாரம் எங்கே போனது? அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி நினைத்தால் இக் கைது தொடர்பாக, நிரபராதி ஒருவர் தேவையற்ற உடல், உள வதைகளுக்கு உள்ளானதற்காக உரிய நடவடிக்கை எடுத்திருக்க முடியும். செய்யவில்லை.

இப்போது கிஷோர் விவகாரத்திலும் சிறீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் இனரீதியான கண்ணோட்டத்துடன்தான் நடந்து கொள்கிறது.

கிஷோர்மீதான விசாரணை முடிந்ததாகக் கூறி பொலிசாரிடம் படையினர் கையளித்துள்ளனர். கைது செய்தவர்களே விசாரணை முடிந்தது என்று கூறும்போது, பொலிசார் எதனை கிளறப் போகிறார்கள்?

கிஷோரின் சாரதி ஈஸ்வரன் என்பவர் கைதானதை அடுத்தே கிஷோரையும் சேர்த்து அமுக்க முயற்சிகள் நடந்தன.

கிஷோரின் சாரதிகளில் ஒருவரான ஈஸ்வரனுக்கும் புலிகளுக்கும் இடையே தொடர்பு இருந்தது உண்மை. ஆனாலும் சில பத்திரிகைகளில் வெளிவந்தது போல ஈஸ்வரன் புலிகளது பிஸ்டல் குழு உறுப்பினரல்ல.

ஈஸ்வரன் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் 1983க்கு பின்னர் இணைந்து கொண்டவர். இயக்கப் பெயர் தயாநிதி. யாழ்ப்பாணம் மானிப்பாயில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். களஞ்சியப் பிரிவில் வாகன ஒட்டுநராக செயற்பட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் உள் பிரச்சனை ஏற்பட்டு இரண்டாக பிளவுண்ட பின்னர் இயக்கத்தைவிட்டு ஒதுங்கினார்.

இந்தியப் படை காலத்தில் தம்மோடு இணைந்து செயற்படுமாறு ஈ.பி.ஆர்.எல்.எஃப். இவரைப் பிடித்து வைத்திருந்தது. இணைந்து செயற்பட மறுத்துவிட்டார்.

வன்னியில் உள்ள புலிகளுடன் சமீப காலத்தில்தான் பரிச்சயம் ஏற்பட்டது. அது போல ரெலோ இயக்கத்துடனும் வவுனியாவில் இவருக்கு நெருக்கம் இருந்தது.

தயாநிதியை தமது சில நடவடிக்கைகளுக்கு புலிகள் பயன்படுத்த நினைத்தனர். அவரது தனிப்பட்ட நடவடிக்கைகள் இயக்க விதிகளுக்கு ஏற்றதாக இல்லையென்பதால், தமக்கு உதவிகள் செய்பவராக பயன்படுத்தி னார்கள்.

தயாநிதி ஊடாக சில ஆயுதங்களும், வெடிமருந்துகளும் வன்னியில் இருந்து வவுனியா நகருக்கு கொண்டுவரப்பட்டது.

அதுமட்டுமன்றி சிலாபம் பகுதியில் ஓரிடத்திலிருந்து குண்டு நிரப்பப்பட்ட வாகனம் ஒன்றை கொழும்புக்கு கொண்டு சென்று கரும்புலி ஒருவரிடம் ஒப்படைக்கும் வேலையும் தயாநிதியிடம் கொடுக்கப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

வவுனியாவில் தமிழ் இயக்கம் ஒன்றிடம் பிஸ்டல் ஒன்றை வாங்கிய தயாநிதி, மது போதையில் சிலரை மிரட்டியிருக்கிறார். தலையில் பிஸ்டலை வைத்து சிலரிடம் கப்பம் கேட்டிருக்கிறார்.

இத்தகவல் படையினருக்கும் எட்டியிருக்கிறது. அவரிடம் உள்ள பிஸ்டல் தமிழ்க் கட்சி ஒன்றால் கொடுக்கப்பட்டது என்ற விபரம் படையினருக்கு அப்போது தெரியாது.

அதுமட்டுமன்றி தயாநிதி வன்னிக்கு சென்று புலிகளுடன் உறவாடுவது பற்றிய தகவல்களும் அரசல் புரசலாக படையினரின் புலனாய்வுப் பிரிவுக்கு தெரியவந்திருக்கிறது.

ஆளை அமுக்கிக் கொண்டுபோய் வவுனியா ஜோசப் தடுப்பு முகாமில் வைத்து தமது பாணியில் விசாரித்திருக்கின்றனர்.

எல்லாவற்றையும் ஆதியோடு அந்தமாக கூறிவிட்டார் தயாநிதி.

ஆனால், புலிகளது இரகசிய வேலை முறை காரணமாக தயாநிதிக்கு ஓரளவுக்கு மேல் விபரங்கள் தெரியவில்லை.

குண்டு வாகனத்தை எங்கே, எவரிடம் ஒப்படைப்பது என்பதுகூட தயாநிதிக்கு தெரியாது. குறிப்பிட்ட தினத்தில்தான் அதனை புலிகள் கூறியிருப்பார்கள்.

தயாநிதிக்கு தெரிந்த புலி உறுப்பினர்கள் சிலர் வவுனியா நகரைவிட்டு வன்னிக்கு நழுவிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

தயாநிதி சிறந்த சாரதி என்பதால், குண்டு வாகனத்தை பதற்றம் இல்லாமல் கொழும்புவரை கொண்டு செல்ல ஏற்றவராக புலிகளால் தெரிவு செய்யப்பட்டிருக்கலாம்.

தயாநிதியின் இத்தகைய நடவடிக்கைளை கிஷோர் அறிந்திருக்கவில்லை. வவுனியாவில் தயாநிதி மிரட்டல் உருட்டல்களில் ஈடுபட்டுத் திரிந்ததும் கிஷோருக்கு தெரியவரவில்லையாம்.

எனினும் கிஷோரை பொறியில் மாட்டவும், உள்ளே வைத்துக் காட்டவும் நினைத்த சிலரே சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவரது சாரதியுடன் முடிச்சுப்போட்டுப் பார்த்திருக்கின்றனர் என்றே சந்தேகிக்கப்படுகிறது.

சாரதியின் நடவடிக்கைளோடு கிஷோருக்கு தொடர்பு இருந்திருந்தால் படையினர் விரைவாக விசாரணைகளை முடித் திருக்க மாட்டார்கள். பொலிசாரிடம் ஒப்படைத்திருக்கவும் மாட்டார்கள்.

கிஷோர் கைதானபோது வவுனியா பொலிஸ் உயரதிகாரி ஒருவர் விடுப்பில் சென்றுவிட்டாராம். அந்த அதிகாரி ஐ.தே. கட்சிக்கு சார்பானவர் என்று சந்தேகம் இருப்பதால், கிஷோருக்கு உதவினால் அச் சந்தேகம் வலுத்துவிடும் என்றே விடுப்பில் போனாராம்.

அதுபோல இராணுவப் புலனாய்வுப் பிரிவின் வவுனியா முஸ்லிம் அதிகாரி ஒருவர் கிஷோருக்கு உறவினர். அவரும் கிஷோர் கைதான சமயம் விடுப்பில் இருந்திருக்கிறார்.

★★★

**தெ**ன்மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக வன்னியில் படை நகர்வு ஒன்றுக்கு சாத்தியம் இருக்கிறது.

மன்னாரில் இருந்தும், பெரியமடு மற்றும் மூன்று முறிப்பு பகுதிகளில் இருந்தும் முன்னேறும் முயற்சிகளில் ஈடுபடலாம்.

மல்லாவியை கைப்பற்றும் முயற்சியிலும் படைத்தரப்பு ஈடுபடக்கூடும் என்று அங்குள்ள மக்கள் நினைக்கின்றனர். புலிகளிடமும் அத்தகைய எதிர்பார்ப்பு இருக்கிறது.

ஏதாவது ஒரு பகுதியை பிடித்ததாக மாகாணசபைத் தேர்தலில் கூறியாக வேண்டும்.

சமீபத்தில் பூவரசங்குள அதிரடிப்படை முகாம்மீது புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தினார்கள்.

படையினர் பிற்பகல் நேரத்தில் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருப்பதை வேவு பார்த்தே, மோட்டார் தாக்குதல் திட்டமிடப்பட்டது.

மோட்டார் ஷெல்கள் அனைத்தும் மைதானத்தின் மத்தியிலேயே விழுந்து வெடித்திருக்கின்றன.

நான்கு அதிரடிப் படையினர் பலியானதாகவும், பத்துப் பேர் காயமடைந்தனர் என்றும் பாது காப்பு தரப்பினர் கூறியுள்ளனர். ■

நாரதர்

## BG-15 கிரனேட் லோஞ்சர்



புலிகளிடம் தற்போதுள்ள குறுந்தூர ஆயுதத்தில் இதுவும் ஒன்று.

BG-15 கிரனேட் லோஞ்சர் ஏ.கே.74 துப்பாக்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது. துப்பாக்கியால் சுடலாம். அதேவேளை தேவையேற்படும்போது முன்கையால் இயக்கி கிரனேட் லோஞ்சரிலுள்ள கிரனேட்டையும் சுடலாம்.

கிரனேட் அளவு : 40 எம் எம் VOG
கிரனேட் பொருத்தியபின்பு எடை: 1.79 கிலோ.
நீளம் : 325 மி.மீட்டர்
குழாயின் நீளம் : 120 மி.மீட்டர்
பொருத்தும் முறை : ஒரு தடவையில் ஒரு கிரனேட்
அதி கூடிய ஏவு தூரம் : 420 மீட்டர்
சுடுவேகம் : 77 மீட்டர்/ செக்கன்
உற்பத்தியாளர் : ஸ்ரேட் ஆர்சனெல்ஸ், (முன்னாள் சோவியத் யூனியன்)

படத்தில் உள்ளது போன்று 40 பாகை சரிவில் துப்பாக்கியை ஏந்தி கிரனேட் லோஞ்சரை இயக்கவேண்டும்.

கையால் கிரனேட் எறிவதாயின் 25 மீட்டர் தூரம் செல்வதே சிரமமாகும். இந்த லோஞ்சரால் 420 மீட்டர் தூரத்திற்கு கிரனேட்டை ஏவலாம். ●

## அதிரடி அய்யாத்துரை



***தமிழாராய்ச்சி மாநாட்டை*** குழப்பியதால்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியதாக கூறியிருக்கிறார் மலையகத் தனித்துவ தலைவர். தமது மேதினத்தை குழப்பியவர்களை எச்சரிக்கவே இப்படிக் கூறியிருக்கிறார். அப்படியானால் அங்கும் ஆயுதம் ஏந்துமாறு கூறுகிறாரோ? கடந்த ஆண்டில் 'யாழ்ப்பாணத்தாரால் மலையகம் கெடுவது போல' பேட்டிகள் கொடுத்ததும் அந்தக் கட்சியினர்தான்! இரத்தினபுரியிலும் வேறு பல பகுதிகளிலும் மலையக தமிழ்ச் சனம் பாதிக்கப்படும்போது பக்குவம் சொன்னவை, தாங்கள் பாதிக்கப்படும்போதுதான் பொங்கிப் பேசுகினம்!

***முன்னாள் முதல்வருக்கு*** அதிகாரத் தரப்பாரின் கடைக்கண் பார்வை இருப்பது தெரிந்ததும், அந்தக் கட்சியின் செயலாளர் அதிகாரத்தரப்பாரை கண்டிக்க ஆரம்பித்துள்ளாராம். அடிக்கடி பத்திரிகையில் தனது பெயர் இடம்பெறத்தக்கதாகவும் பார்த்துக் கொள்கிறாராம். வவுனியா இயக்க மோதலை பயன்படுத்தி ஹீரோவாக மாறுவதுதான் அவரது சமீபகாலத்திய திட்டமாம். அதனால் ஒற்றுமைக்கு ஓடுப்பட்டுத் திரிவதாக அவரது பெயர் அடிக்கடி பத்திரிகைகளில் வரும் பாருங்கோ! வவுனியாவில் உள்ள தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகரை ஆயுதக் கலாசாரத்தால் இயக்கப் பெயர்களை கெடுப்பவர் என்றும், தனது கட்சிக்குள் உள்ள சிலரை அவருடன் ஒப்பிட்டும் வெளிநாட்டிலுள்ள கட்சி ஆதரவாளர்களுக்கு சமீபத்தில் கொள்கை விளக்கம் செய்ததை மறந்து போனாரோ? உதட்டில் பூ, உள்ளத்தில் முள்!

***இங்கிலாந்துக்கு*** செல்ல ஏராளமானோர் விமான பயணச்சீட்டுக்கு பதிவு செய்துள்ளனர். நேரடியாக இலங்கை அணிக்கு ஆதரவாக குரல் கொடுக்கத்தான் இந்தப் பயணம். படையில் சேர்ந்து களம் போக ஆட்களுக்கு பஞ்சம் என்று பச்சைத் தரப்பார் கவலைப் பட்டுக் கொண்டிருக்கினம். ஆனால் கிரிக்கெட் களம் சென்று உற்சாகம் தர ஆட்கள் கியூவில் நிக்கினம் பார்த்தியளோ?

***சுசந்திகா*** ஜப்பானிலும் முதலிடம் பெற்றிருக்கிறார். ஏலாத படியால்தான் ஓடினவர் என்ற கேலிப் பேச்சு அடங்கிப் போச்சு. இங்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களால்தான் அவர் தப்பியோடியிருக்கிறார். பெண்கள் என்றால் கண்கள் என்று வசனம் பேசுவது கிடக்கட்டும்! பெண் என்றதுமே கண் வைக்கும் பழக்கம் முதலில் ஒழியட்டும். அப்போதுதான் சுசந்திகாக்களை இழக்காதிருக்கலாம். என்ன, நான் சொல்லுறது?

***அயலக விசா*** பெறுவதற்கு வடக்கு-கிழக்கு என்றால் முடியாத காரியம்; முயற்கொம்பு. ஆனால் முகவர்கள் நினைத்தால் கையிலே விசா. அதற்காக பையிலே 20 ஆயிரம் கொடுக்க வேண்டும். முகவர்கள் பாடு கொண்டாட்டம்தான். கெடுபிடியை இறுக்குவதே, கையில் பசை பிடிக்கத்தானே!

***கனடாவுக்கு வைரமுத்து*** சென்றவர். அங்கு தமிழ்ப் பத்திரிகைகள் இடையே போட்டி. வைரமுத்துவை ஒரு பத்திரிகை அழைத்துப் போட்டுதே என்று எரிச்சல்பட்ட சிலர் ரெண்டு எழுத்தாரின் பெயரையும் பயன்படுத்தி கவிஞரைத் திட்டி தரக்குறைவாக பிரசுரம் வெளியிட்டவை. பிரசுரத்தை பார்த்ததுமே உண்மை விளங்கிப்போச்சு. இந்தச் சண்டையில் முரசையும் இழுத்துவிட படாதபாடு பட்டவை. பிரசுரத்தை வெளியிடுமாறு தொல்லை போட்டி இருக்கலாம். பொறாமை கூடாது!

***கொழும்பில் பெண்*** பிள்ளைகளுக்கு சாமத்தியசடங்கு, கலியாண வீடு போன்ற சடங்குகளுடன் புதிய சடங்கு ஒன்றும் சேர்ந்திருக்கிறது. அது அரங்கேற்றம். அரங்கேற்றம் செய்தால்தான் சமூக மரியாதை எண்ட மாதிரியும், அதுவும் ஒரு இன்றியமையாத சடங்கு மாதிரியும் கருதப்படும் நிலைமை உருவாகிக் கொண்டிருக்குது. கடனை வாங்கியும் மகளுக்கு நடன அரங்கேற்றம் செய்து பார்க்கப் போவதாக நண்பர் ஒருத்தர் கூறினார். பார்த்தியளோ நிலவரத்தை!

***கப்பல் கதை*** சொன்னவை. இப்போது கப்பலுக்கு ஒரு பெயரும் கண்டு பிடிச்சு சூட்டியிருக்கினம். பெயர் எல்லாம் தெளிவாக தெரிந்தால், பிறகு ஏன் பிளந்து கட்டவில்லை. காதிலை பூ, அதுவும் கொத்துக் கொத்தாகப் பூ. ரெண்டு எழுத்தாரின் கப்பல் என்று சந்தேகிக்கும் கப்பல்களில் ஒன்றின் பெயரை எடுத்துவிட்டு, கப்பல் கதைக்கு காத்திரம் தேடியிருக்கினம்!

***இவ்வாரப் பொன்மொழி***

**"பணத்தை மனிதன் எப்படி நடத்துகிறான் என்பதிலிருந்து எப்படி அவன் பணம் திரட்டுகிறான் என்பதைச் சொல்லிவிடலாம்!"** ■

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# ராஜீவ் கொலை வழக்கு

## நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள்




ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேர்மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எவை? அவற்றிலுள்ள ஓட்டைகள் எவை என்பதை இங்கு காணலாம்.

கொலைக் குற்றச்சாட்டை இந்திய மத்திய புலனாய்வுத்துறை ஆதாரபூர்வமாக நிரூபித்தது என்றுதான் பொதுவாக நம்பப் பட்டது. அது சரியல்ல, நீதிமன்றமும், நீதிபதியும் இக் கொலை புலிகளால் செய்யப் பட்டது என்ற முடிவோடு இருந்ததால் தீர்ப்பு புலனாய்வுத்துறைக்கு சாதகமாக மாறியது.

ஆறு எதிரிகள் மீதான குற்றச்சாட்டையும் அவற்றில் உள்ள ஓட்டைகளையும் முன்னர் பார்த்தோம். இன்று ஏனையோர் மீதான குற்றச்சாட்டுக்களில் உள்ள முரண்பாடுகளைப் பார்ப்போம்.

### கனகசபாபதி

<u>குற்றம் சாட்டிப்பட்ட 7வது எதிரி</u>

*இலங்கைத் தமிழர்*

முதலில் சென்னை வந்த இவர் உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின், உறவினர் இவரிடத்தில் "தமிழர்கள் எல்லாம் காவல் நிலையத்தில் தங்களுடைய பெயரை அகதிகளாகப் பதிவு செய்து கொள்கிறார்கள். அதனால் நீங்களும் சென்று பதிவு செய்து கொள்ளுங்கள்" எனக் கூறினார்.

கனகசபாபதியோ அதற்கு மறுப்புத் தெரிவித்தார். இதனை வைத்து இவருக்கு ராஜீவ் காந்தி கொலைச்சதி பற்றி முன்னரே தெரிந்திருக்காவிட்டால் இவர் ஏன் பொலிஸ் நிலையத்தில் தனது பெயரை பதிவு செய்து கொள்ள மறுக்கவேண்டும்? எனவே இவருக்கு இச்சதித் திட்டம் பற்றி முன்னரே தெரிந்திருக்க வேண்டும் என நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டது.

இதே போன்றுதான் ஆதிரையும் ஒரு இலங்கைத் தமிழர் வீட்டில் தங்கியிருக்கிறார். 91.06.11 அன்று அந்த இலங்கைத் தமிழர் ஆதிரையையும் அழைத்துச் சென்று இலங்கை அகதியாக பதிவு செய்து கொண்டார். இதைப் பற்றி குற்றப்பத்திரிகையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"ஆதிரை அகதியாக இந்தியா வருகிறார். அகதியாக தன்னைப் பதிவு செய்து கொள்கிறார். இதனூடாக சட்டத்தை ஏமாற்றி சதித் திட்டத்தில் பங்குபற்றினார்" என்பது பொலிஸ் தரப்பு வாதம்.

எனவே, ஆதிரை அகதி எனப்பதிவு செய்து கொண்ட தால் அவர்மீது பொலிஸார் சொல்கின்ற குற்றச்சாட்டு அவர் அகதி என்ற போர்வையில் தமிழகம் வந்து இந்த கொலைச்சதியில் கலந்துகொண்டார்.

ஆனால், கனகசபாபதி அகதியாக பதிவு செய்து கொள்ளாததால் அவருக்கு இந்த கொலைச்சதியில் பங்கிருக்கிறது என்பது பொலிஸார் சொல்கின்ற குற்றச் சாட்டு.

இந்த அடிப்படையிற்தான் கனகசபாபதி மீதுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டதாக கருதி நீதிமன்றம் அவருக்கு தூக்குத் தண்டனை வழங்கியுள்ளது.

### ஆதிரை (சந்திரலேகா)

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 8வது எதிரி</u>

*இலங்கைத் தமிழர்*

91.04.28 அன்று இவரும், கனகசபாபதியும் இலங்கையிலிருந்து தமிழகம் வந்து சென்னைக்கருகில் உள்ள தாம்பரம் எனும் கிராமத்தில் சில நாட்கள் தங்கினார்கள். அதற்குப்பின் சென்னையிலுள்ள ராயப்பேட்டையில் இலங்கைத்தமிழர் ஒருவரின் வீட்டில் சுமார் ஒன்றரை மாதகாலம் தங்கியிருந்தார்கள்.

91.07.01 அன்று இவர்களிருவரும் டில்லிக்கு சென்றபோது கைது செய்யப்பட்டார்கள்.

இவர்கள் கைது செய்யப்பட்டபோது ஆதிரைக்கு வயது 17. சட்டப்படி இவர் பராயமடையாதவர் (Minor).

இந்திய சட்டப்படி 18 வயது நிறையாத ஒருவரை மற்றக் கைதிகளுடன் இவரையும் அவர்கள் போன்ற ஒருவராக பாவிக்கக் கூடாது, மற்றக் குற்றவாளிகளைப்போல் இவரையும் கையாளக் கூடாது, இவருக்கென தனி நீதிமன்றம் இருக்கிறது.

வயதானவர்களுக்காக நடாத்தப்படுகின்ற நீதிமன்றங்களில் இவரும் ஒரு குற்றவாளியாக சேர்த்து விசாரிக்கப்படக் கூடாது. இதற்கென Journal Court என்கிற நீதிமன்றங்கள் இருக்கின்றன. அந்த நீதி மன்றங்களிலேயே இவர் விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அந்த நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட்டிருந்தால் அதிகபட்ச தண்டனையாக ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனைதான் கொடுக்கப்படவேண்டும்.

அதுவும் சாதாரண சிறையில் அவர்கள் அடைக்கப்படக்கூடாது. அவர்களுக்கென தனியான ஒரு சிறைச்சாலை இருக்கிறது. அதில்தான் அவர்கள் கைதியாக சிறையிலடைக்கப்பட வேண்டும்.

ஆனால், இந்த வழக்கில் மட்டும் 17 வயதான ஆதிரையை மற்றக் குற்றவாளிகளுடன் இணைத்து குற்றஞ்சாட்டி விசாரிக்கப்பட்டு, வழக்கத்திற்கு மாறாக தூக்குத் தண்டனை தீர்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

இவர் மீதுள்ள குற்றச்சாட்டு என்னவெனில், தாம்பரத்தில் தங்கியிருந்தபோது மே மாதம் 5ம் திகதி அன்று சிவராசன் இவரைப் பார்ப்பதற்காக வந்தார்.

அதற்குப் பின் 7ம் திகதி அன்று இவரை தாம்பரத்திலிருந்து ராயப்பேட்டையிலுள்ள ஒரு இலங்கைத் தமிழர் வீட்டிற்கு அழைத்துச் சென்று இவர் தங்குவதற்காக ஏற்பாடு செய்தார்.

அந்த வீட்டில் தங்கியிருக்கின்ற ஆதிரை அந்த இலங்கைக் குடும்பத்துடன் சேர்ந்து 8ம் திகதி அன்று தமிழகத்திலுள்ள பல்வேறு நகரங்களுக்கும் சுற்றுப்பயணம் சென்றார். சிதம்பரம், கும்பகோணம், மைசூர், பெங்களூர், ஊட்டி போன்ற இடங்களுக்கு சுற்றுப் பயணம் சென்ற இவர் 91.05.16 அன்று மீண்டும் சென்னைக்கு வந்தார்.

இதே தினத்தில் சிவராசன் அந்த இலங்கைத் தமிழர் வீட்டிற்கு வந்து இவரைப் பார்த்துவிட்டு போனார். அதற்குப்பின் பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டின்படி கூட இவர் சிவராசனை சந்திக்கவேயில்லை.

91.07.01 அன்று இவரும், கனகசபாபதியும் ரயிலில் டில்லி சென்று, அங்கே கிருஸ்னா விடுதியில் அறை வாடகைக்கு எடுத்தபோது பொலிஸார் இவர்களைக் கைது செய்தனர்.

ஆதிரையும் கனகசபாபதியும் சிவராசன் பாதுகாப்பாக தங்குவதற்கு இடந்தேடுவதற்காக டில்லி சென்றனர் என்பது பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு. சிவராசன் சென்னையை விட்டுச் செல்ல முடியாமல் சென்னையிலேயே பதுங்கிக் கொண்டிருந்ததால், சிவராசன் சென்னையில் இருந்து 200 மைல் தூரத்திலுள்ள பெங்களூருக்கு நேரடியாக செல்ல முடியாமல் ஒரு டாங் (Tank) லொறிக்குள் பதுங்கிக் கொண்டே பெங்களூர் சென்றாரென்பது பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு.

ஆனால், நிலமைகள் இப்படியிருக்க 2000 மைல் தொலைவிலுள்ள டில்லிக்கு சிவராசன் எப்படி செல்லமுடியும்? அங்கே போய் எப்படிப் பதுங்கியிருக்க முடியும் போன்ற விடயங்களை கவனத்திற்கொள்ளாமலேயே ஆதிரை மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அதற்காக இவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு தூக்குத்தண்டனை ஆகும்.

### ராபட் பயஸ்

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 9வது எதிரி</u>

### ஜெயக்குமார்

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 10வது எதிரி</u>

### சாந்தி

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 11வது எதிரி</u>

ராபட் பயஸ், ஜெயக்குமார் இலங்கைத் தமிழர்கள் மட்டுமின்றி உறவினரும்கூட, பதினொராவது எதிரி சாந்தி இந்தியத் தமிழர், சென்னையைச் சேர்ந்தவர்.

பத்தாவது எதிரி ஜெயக்குமாரை திருமணம் செய்து கொண்ட பின் சாந்தி இலங்கையில் சென்று வாழ்ந்தவர். இந்த மூவரும் 90ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தமிழகத்திற்கு வந்தார்கள். இதில் ஜெயக்குமாரும், சாந்தியும் படகில் வந்து தூத்துக்குடியில் அகதிகள் முகாமில் தங்கினர்.

ராபட் பயஸ் முறையாக கடவுச்சீட்டு, விசாவுடன் இந்தியாவிற்கு வந்தவர். இவர்கள் முதலில் போரூர் என்ற இடத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து அங்கே தங்கியிருந்தார்கள். இவர்களுடன் சேர்ந்து சிவராசன் அங்கே தங்கியுள்ளார்.

இரண்டு மாதம் கழித்து, ஜெயக்குமாரும் சாந்தியும் கொடுங்கையூர் எனுமிடத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து, அங்கே தங்கி சிறிய வியாபாரம் நடத்தி வந்தார்கள்.

ராபட் பயஸ், ஜெயக்குமார்மீதுள்ள குற்றச்சாட்டு சிவராசன் தங்கியிருப்பதற்கு போரூர், கொடுங்கையூர் எனுமிடங்களில் வீடு வாடகைக்கு எடுத்துக் கொடுத்து சிவராசனுக்கு உதவியாக செயற்பட்டனர் என்பதாகும்.

இத்தோடு சிவராசன் மே மாதம் முதல் வாரத்தில் இந்தியாவிற்கு வந்த சுபா, தனு ஆகியோரோடு ஜெயக்குமார் வீட்டில் மாறி மாறி தங்கியிருந்தனர்.

இந்தியாவில் ஜெயக்குமாரும், ராபட் பயஸ் ஆகிய இருவரும் சிவராசன், தனு, சுபா தங்கியிருக்க வீடுகள் ஏற்பாடு செய்த காரணத்தினாற்தான் அம்மூவரும் இந்தியாவில் தங்கி ராஜீவ் காந்தியை கொலை செய்தனர்.

ஆகவே வீடு ஏற்பாடு செய்து தங்குவதற்கு வசதி செய்து கொடுத்த காரணத்தினால் ஜெயக்குமார், ராபட் பயஸ் ஆகிய இருவருக்கும் இந்தச் சதி பற்றி முன்னரே தெரிந்திருக்க வேண்டும். எனவே, இந்தச் சதியில் இவர்களுக்கு நேரடியாக பங்கிருக்கிறது எனக்கருதி நீதிமன்றம் இவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கியது.

இவர்களோடு சேர்ந்து ஜெயக்குமாரின் மனைவி சாந்திக்கும் தூக்குத் தண்டனை. சாந்தி செய்த ஒரேயொரு காரியம் அவர் ஜெயக்குமாரை திருமணம் செய்ததுதான். இதனைவிட அவர் இந்த வழக்கில் எந்தக் குற்றச்செயல்கள் செய்ததாகவும் சாட்சியம் எதுவும் இல்லை.

மற்றும் ஜெயக்குமார், ராபட் பயஸ் ஆகிய இருவருக்கும் ராஜீவ் கொலையில் நேரடித் தொடர்பு இருக்கிறதென எந்தக் குற்றச் சாட்டுமில்லை. ஆனால் நீதிமன்றம் இவைகளை எல்லாம் கருத்தில் எடுக்காமல் இம்மூவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.



ராஜீவ்-இந்திரா

### விஜயன்

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 12வது எதிரி</u>

### செல்வலட்சுமி

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 13வது எதிரி</u>

### பாஸ்கரன்

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 14வது எதிரி</u>

விஜயன் இலங்கைத் தமிழர். இவரின் மனைவிதான் செல்வலட்சுமி, இந்தியத் தமிழர். செல்வலட்சுமியின் தந்தை பாஸ்கரன் இந்தியத் தமிழர். இவர் நீண்டகாலமாக இலங்கையில் வசித்தவர்.

இந்த மூவரும் 90ம் ஆண்டு டிசம்பர் மாதம் அகதிகளாக தமிழகம் வந்து தூத்துக்குடி அகதி முகாமில் 91 ஏப்ரல் வரை தங்கியுள்ளார்கள்.

அதன்பின் விஜயன் சென்னை வந்து கொடுங்கையூர் எனுமிடத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து தன் மனைவி செல்வலட்சுமி, மாமனார் பாஸ்கரன் ஆகியோரையும் அழைத்து வந்து அவ்வீட்டில் தங்கியிருந்தார்.

91.05.01 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து வந்த சிவராசன் தனுவையும், சுபாவையும் விஜயன்வீடு, ஜெயக்குமார் வீடு என மாறி மாறி தங்கவிட்டுள்ளார். விஜயன் தனது வீட்டில் தொலைதொடர்புக் கருவி வைத்து அதன்மூலம் இவர் யாழ்ப்பாணத்திற்கு செய்திகள் அனுப்பியதாகவும் இவர்மீது குற்றச்சாட்டு.

எனவே, சிவராசன், தனு, சுபா ஆகிய மூவரும் தங்குவதற்கு வீடு ஏற்பாடு செய்து கொடுத்ததுடன் அவ்வீட்டில் வைத்து தொலைத் தொடர்பு கருவியை இயக்கி யாழ்ப்பாணத்திற்கு செய்திகள் அனுப்ப உதவினார் என்பதாலும் விஜயனுக்கும் சதியில் நேரடியான பங்கிருக்கிறது என நீதிமன்றம் கருதி இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

இத்தீர்ப்பிலேயே மே மாதம் 17ம் திகதியன்று விஜயன் வீட்டின் சமையலறையில் ஒரு புதைகுழி தோண்டி தொலைத்தொடர்புக் கருவி மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் யாவற்றையும் போட்டு மூடிவிட்டார்கள்.

அதற்குப் பின் மே மாதம் 22, 26, 28ம் திகதிகளில் விஜயன் வீட்டிலிருந்து தொலைத் தொடர்புக் கருவி மூலம் பல முக்கிய செய்திகள் அனுப்பப்பட்டதாக நீதிமன்றம் சொல்கிறது.

91.05.17 அன்று விஜயன் வீட்டு சமையலறையில் புதைகுழியில் போட்டு சீமெந்தால் மூடப்பட்ட தொலைதொடர்பு கருவி மூலம் எப்படி மேற்குறிப்பிட்ட மூன்று திகதிகளிலும் செய்திகள் அனுப்பியிருக்க முடியும் என்ற சந்தேகங்கள் எழுந்தாலும்கூட, நீதிமன்றம் பொலிஸாரின் வாதங்களை ஏற்றுக்கொண்டு இந்த மூவருக்கும் சதியில் பங்கிருக்கிறது எனக் கருதி இம்மூவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

விஜயனுடைய மனைவி செல்வலட்சுமி, அவரின் மாமனார் பாஸ்கரன் ஆகிய இருவரும் விஜயனுடன் சேர்ந்து அவ்வீட்டில் தங்கியிருந்தனர் என்பதினைத் தவிர அவர்கள்மீது வேறெந்தக் குற்றச்சாட்டுக்களுமில்லை. விஜயனுக்கு மனைவியாக இருந்ததினால் செல்வலட்சுமிக்கும், செல்வலட்சுமியின் தந்தையாக இருந்ததினால் பாஸ்கரனுக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

### சண்முக வடிவேலு

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 15வது எதிரி</u>

*இந்தியத் தமிழர்*

இவர் குடும்பத்துடன் சென்னையிலேயே நீண்ட நாட்கள் இருந்து வந்தார். சிவராசனுடைய டயறியில் இவருடைய பெயரை தம்பி அண்ணா என மாற்றி TA எனப்போட்டு அந்தப் பெயருக்கு நேராக ஒரு இலட்சம் ரூபாய், இரண்டு இலட்சம் ரூபாய் என சில இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த டயறியை அடிப்படையாக வைத்து பொலிஸ் தரப்பு வாதப்படி இவர் சிவராசனுக்கு அந்தந்த திகதிகளில் பணம் கொடுத்து உதவியுள்ளார் என்பது இவர் மீதுள்ள குற்றச்சாட்டு.

இதனைவிட இவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ராஜீவ் காந்தி கொலையில் ஈடுபட்டார் என்பதற்கு எந்தவித சாட்சியங்களும் கிடையாது. ஆனால், இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

### ரவிச்சந்திரன்

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 16வது எதிரி</u>

### சுசீந்திரன்

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 17வது எதிரி</u>

*இந்தியத் தமிழர்கள்*

இவர்களிருவரும் சிவராசனுக்கு ஏற்கனவே இலங்கையில் வைத்து அறிமுகமானவர்கள். ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதின் பின்பு சிவராசன், சுபாவை பொள்ளாச்சிக்கு அழைத்துச் சென்று அவர்களை இருநாட்கள் அங்கே தங்கவைத்துவிட்டு, மீண்டும் சென்னைக்கு அழைத்து வந்தார்கள். இதுதான் இவர்கள் இருவர் மீதான குற்றச்சாட்டு.

இதனைவிட இவர்கள் இந்த சதித் திட்டத்தில் பங்குபற்றினார்கள் என்பதாக எந்தவித குற்றச் சாட்டுமில்லை. இவர்களுக்கும் யாவரையும் போலவே தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

### பேரறிவாளன்

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 18வது எதிரி</u>

*இந்தியத் தமிழர்*

91.05.03 அன்று சிவராசன் இவரிடத்தில் ஒரு கார் பற்றரி வாங்கித்தரும்படி கேட்கின்றார். அதன்படி இவர் சிவராசனுடன் வந்த நேருவை அழைத்துச் சென்று ஒரு கார் பற்றரி வாங்கிக் கொடுத்தார். 91.05.04 அன்று சிவராசன் இவரிடத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கித் தரும்படி பணம் கொடுத்தார். அந்தப்பணத்தைப் பெற்ற இவர் சிவராசனுக்கு ஒரு மோட்டார் பைக் வாங்கிக் கொடுத்தார்.

அதன்பின், மே மாதம் இரண்டாவது வாரத்தில் ஒரு சிறிய 9 Valts பற்றரி வாங்கித் தரும்படி சிவராசன் இவரிடத்தில் கேட்டார்.

இந்த பற்றறிகளை இவர் எதற்காக சிவராசனுக்கு வாங்கிக்கொடுத்தார் என்பதற்கு எந்தவித சாட்சியங்களும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவில்லை.

இவர் சதியைப்பற்றி தெரிந்து தான் இந்த பற்றரிகளை சிவராசனுக்கு வாங்கிக் கொடுத்தார் என்பதற்கு எந்தவிதமான பொலிஸ் தரப்பு சாட்சியங்களுமில்லை.

இவர் செய்ததெல்லாம் தெரிந்தவர் என்றரீதியில் சிவராசனுக்கு பற்றரி வாங்கிக் கொடுத்ததுதான்.

உதாரணமாக, ஒரு விடுதியில் இருப்பவர் விடுதியில் வேலை செய்பவரை அழைத்து ஏதாவது ஒரு பொருள் வாங்கித் தரும்படி கேட்டால் அவர் வாங்கிகொடுப்பது போல, சிவராசன் கேட்டுக் கொண்டதற் கிணங்க இவர் பற்றரி, மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்தாரேயொழிய இவருக்கு நேரடியாக ராஜீவ்காந்தி கொலையில் சம்பந்தமிருக்கிறதென பொலிஸ் தரப்பில் எந்த வாதங்களுமில்லை. அப்படியிருக்க இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

### இரும்பொறை

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 19வது எதிரி</u>

*இந்தியத் தமிழர்*

1991ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கடலில் வைத்து இந்தியக் கடற்படையினரால் இவர் கைது செய்யப்பட்டார். குண்டுச் சாந்தனுக்கு தஞ்சம் அளித்து உதவியதாக இவர்மீது தடாச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டது.

பின்னர் பத்மநாபா கொலை வழக்கிலும் இவர்மீது குற்றம் சுமத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட இரு வழக்குகளிலும் இவரைக் குற்றமற்றவர் என நீதிமன்றம் விடுதலை செய்தது.

ஆனால் அதே குற்றச் சாட்டுக்களுக்காக ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நீதிமன்றத்தினால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

### பாக்கியநாதன்

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 20வது எதிரி</u>

### பத்மா

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 21வது எதிரி</u>

*இந்தியத் தமிழர்கள்*

பாக்கியநாதன் 21வது எதிரி பத்மாவின் மகன். பத்மாவின் வீட்டில்தான் இரண்டாவது எதிரி முருகனும் 18வது எதிரி பேரறிவாளனும் தங்கியிருந்தனர். இவர்களுடைய வீட்டிற்கு சிவராசன் இரண்டு, மூன்று தடவை வந்து சென்றவர். இவர்கள் இருவரும் மீதான பொலிஸ் தரப்பு குற்றச் சாட்டுக்கள்.

1. இரண்டாவது எதிரி முருகனை வீட்டில் தங்கவைத்திருந்தமை.
2. சிவராசன் இவர்களது வீட்டிற்கு வந்து சென்றவர்.
3. 21வது எதிரி பத்மா ராஜீவ் காந்தி கொலையின் பின் 91.05.25 அன்று சிவராசன், நளினி, சுபா ஆகியோருடன் திருப்பதிக்கு சென்று வந்தார் என்பவைகளைத் தவிர இவர்கள் நேரடியாக இந்த சதித் திட்டத்தில் ஈடுபட்டனர் என பொலிஸ் தரப்பில் எந்தவித குற்றச்சாட்டுக்களுமில்லை.

(தொடர்ந்து வரும்)

## சிவராசனும் ரெலோவும்

ராஜீவ் கொலையின் சூத்திரதாரியான சிவராசன் முதலில் ரெலோ உறுப்பினராக இருந்தவர். 1980ம் ஆண்டில் அரசுக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட்டு திருமலையில் இராணுவத்தினரால் கைதாகி விடுதலையானவர்.



இந்தியாவில் தமிழநாடு சென்னை விருக்கம்பாக்கத்தில் ரெலோ முகாமில் தங்கியிருந்தவர். அக் காலகட்டத்தில் ரெலோவுக்குள் உட் பிரச்சனை ஏற்பட்டது. ரமேஷ், சுதன், மனோமாஸ்டர் ஆகியோர் ரெலோ தலைவர் சிறீசபாரத்னத்தை தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டியதாக குற்றம் சாட்டப்பட்டனர்.

இக் கட்டத்தில் அவர்களது ஆதரவாளர்கள் பலர் ரெலோவைவிட்டு விலகிச் சென்றனர். அப்போது சிவராசனும் ரெலோவை விட்டு விலகினார்.

புலிகளுடன் இணைவதற்கு தொடர்பு கொண்டார். சென்னை மெரீனா கடற்கரையில் சிவராசனை வந்து காத்திருக்குமாறு புலிகள் கூறினார்கள்.

சிவராசனும் இன்னுமொருவரும் இரண்டு வாரங்களாக காத்திருந்து பாத்தனர். காலை 7 மணிக்கு சென்று இரவு 9 மணியளவில் மெரினா கடற்கரை காந்தி சிலையருகே காவலிருந்து பார்த்துவிட்டு திரும்புவார்கள்.

சிவராசனுடன் கூடச் சென்றவர் நம்பிக்கை இழந்து நின்றுவிட, சிவராசன் தொடர்ந்து சென்று வந்தார். அவரது உறுதியைப் பார்த்த புலிகள் அவரை தம்மோடு இணைத்துக் கொண்டனர்.

அதன் பின்னர் புலிகளுக்குள் தன் திறமையான நடவடிக்கைகளால் முக்கிய இடத்தை பெற்றார்.

# அலசுவது - இராஜதந்திரி

# எழுச்சி காட்டும் ஜே.வி.பி. எழ முடியாத தமிழ்க் கட்சிகள்

## மறுபடியும் புரோக்கர் அரசியல்

சமீபத்தில் நடந்து முடிந்த ஐந்து மாகாணசபை தேர்தல்களின் பின்னர் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தென்னிலங்கை அரசியல் அரங்கில் முக்கிய சக்தியாக உருவெடுத்திருக்கிறது.

1971ம் ஆண்டில் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி) தமது முதலாவது ஆயுதக் கிளர்ச்சியை நடத்தியிருந்தனர்.

அன்றைய சூழல் ஆயுதக் கிளர்ச்சிக்கு சாத்தியமாக இல்லாமையால் ஒடுக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கொன்றுகுவிக்கப்பட்டனர்.

ஜே.வி.பி.யின் கதை அத்தோடு முடிந்தது என்றே அப்போது கருதப்பட்டது. அக் கணிப்புகளுக்கு மாறாக 1987ம் ஆண்டு தனது இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியை ஜே.வி.பி. முன்னெடுத்தது. 1987 முதல் 1989 வரை தொடர்ச்சியாக இரண்டாண்டுகள் தென்னிலங்கையை ஜே.வி.பி கிளர்ச்சியாளர்கள் உலுக்கியிருந்தனர்.

1971ம் ஆண்டு கிளர்ச்சி தோல்வி கண்டதன் பின்பும், ஜே.வி.பி. மறுபடி வளர்வதற்கு அதன் தலைமைப் பீடம் அழியாது இருந்ததே முக்கிய காரணம் என்று அன்றைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின கருதினார்.

எனவேதான், 1989 இல் ஜே.வி.பி.யின் தலைவர்கள் அனைவரையும் வேட்டையாட உத்தரவிடப்பட்டது. ரோகன விஜயவீர உட்பட முக்கிய தலைவர்கள் உயிரோடு கைது செய்யப்பட்ட போதும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தலைவர்கள் ஒழிந்து போனதால், இனிமேல் ஜே.வி.பி. உருப்பெற்று எழவே முடியாது என்றே அப்போது உறுதியாக நம்பப்பட்டது.

ஆனால், அக் கணிப்பையும் தகர்த்தெறிந்துவிட்டு, ஜே.வி.பி. இப்போது மக்களது ஆதரவுடன் முக்கிய சக்தியாக எழுந்து நிற்பதை காணக்கூடியதாகவுள்ளது.

பொது ஜன முன்னணி ஆட்சியாளர்கள் மாகாண சபைகளில் தமது ஆட்சியை நடத்துவதற்கு ஜே.வி.பி.யின் தயவை நாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தென் மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்திற்கு ரோகண விஜயவீரவின் மனைவியின் உதவியை கோரும் கட்டாயமும் பொ.ஜ.முன்னணிக்கு ஏற்பட்டுள்ளது.

பொதுஜன முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றுக்கு மாற்றான மூன்றாவது சக்தியாக ஜே.வி.பி. தேர்தல் அரசியல் களத்தில் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியும், பொது ஜன முன்னணியும் ஜே.வி.பி.யை தம்மைப் போன்ற கட்சிகளாக கருதியதுதான் முதல் தவறாகும். அத் தவறுதான் ஜே.வி.பி. அழிந்துவிடும் என்ற தப்புக்கணக்குக்கு இவர்களை கொண்டு சென்றிருந்தது.

ஜே.வி.பி. இடது சாரி கொள்கைகள் கொண்ட ஒரு அமைப்பாகும். அதன் கொள்கைகள் அனைத்தும் சரியானவை அல்ல என்றாலும்கூட, அடிப்படையில் இடதுசாரிக் கருத்துக்களை கொண்டுள்ள அமைப்பு என்பதை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

வேலைத்திட்டங்கள், அரசியல் வகுப்புக்கள், இடதுசாரிக் கொள்கைகளது வழி நடத்தல் என்பவற்றை நம்பியவர்களே ஜே.வி.பி.யில் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

பொ.ஜ.மு., ஐ.தே.கட்சி போன்றவற்றில் அடுத்த தேர்தலில் தமக்கு ஆசனம் கிடைக்கும் என்று நம்புவோரும், அக் கட்சித் தலைவர்களை கண்மூடித்தனமாக நம்புவோரும்தான் உறுப்பினர்களாக உள்ளனர். அடுத்த தேர்தலில் போட்டிக் கட்சியை வீழ்த்துவதே இவர்களது ஒரே ஒரு வேலைத் திட்டமாகும்.

இன்றைய சூழலில் தேர்தல்களில் போட்டியிட்டாலும்கூட, தேர்தல்களில் வெற்றிபெறுவதால் மட்டும் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றோ, பாராளுமன்றம், உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் போன்றவை புனிதமானவை என்னும் தப்பான மூட நம்பிக்கைகளையோ ஜே.வி.பி மக்களிடம் ஏற்படுத்துவதில்லை.

இந்த அமைப்புகளுக்குள் அல்லாது, அவற்றின் வெளியே மக்களை திரட்டி போராட்டங்களை முன்னெடுப்பதுதான் அவசியம் என்பதையே ஜே.வி.பி. வலியுறுத்தி வருகிறது.

போராட்டம் என்பது மாலைவிருந்து போன்று இனிமையான ஒன்றாக எங்கும் எப்போதும் இருந்ததில்லை.

ஜே.வி.பி.யின் கிளர்ச்சிகளால் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பலயானார்கள். பல நூற்றுக்கணக்கான சிங்களக் கிராமங்கள் படையினரால் துன்புறுத்தப்பட்டன. ஜே.வி.பி.யினாராலும் பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அரசியல் சக்திகள் பலர் ஜே.வி.பி.யினரால் அழிக்கப்பட்டனர்.

எனினும் மீண்டும் ஜே.வி.பி.க்கு சிங்கள மக்கள் ஆதரவு கொடுக்க முன்வந்துள்ளனர்.

இம்முறை கொழும்பில் ஆளும் கட்சியின் மேதின ஊர்வலத்திற்கு சவால்விட்டு எழுச்சிகரமான மேதின ஊர்வலம் ஒன்றை ஜே.வி.பி நடத்திக் காட்டியிருக்கிறது. இந்த ஊர்வலமும், கொழும்பு 'ஹம்பல் பார்க்கில்' நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டமும் ஆளும் கட்சியையும், ஐ.தே.கட்சியையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

பணபலம், அதிகார பலம் எதுவும் இன்றி தேர்தல்களில் எழுச்சிகரமான பிரசாரங்களை மேற்கொள்வதும், மாபெரும் மேதின ஊர்வலங்களை நடத்திக் காட்டுவதும் பொ.ஜ.மு, ஐ.தே.க. போன்றவற்றுக்கு ஆச்சரியமானதாகவே தோன்றலாம்.

ஜே.வி.பி நிகழ்த்திக் காட்டும் இந்த அரசியல் அதிசயங்கள் பாராளுமன்ற அரசியல் பாதை என்ற சகதியில் தம்மை புதைத்துக் கொண்டுள்ள தமிழ்க் கட்சிகளுக்கும் ஒரு படிப்பினையாகும்.

இத் தமிழ்க் கட்சிகள் பலவும் கடந்த காலத்தில் புரட்சிகரமான கருத்துக்களை பேசிவந்தவையே. தம்மை இடதுசாரிகளாக சித்தரிக்கவும் படாத பாடுபட்டவையேயாகும்.

எனினும் தம்மை இடது சாரிகளாக சித்தரிக்க முனைந்த அளவுக்கு, அத் தத்துவங்களை கற்றுக் கொள்வதிலோ, ஈடுபாடு காட்டுவதிலோ தமிழ்க் கட்சித் தலைமைகள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை.

இக் கட்சிகளுக்குள் இருந்த ஒரிருவர் அவற்றில் ஆர்வம் கொண்டு தெரிவித்த கருத்துக்களே இக் கட்சிகளை இடதுசாரிக் கட்சிகள் போன்றும், இவற்றின் தலைவர்களை புரட்சிகரமானவர்கள் போன்றும் தவறான தோற்றப்பாட்டை உருவாக்கி வந்தன.

இதுதான் இடதுசாரிகளாக தம்மை காண்பித்த தமிழ்க் கட்சிகளுக்கும், ஜே.வி.பி.க்கும் இடையேயுள்ள பிரதான வேறுபாடாக விளங்குகிறது.

ஜே.வி.பி.யின் தலைமையில் இருந்தவர்கள் புரட்சிகர தத்துவங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தனா. அதனால் தமது உறுப்பினர்களையும் அவர்கள் அக் கொள்கை வழியே வளர்த்திருந்தனர்.

தமிழ்க் கட்சிகளின் தலைமைகளில் இருந்தவர்களுக்கு புரட்சிகர தத்துவ ஈடுபாடு இருந்ததில்லை. அதனால் எக் காலத்திலும், எக் கட்டத்திலும் எக் கொள்கையிலும் உறுதியற்றவர்களாக தாமும் இருந்ததோடு, தமது உறுப்பினர்களையும் அவ்வாறே சீரழிய இடமளித்தனர்.

தமது தவறுகள், தோல்விகள் என்பவற்றுக்கு பிற சக்திகள்மீது பழிபோடுவதுடன், தவறான சக்திகளை முற்றாகச் சார்ந்திருக்கும் நிலைக்கும் இக் கட்சிகள் இன்று வந்து சேர்ந்துள்ளன.

தமது இன்றைய சரணடைவுக்கு புலிகள் தம்மை தடை செய்ததே காரணம் என்று இக் கட்சிகள் கூறத் தலைப்படுவதும் கேலிக்குரியதேயாகும்.

இரண்டு தடவை பாரிய அழிவுகளைச் சந்தித்தும் ஜே.வி.பி. தனது அடிப்படைக் கொள்கைகளை கைவிடாது இருப்பதை காணமுடிகிறது.




தமது தலைவர்களையே ஒட்டுமொத்தமாக பலிகொடுத்த பின்னரும் அடுத்த கட்ட தலைமை அக் கட்சிக்குள் உருவாகி புதிய எழுச்சியை தோற்றுவித்துள்ளது.

ஆனால், ஒரே ஒரு தடவை புலிகள் தடைசெய்ததோடு, ஈழக்கோரிக்கையை மட்டுமன்றி புரட்சிகர தத்துவம், கோட்பாடுகள், வித்தியாசமான சிந்தனைகள் அனைத்தையும் தாம் துறந்துவிட்டதாக இக் கட்சிகள் கூறுவது பரிதாபத்துக்குரியதாகும்.

தற்போது வடக்கு, கிழக்கில் பல பகுதிகளில் இக் கட்சிகளுக்கு அலுவலகங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட எட்டு வருடங்களாக இங்கு இக் கட்சிகள் செயற்பட்டு வருகின்றன.

அவ்வாறிருந்தும் அரசியல் அரங்கில் தமது முத்திரையை பதிக்கவோ, தாம் ஆயுதம் ஏந்திப் போராடிய போராளிகள் என்றளவில் முன்னைய உலுத்துப்போன அரசியலுக்கு மாற்றான எழுச்சியை உண்டாக்கவோ இக்கட்சிகள் எதனாலும் முடியவில்லை.

குறைந்த பட்சம் 1970களில் கூட்டணியினர் மேற்கொண்ட அரசியல் போன்று கம்பீரமான அரசியல் செய்வதற்கும் இக் கட்சிகளிடம் திராணியில்லை.

பத்திரிகைகளும் மற்றும் செய்தி ஊடகங்களும் இவர்களது அறிக்கைகளை வெளியிடாதுவிட்டால், இக் கட்சிகள் இருப்பதே மக்களுக்கு தெரியாது போய்விடும். செய்தி ஊடகங்களின் தயவிலேயே இக் கட்சிகள் இன்று உயிர்வாழ்கின்றன.

பாராளுமன்றம் செல்வதால் இனப்பிரச்சனைக்கு தீர்வு கிடைக்காது என்பதை தமிழ் மக்களுக்கு புரியவைப்பதற்காக இக் கட்சிகளது உறுப்பினர்கள் பலர் 1980களில் வியர்வை சிந்தி வீடு வீடாக பிரசாரம் செய்தனர்.

அப்போது பாராளுமன்றத்திற்கு சில அதிகாரங்களாவது இருந்தது. தற்போது ஜனாதிபதி ஆட்சி முறையில் பாராளுமன்றம் ஒரு பொம்மை மட்டுமேயாகும். இங்கு மேலாதிக்கம் வகிப்பதும் பேரினவாதமேயாகும். எனவே, பாராளுமன்றத்துக்குள்ளாக தீர்வு வரும் என்று நம்புவது சிறுபிள்ளைத்தனமானதே.

எனினும், இன்று தமிழ்க் கட்சித் தலைமைகள் அனைத்துக்கும் பாராளுமன்ற வசதி வாய்ப்புக்களும், அவற்றினால் கிடைக்கும் இலாபங்களும் பிடித்துப் போய்விட்டன. என்ன விலை கொடுத்தாவது அடுத்த தேர்தலிலும் நாற்காலிகளை பிடிப்பதே இலட்சியமாகிவிட்டது.

ஆகவே, பாராளுமன்றத்தை அமுத சுரபிபோல தமிழ மக்களுக்கு காண்பிக்க நினைக்கின்றனர். பாராளுமன்ற உரைகளை கேட்டு மக்கள் மயங்குவதை இரசிக்கவும் ஆரம்பித்துள்ளனர்.

போராட்டங்களுக்கு மக்கள் தயாரானால்கூட பாராளுமன்ற உரைகள் மூலம் மக்களின் கோபத்தை தணிப்பதற்கும், ஆட்சியாளருடன் சமரசம் செய்து வைப்பதற்குமே முறபட்டு வருகின்றனர்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர், முன்னாள் தமிழ்த் தலைமைகளால் பரிசீலிக்கப்பட்டு மிகப் பரிதாபமாக தோல்வி கண்ட சரணடைவு, ஒத்துழைப்பு அரசியலையே இத் தமிழ்க் கட்சிகள் தற்போது தமது கையில் எடுத்துள்ளன.

அரசுடன் ஒத்துழைப்பது அன்றாடப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், அப்பிவிருத்தி காண்பதற்குமே என்று இவர்கள் கூறிவருவதும் நகைப்புக்கிடமானதாகும்.

அன்றாடப் பிரச்சனை, அடிப்படைப் பிரச்சனை இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவையாகும். இரண்டையும் தனித்தனியாக பிரித்து நோக்க முடியாது.

கைதுகள், பொருளாதார தடைகள். குண்டுவீச்சுக்கள், ஷெல்லடிகள், இடம்பெயர்வுகள் போன்றவையே பிரதானமான அன்றாடப் பிரச்சனைகளாகும். இவை யுத்தத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு வருபவையாகும்.

யுத்தம் நிறுத்தப்படாதவரை இவற்றை தீர்க்க முடியாது. அன்றாட அவலங்களுக்கு காரணமான இராணுவத் தீர்வை முன்னெடுக்கும் ஆட்சியாளரிடம் பேசி இந்த அவலங்களை தீர்க்கலாம் என நினைப்பதும் மணலில் கயிறு திரிக்கும் முயற்சியேயாகும்.

எனவே, அரசியல் தீர்வு மூலம் உடன் யுத்தத்துக்கு முடிவு கட்ட இங்கும், வெளியுலகம் ஊடாகவும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பது ஒன்றே அன்றாடப் பிரச்சனைகளுக்கும் உண்மையான தீர்வாக அமையும்.

ஆனால், தேர்தல்களில் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு அன்றாடப் பிரச்சனைகளை பயன்படுத்தும் குரூரமான எண்ணமே சில கட்சிகளிடம் இருந்து வருகிறது.

மக்களது அன்றாடப் பிரச்சனை பற்றி அரசிடம் பேசுவது, அரசு கூறும் வாக்குறுதிகளை மக்களுக்கு தெரிவிப்பது, என்கின்ற புரோக்கர் அரசியலே இதுவாகும். தமது புரோக்கர் தொழிலுக்கு கூலியாக இவர்கள் மக்களிடம் எதிர்பார்ப்பது வாக்குகளைத்தான்.

இத்தகைய புரோக்கர் அரசியலுக்கு தம்மை புலிகள் தடை செய்ததுதான் காரணம் என்று இக் கட்சிகள் நியாயம் கூறுமானால் அதனை கின்னஸில் பொறிக்கக்கூடிய தமாஷாகவே நோக்க வேண்டியிருக்கும்.

இக் கட்சிகளது இன்றைய வீழ்ச்சிக்கு காரணம், இவற்றின் அபிலாசைகள் பாராளுமன்ற நாற்காலிகளை மட்டுமே குறிவைப்பதாக மாறியதேயாகும்.

இந்த அபிலாசையானது அமைச்சர் பதவிகள், முதலமைச்சர் பதவி, மாகாணசபை அமைச்சர்கள் பதவி என்று வளர்ந்து கொண்டு செல்கிறது.

இந்த ஆசைகளை நிறைவேற்ற வேண்டுமானால் தமது உறுப்பினர்களையும் இந்த ஆசைகள் கொண்டோராகவும், மக்களை ஏமாற்றும் அரசியலுக்கு தோதானவர்களாகவும் இக் கட்சிகள் மாற்றியாக வேண்டியுள்ளது.

இந்நிலையில் மேலும் 'புரோக்கர் அரசியலில்' ஊன்றி நிற்பதுடன், மிச்சம் மீதியாக ஏதாவது நல்ல அம்சங்கள் தம்மிடம் இருந்தால் அவற்றையும் தூக்கி எறிவதைத் தவிர இக் கட்சிகளுக்கு வேறு மார்க்கமில்லை.

பந்தா, பகட்டு தம்மை சந்திக்க பலர் காத்திருப்பதில் விருப்பு, ஆட்சியில் உள்ளோருடன் பரிச்சயம் இருப்பதில் பெருமை, போன்ற முன்னாள் புரோக்கர் அரசியல்வாதிகளது அத்தனை குண நலன்களும் இன்றைய பாராளுமன்ற வாத தமிழ்க் கட்சிகளால் மொத்தக் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளன.

எனவே, இவர்கள் இந்த சூழலில் இருந்து மீண்டுவரமுடியாதவர்களாக இருக்கின்றனர். அவ்வாறு மீண்டுவர முற்பட்டாலும் இப்போது இவர்களால் உருவாக்கப்பட்டுள்ள சூழல்கள் இவர்களை மீள்வதற்கு அனுமதிக்காது.

முகஸ்துதி, கண்மூடித்தனமான போலி விசுவாசிகள், எடுபிடிகள் போன்ற சூழல்களில் தமிழ்க் கட்சி தலைமைப் பீடங்கள் பலவும் கிறங்கிப்போயுள்ளன. இந்தப் பள்ளத் தாக்கிலிருந்து இவை எழுவது இயலாத ஒன்றாகும்.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

# படையில் தமிழ் இளைஞர்கள்

## கதை கதையாம் காரணமாம்

"இலங்கை இராணுவத்தில் தமிழ் இளைஞர்களை சேர்க்கத் திட்டம்!"

இப்படியொரு செய்தி பத்திரிகை ஒன்றில் வந்ததும், தமிழ்க் கட்சிகள் போட்டி போட்டு கூறிய கருத்துக்கள் இருக்கிறதே, அம்மாடி யோவ், இவர்கள் அன்றோ சிந்தனையாளர்கள். இப்படியான கட்சிகள் இருக்கையில், தமிழ் மக்கள் நிம்மதியாக மெல்ல இனி சாகலாம்.

இப்போதெல்லாம் பத்திரிகைகளைப் பார்த்துத்தான் தமிழ்க் கட்சிகள் அரசியல் பண்ணுகின்றன. சகலராலும் பேசப்படக்கூடிய செய்திகள் என்று தெரிந்தால், அவை பற்றி விழுந்தடித்து கருத்துக் கூறி தம் பெயரை பிரபலப் படுத்துகின்றன.

சகல தமிழ்க் கட்சிகளுமே அரசுடனும், படையுடனும் நட்பாக, அவர்களுக்கு பெரும் துணையாகவே இருந்து வருகின்றன.

அவ்வாறிருந்தும் படையில் தமிழ் இளைஞர்களை சேர்க்கப்போவதாக அறிவிப்பு விடுவது பற்றிக்கூட இக் கட்சிகள் எதற்கும் முன்கூட்டியே தெரிவிக்கப்படவில்லை. அந்தளவுக்கு இருக்கிறது மரியாதை.

ஒரு செய்தி வெளியாகிறது என்றால் அதன் நோக்கம் என்ன? அது வெளியாகும் பின்னணி என்ன? சூழல் என்ன என்பதையெல்லாம் தீர ஆராய்ந்து திட்டவட்டமான கருத்தை மக்களுக்கு முன்வைப்பதற்கே அரசியல் கட்சிகள் தேவைப்படுகின்றன.

தமிழ்க் கட்சிகள் கூறிய கருத்துக்களைப் பார்ப்போம்:

'இது ஒரு கண்துடைப்பு' என்றது கூட்டணி. 'இது ஒரு கேலிக்கூத்து' என்றது ஈ.பி.ஆர்.எல்.எஃப். 'தமிழர்களுக்குள் தமிழர்களை மோதவிடும் செயல்' என்றது ஈ.பி.டி.பி. 'தமிழ் மறவர்கள் படையில் சேரக்கூடாது' என்றது புளொட்.

அதாவது, படையில் தமிழ் இளைஞர்களைச் சேர்க்க உண்மையாகவே ஒரு திட்டம் இருப்பதுபோல, குறிப்பிட்ட பத்திரிகைச் செய்தியை வைத்து மட்டுமே கற்பனை பண்ணிக் கொண்டு கருத்துக் கூறியுள்ளனர்.

அப்படி ஒரு திட்டம் அரசுக்கு உண்டா என்று தாமாக அறியக்கூட இந்த 'பொறுப்பு வாய்ந்த' (?!) கட்சிகள் முயற்சிக்கவில்லை.

மொத்தத்தில் தாமும் ஏமாந்து, தமிழ் மக்களுக்கும், உலகுக்கும் அம்பலமாக்க வேண்டிய நாடகம் ஒன்றையும் தவறவிட்டுள்ளன இக் கட்சிகள்.

தமிழ் இளைஞர்களை படையில் சேர்ப்பது என்று உண்மையாகவே தீர்மானம் எடுக்கப் பட்டிருந்தால், அதனை அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்க வேண்டும்.

நாடு முழுக்க அதற்கான நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டிருக்கும். போதிய முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கும்.

சிங்களவர் ஒருவர் படையில் சேர்வதானால் சிங்களம் மட்டும் தெரிந்தால் போதும். தமிழர் ஒருவர் சிங்களம் தெரியாது படையில் சேர முடியுமா? எனவே சேருவதற்கான தகுதிகள் அறிவிக்கப்பட்டிருக்கும்.

இதுதான் அரச படைக்கு புதிதாக ஆட் சேர்ப்பதற்கான ஆரம்ப ஏற்பாடுகளாக இருந்திருக்கும்.

இவை எதுவுமே இல்லாமல், திடீரென்று யாழ்ப்பாணத்தில் படைக்கு ஆட்சேர்ப்பு என்று செய்தி வருகிறது. சாவகச்சேரியிலும், அரியாலையிலும் நேர்முகப் பரீட்சை என்று சிரிக்காமல் ஜோக்கடிக்கிறார்கள்.

'பொலிசுக்கு ஆள்சேர்க்கத் திட்டம்' என்று கூறியிருந்தாலாவது ஓரளவு நம்பியிருக்கலாம். ஆயுதப் படைக்கு தமிழர்களை சேர்க்கப்போகிறார்கள் என்றால் முட்டாள்கூட நம்பமாட்டானே, இந்த தமிழ்க்கட்சிகள் நம்பி வியாக்கியானங்கள் கூறிவிட்டனவே.

கேந்திர முக்கியத்துவம் உள்ள பகுதிகளில் சாதாரண தமிழர்கள் சிவில் உத்தியோகத்தர்களாக பணியாற்றவே முடியாத நிலை இருக்கிறது. ஒரு கோடு கீறினால்கூட வரைபடம் தயாரித்ததாக கூறி உள்ளே கொண்டுபோய் வைத்துவிடுகிறார்கள்.

படைகளில் அரிதாக உள்ள தமிழர்கள் கேந்திர பகுதிகளில் இருந்து மாற்றப்பட்டுள்ளனர். பொலிஸ் பிரிவில் தமிழர்களுக்கு பதவி உயர்வே பிரச்சனையாக இருக்கிறது. பல தமிழ்ப் பொலிசார் அவ்வப்போது கைதாகி உளவதைகளுக்கு பின்னர் நிரபராதிகளாக விடுதலையாகினர்.

'படைக்கு ஆள் சேர்ப்பது என்றால் சண்டை பிடிப்பதற்காக மட்டுமல்ல, வேறு வேலைகளுக்கும் ஆட்கள் தேவைப்படுகிறார்கள்' என்று படை அதிகாரி ஒருவர் கூறியதையும் கவனிக்க வேண்டும்.

ஆகவே, படையில் தமிழ் இளைஞர்களை சேர்க்கப்போவதாக கூறப்பட்டது கொள்கை முடிவல்ல. உண்மையான அறிவித்தலுமல்ல.

கொசோவோ பிரச்சனையில் செர்பிய இராணுவ அம்பலமானதற்கு காரணம் என்ன? அது செர்பியர்களை மட்டுமே கொண்ட இராணுவமாக இருப்பதனால், கொசோவோ அல்பேனியர்களை அது கொன்று குவிக்கிறது என்பதை உலகம் நம்புகிறது.

இதனை சர்வதேச அரங்கில் தமக்கு சாதகமாக எடுத்துக்கொண்ட புலிகள், இலங்கை ஆயுதப் படைகளை செர்பியப் படைகளோடு ஒப்பிட்டு பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளனர்.

இப்பிரசாரம் பாரிசில் உதவி வழங்கும் நாடுகளது கூட்டத்திலும் எதிரொலிக்கலாம் என்று அரசு அஞ்சுகிறது.

பாரிசில் கூடும் நாடுகளில் பல கொசோவோவில், இருந்து செர்பிய இராணுவம் வெளியேற வேண்டும் என்று கோரும் நாடுகளாகும்.

எனவே, செர்பிய இராணுவம் போல தமது படைகளையும் கருதக்கூடிய சூழல் ஏற்படாது தடுக்கவும் இந்த திடீர் அறிவித்தல்.

இதனைக் கண்டுபிடிக்க திறமை எதுவும் தேவையில்லை. கொஞ்சம் பொறுப்புடன் யோசித்துப் பார்த்தாலே புரியும்.

இந்த உண்மையை நெத்தியடியாக தமிழ்க் கட்சிகள் எடுத்துரைத்திருந்தால் அரசு திணறியிருக்கும்.

அதைவிடுத்து, உண்மையாகவே படையில் ஆட்களை சேர்க்க அரசு முயற்சிப்பது போல ஒரு எண்ணத்தையே தமிழ்க் கட்சிகளது கருத்துக்கள் ஏற்படுத்தியுள்ளன.

தமிழ் இளைஞர்கள் பெருமளவாக படையில் சேர முன்வந்தால்கூட, படையினர் பக்குவமாக திருப்பி அனுப்பிவிடுவார்கள். எனவே, படையில் தமிழ் இளைஞர்கள் சேர முன்வருவார்களா? என்ற ஆராய்ச்சிக்கே போக வேண்டாம்.

ஆனால் இந்த தந்திரத்தை அம்பலமாக்க முதுகெலும்பு இல்லாவிட்டாலும், இன்னொரு காரியமாவது செய்யலாமே.

படையில் தமிழ் இளைஞர்களை சேர்க்க முன்வந்தது உண்மையானால், வவுனியாவில் தடை முகாம் ஏன்? 'பாஸ்' முறைகள் ஏன்? குடாநாட்டில் தனியான அடையாள அட்டைகள் ஏன்? அனைத்தையும் இரத்துச் செய்யுங்கள் என்று கோரலாம்.

படையிலேயே தமிழர்கள் யார், புலிகள் யார்? என்று இனம் கண்டு சேர்க்க முடியும் என்றால், புலிகளை இனம் காண்பது கஷ்டம் என்பதால் தான் பாதுகாப்பு விதிகள் கெடுபிடிகளாக உள்ளன என்ற கூற்று இனிச் செல்லாது தானே?

இக் கேள்வியை தமிழ்க் கட்சிகள் தூக்கிப் பிடித்தால், பொல்லைக் கொடுத்து அடிவாங்கிய கதையாக அரசு கலங்கிப்போகும். ஆனால் தமிழ்க் கட்சிகள் அதற்குத் தயாரா?

## உண்மைத் தொடர்

# இடி அமீன்

## அதிர் இடி 61

தருவது ரசிகன்

**கடந்தவாரம்**

**அமீனின் 'கக்வா' இனப் பெண்ணை பலாத்காரம் புரிந்த நுபிய இன மேஜர் சுட்டுக் கொல்லப்பட்டு அவன் தலையும் வெட்டிப் போடப்பட்டது. அமீனுக்கு வேண்டப்பட்ட பெண் மந்திரவாதி, தன் இஷ்டப்படி அமீனையும் ஆட்டிப்படைத்தாள். அமீனுக்கு உடல் சுகம் கொடுத்து அவனை கிறங்கடித்தாள்.**

**இனி....**

பெண் மந்திரவாதியை சந்திப்பது என்றால், முன்கூட்டியே அறிவித்துவிட்டுத்தான் அமீன் செல்லுவான்.

அன்று மட்டும் முன்னறிவிப்பு எதுவுமின்றி தனது பரிவாரங்களுடன் வந்திறங்கினான் அமீன்.

அமீனைக் கண்டதும் அங்கு இருந்த மந்திரவாதியின் உதவியாளர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

உள்ளே அவளது பூஜை அறைக்குள் அமீன் சென்றால், அங்கு நடக்கும் லீலையை கண்டுவிடுவானே என்று நினைத்தபோதே, அவர்களுக்கு உடம்பெல்லாம் உதறல் எடுத்தது.

அவர்கள் தம்மை சுதாகரித்துக் கொள்ள முன்னரே அமீன் அவளது அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

அமீனை தடுக்கும் துணிச்சல் யாருக்கு வரும்? உதவியாளர்கள் இயக்கமற்றவர்களாக நின்று கொண்டிருந்தனர்.

அங்கே பூஜை அறையில் தன் உதவியாளரான இளைஞனுடன் கட்டிப்புரண்டு கொண்டிருந்தார் அந்த மந்திரவாதி.

தன் உதவியாளர்களில் சிலரை தன் உடல் இச்சையைத் தணிப்பதற்காகவே விசேஷமாகத் தெரிவு செய்து வைத்திருந்தாள்.

பூஜை அறைக் கதவை அவசரத்தில் தாழ்போட மறந்துவிட்டனர்.

தரையில் அவள்மீது அந்த இளைஞன் செயற்பட்டுக் கொண்டிருந்தான். அவளது கரங்கள் அவனது தோளை அழுத்தமாக பற்றியிருந்தன.

அமீன் அறைக் கதவைத் தள்ளியபோது, அவளது முனகல் சத்தம்அமீனது காதுக்குள் விழுந்தது.

தரைக்குப் பார்வையை எறிந்த அமீன் முதலில் திகைத்துப் போனான், அடுத்து கோபமுற்றான். பின்னர் அவர்களது செயற்பாட்டை குரூரமான இரசனையுடன் சில நிமிடங்கள் உற்று நோக்கினான்.

அந்த இளைஞனின் ஒவ்வொரு அசைவுக்கும் அவளிடம் தெரிந்த பிரதிபலிப்பும் முனகல்களும், கண் சொருகியபடி அவள் கிடந்த பாங்கும் அமீனுக்குள் தீ வைத்தது.

தன்னோடு அவள் அவ்வாறு நடந்து கொண்டதில்லை. அவள்தான் தன்னை ஆட்டுவித்திருக்கிறாள். அந்த இளைஞனை மட்டும் அவன் இஷ்டப்படி தன் மீது அனுமதித்திருக்கிறாள். அமீனுக்கு கோபம் உச்சியில் ஏறியது.

அந்த அறையில் கிடந்த பாத்திரம் ஒன்றை தன் காலால் ஒரு உதை உதைத்தான்.

பெரும் சத்தம் எழுப்பிக் கொண்டு அந்தப் பாத்திரம் உருண்டுபோனது.

அந்தச் சத்தத்தில் திகைப்புற்று அவர்கள் இருவரும் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தனர்.

அமீனைக் கண்டதும் இருவருக்கும் இதயத்துடிப்பே நின்றுவிடும் போலிருந்தது. அதிலும் மந்திரவாதிக்கு காலின்கீழ் பூமி நழுவிக்கொண்டிருந்தது. அப்படியே தொப்பென்று தரையில் வீழ்ந்து போனாள்.

தன் காலை யாரோ இழுப்பதுபோல இருக்க, அமீன் குனிந்தபோது, அவனது கால்களை கட்டிக் கொண்டிருந்தான் அந்த இளைஞன்.

எப்போது காலில் வந்து விழுந்தான் என்பது அமீனுக்கே தெரியவில்லை.

அமீனின் கவனமெல்லாம் அவள்மீதே இருந்தது. அவள் உண்மையாகவே மூர்ச்சையாகிப் போனாளா? அல்லது நடிக்கிறாளா? என்று சந்தேகமாக இருந்தது.

தன் காலில் கிடந்தவனைப் பார்த்த அமீன்; **"இது எத்தனை நாளாக?"** என்று கேட்டான்.

அவன் தங்குதடையில்லாமல் சகலதையும் ஒப்புவித்தான். தன்னை வேலைக்கு சேர்த்துக் கொண்டதே அதற்காகத்தான் என்றான்.

வேலைக்குச் சேரும்போது தன் ஆண்மையை அவள் பரிசோதித்த கதையையும் கூறினான். அது கிளுகிளுப்பான கதைதான். அமீனுக்கோ கோபத்தைக் கிளறும் கதையாக இருந்தது.

**"என்னிடமே விளையாட நினைத்தீர்களே! உங்களுக்கு எத்தனை துணிச்சல்?"** என்று தன் கால்களை உதறி, அவனை முகத்தில் உதைத்தான்.

பூஜை அறையை வெளியே தாழிட்டுவிட்டு, தன் மெய்க்காவலர்களை அழைத்தான்.

வெளியே இருக்கும் மந்திரவாதியின் உதவியாளர்களை அறை ஒன்றுக்குள் போட்டு பூட்டுமாறு உத்தரவிட்டான். இப்படித்தான் ஏதாவது விபரீதம் நடக்கும் என்று தெரிந்து உதவியாளர்களில் இரண்டுபேர் அங்கிருந்து நைசாக தப்பிச் சென்றுவிட்டனர்.

அமீன் கோபத்தில் நிதானம் இழந்திருந்ததால், உதவியாளர்கள் எல்லோரும் இருக்கிறார்களா? என்று சரிபார்க்கவில்லை.

தன்னை முட்டாளாக நினைத்தவர்களுக்கு கடும் தண்டனை கொடுத்தாக வேண்டும் என்ற சிந்தனை மட்டுமே அவன் மனதில் ஓங்கியிருந்தது.

**"யாரும் வெளியே தப்பிச் செல்ல முடியாதபடி கதவுகள் சன்னல்கள் அனைத்தையும் மூடுங்கள். மூடிவிட்டு இந்த கட்டிடத்தை தீ வைத்து அழியுங்கள்!"** என்று கத்தினான்.

அமீனின் மெய்காப்பாளர்களுக்கு அவனது உத்தரவு புதிராக இருந்தது. தனது நட்புக்குரிய மந்திரவாதியின் இருப்பிடத்தை அழிக்குமாறு ஏன் கூறுகிறான் என்று கேள்வி எழுந்தது.

உத்தரவை நிறைவேற்ற வேண்டியது தானே அவர்கள் வேலை. அமீன் சொன்னபடியே தீ வைத்தனர்.

தீ பரவிக் கொண்டிருந்தபோதுதான் மந்திரவாதி மயக்கம் தெளிந்து எழுந்தாள். அந்த இளைஞன் குறுக்கும் நெடுக்குமாக ஓடித்திரிந்து குழந்தைபோல தேம்பியழுவதைக் கண்டாள்.

"அதிபர் வந்தார். அறையைப் பூட்டிவிட்டுப் போய்விட்டார். எங்களைக் கொல்லப் போகிறார்கள்!" என்று அவன் அழுதபடியே கூறினான். தீ பரவிக் கொண்டிருப்பதை அவன் அறியவில்லை.

அறிந்தபோது அவன் அலறுவதற்கே வாய்ப்பிருக்கவில்லை. கூரை பெயர்ந்து அவன் தலையில் விழுந்தது. அவன் தலை உடைந்தது.

மந்திரவாதிதான் கத்தினாள். தன்னை யாராவது காப்பாற்றுமாறு தன் சக்தி அனைத்தையும் திரட்டிக் கத்தினாள்.

வேறு ஒரு அறையில் பூட்டப்பட்டுக் கிடந்த அவளது உதவியாளர்களது மரண ஓலத்திற்குள் அவளது குரல் அமுங்கிப்போனது.



பற்றி எரியும் தீயின் நாக்குகள் அந்த மாளிகையை விழுங்கிக் கொண்டிருப்பதை எட்டத்தில் தன் காருக்குள் இருந்து இரசித்துக் கொண்டிருந்தான் அமீன்.

'மந்திரவாதியின் மாளிகையில் தீ விபத்து! 12 பேர் கருகி மாண்டனர்' என்று செய்திகள் வெளியாகின.

இடி அமீனுக்குத் தெரியாமல் தப்பிச் சென்ற மந்திரவாதியின் இரு உதவியாளர்கள் மூலம், அது விபத்தல்ல; திட்டமிட்ட செயல் என்பது படிப்படியாக மக்களுக்கு தெரிய வந்துவிட்டது.

எங்கும் பயமும், நம்பிக்கையற்ற நிலையுமே காணப்பட்டது. தங்கள் உயிருக்கு ஒரு தோட்டாவின் மதிப்புக்கூட கிடையாது என்பது உகண்டா மக்களுக்குத் தெரிந்திருந்தது.

உகண்டாவின் அரசியல் நிர்வாக இயந்திரம் முற்று முழுதாக சீர்குலைந்து கிடந்தது.

நாட்டிலிருந்த புத்திஜீவிகள் வெளியேறியதால் ஒன்றுக்கும் உதவாத கூட்டமே நிர்வாகப் பதவிகளில் அமர்ந்திருந்தது.

உகண்டாவின் தலைநகரான கம்பாலாவில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

கம்பாலாவுக்கான நீர்விநியோக நிலையம் களபாவில் இருந்தது. அந்த நிலையத்தை பல வருடங்களாக சரியாக பராமரிக்கவில்லை. அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை, அதிகாரிகள் சிலர் விழுங்கிக் கொண்டிருந்தனர்.

பராமரிக்கப்படாது அந்நிலையம் பழுதடைந்தமையால், நீர் விநியோகம் தடைப்பட்டது.

மருத்துவமனைகளுக்குக்கூட தண்ணீர் கிடைக்கவில்லை. கம்பாலா எங்கும் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாடியது.

மோட்டார் தாங்கி வாகனங்களில் தண்ணீர் கொண்டுவந்து வீடு வீடாகக் கொடுத்தனர்.

வீடொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு சிறு பாத்திரங்களில் குடிநீர் வழங்கப்பட்டது. பிஞ்சுக் குழந்தைகள் தாகத்தில் தவித்தன.

அமீனது மனைவிமார்களது வீடுகளுக்கும், இராணுவ அதிகாரிகளது வீடுகளுக்கும் தேவையானளவு தண்ணீர் விநியோகிக்கப்பட்டது.

மருத்துவமனையில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்த போதும், இராணுவ முகாம்களுக்கு போதிய குடி நீர் கொடுக்கப்பட்டது.

நீர் விநியோகம் சீர்குலைந்தமையால் தொற்று நோய்கள் பரவத் தொடங்கின.

சுகாதார அமைச்சர் சியம்பாவுக்கு அமீனிடம் இருந்து திடீரென்று அழைப்பு வந்தது.

அமீனின் ஜனாதிபதி மாளிகைக்கு எதிராகவே சுகாதார அமைச்சின் காரியாலயம் இருந்தது.

அதனால் அமீன் அழைக்கும் போதெல்லாம் சியம்பா சென்றுவிட இலகுவாக இருந்தது.

அமீனின் பிள்ளைகளில் ஒருவருக்கு தொற்றுநோய் பீடித்திருந்தது.

**"உள்ளதில் சிறந்த டாக்டராக ஒருத்தரை அனுப்பிவையுங்கள். அப்படி யாரும் இல்லையானால் வெளிநாட்டிலிருந்து தருவிக்க ஏற்பாடு பண்ணுங்கள்!"** என்றான் அமீன்.

தலைநகரில் தொற்று நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஒரு வார்த்தை கூட அமீன் கேட்காதது சியம்பாவுக்கு எரிச்சலாக இருந்தது.

"இங்கேயே தகுந்த டாக்டரை ஏற்பாடு செய்கிறேன்" என்று எரிச்சலை மறைத்துக் கொண்டு பதில் கூறினார்.

**"நம் நாட்டிலும் நல்ல டாக்டர்கள் இருக்கிறார்களா?"** என்று கேட்டு அமீன் சிரித்தபோது, சியம்பாவுக்கு வாழ்க்கை வெறுத்துப் போனது.

தனது நாட்டு டாக்டர்களை இளக்காரமாகக் கருதும் ஒருவன் அதிபராக இருப்பதை எண்ணி உள்ளூர கடும் கவலையுற்றார்.

சியம்பா அமீனுடன் பேசிக் கொண்டிருந்தபோது வெளிநாட்டுக் கம்பனி முகவர் ஒருவர் அங்கு வந்தார்.

அவரது பெயர் 'ஸிக்லர்' என்று அமீன் அறிமுகம் செய்தான். இன்னுமொரு 'போயிங்' விமானம் வாங்குவதற்கு பேரம் நடத்தவே அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

அச் செய்தி சியம்பாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கையில் 'போயிங்' விமானம் வாங்க பணத்தைக் கொட்ட வேண்டுமா?

அமீன் பைத்தியம் பிடித்த ஒருவன்போல பொறுப்பற்று செயற்படத் தொடங்கிவிட்டான்.


'இனி பேரழிவுதான். உகண்டா மக்களை இனி யாராலும் காப்பாற்ற முடியாதா?' என்னும் அச்சமே சியம்பாவை ஆட்டிப் படைத்தது.

அந்தப் பேரம் முடிந்ததும் நிகழ்ந்த இன்னொரு சம்பவத்தால் சியம்பா அடியோடு பொறுமை இழந்தார். என்ன நடந்தாலும் பரவாயில்லை என்றஅசட்டுத் துணிச்சலோடு தனது கருத்தைக் கூறவும் செய்தார்.

(இடி தொடரும்)

# ரஜினி யார் பக்கம்?

இந்தியாவில் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது. தமிழ்நாட்டில் இம்முறையும் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அதிக ஆசனங்களை கைப்பற்றுமானால், மறுபடி தி.மு.க. ஆட்சிக்கு ஆபத்து ஏற்படும்.




சென்றமுறை அ.தி.மு.க. தமிழ்நாட்டில் 18 தொகுதிகளில் வெற்றிபெற்றது. தி.மு.க. ஆறு தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது.

இம்முறையும் காங்கிரஸ் கட்சியோ, பாரதிய ஜனதாவோ தனியாக ஆட்சியமைக்க முடியாத நிலைதான் ஏற்படும். எனவே அதிக எம்.பி ஆசனங்களை கைப்பற்றும் மாநிலக் கட்சிகளுக்கு மவுசு தோன்றும்.

வாஜ்பேய் அரசை ஜெயலலிதா தன் சுயநலத்திற்காக கவிழ்த்து விட்டார். அதனால் கிட்டத்தட்ட இருநூறு கோடி ரூபாய் செலவில் மற்றொரு தேர்தலை நாட்டின்மீது சுமையாக சுமத்திவிட்டார் என்பது பொதுவான அபிப்பிராயம்.

இந்த அபிப்பிராயம் வாஜ்பேயிக்கு அனுதாபமாக மாறக்கூடும். அதுமட்டுமன்றி சோனியா ஜெயலலிதாவுடன் கைகோர்த்ததால் அவரது புகழும் சேதமுற்றுள்ளது.

ஆனால் இவையெல்லாம் ஏனைய மாநிலங்களில் எதிரொலிக்கலாம். தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆரின் வாக்கு வங்கிகள் இந்த அபிப்பிராயங்களுக்கு செவிமடுக்காது, ஜெயலலிதாவுக்கே இம்முறையும் வாக்களிக்கலாம்.

எனவே, இம்முறை ஜெயலலிதாவை வீழ்த்த ரஜினி தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட வேண்டும் என்று தி.மு.க.வும், ஜெயலலிதா எதிர்ப்பாளர்களும் வேண்டி நிற்கின்றனர்.

ஆனால் தி.மு.க, தமிழக மாநில காங்கிரஸ் கூட்டணியை சென்ற முறை உருவாக்கியதில் ரஜினிக்கு முக்கிய பங்குண்டு. அந்தக் கூட்டணிக்காக பிரசாரமும் செய்தார்.

ஆனால் ரஜினியின் கருத்தைக் கேட்காமலேயே அந்தக் கூட்டணி தற்போது உடைந்து விட்டது.

கருணாநிதி மீதும், மூப்பனார்மீதும் மரியாதை உள்ளவர் ரஜினி. அதனால் அவர்கள் இருவரும் எதிர் முகாம்களில் நின்றால் யார் பக்கமும் சாயாது இருந்து விடுவார்.

ரஜினிக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் கிடையாது. ஆனால் தனது பட வெற்றிக்காக அந்த எதிர்பார்ப்பை தொடர்ந்து பயன்படுத்துகிறார்.

இறுதியாக வெளியாகியுள்ள படையப்பா படத்தில்கூட அரசியலுக்கு வருவாரா மாட்டாரா? என்று கூறாமல் பொடி வைத்துப் பேசி எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளார் என்றும் ஒரு சாரார் கூறுகிறார்கள்.

ரஜினி தனிக்கட்சி ஆரம்பிக்கப் போவதில்லை. கலைஞரும், மூப்பனாரும் எதிர் துருவங்களாக நின்றால் ரஜினி யாரையும் ஆதரிக்கவும் போவதில்லை என்று அவருடன் நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

# சபதம் போட்ட பணிப்பெண்

விமானப் பணிப்பெண்களுக்கு நடிகைகளுக்கு நிகரான மவுசு இருக்கிறது. அவர்கள்மீது சபலம் கொள்ளும் பெரும் புள்ளிகள் ஏராளம்.



விமானப் பணிப்பெண் ஒருவர் யாரும் எதிர்பாராதளவுக்கு கவர்ச்சி விருந்து படைத்திருக்கிறார்.

இங்கிலாந்து போக்குவரத்து நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் ஒன்றில் பணிப்பெண்ணாக இருப்பவர் ஆண்டிரியா ஓ.நெய்ல். வயது 31.


சம்பவதினத்தன்று அவர் பணிபுரியும் விமானம் இலண்டனிலிருந்து இத்தாலியிலுள்ள ஜெனோவா நகருக்கு பறந்து கொண்டிருந்தது.

அப்போது அந்த விமானம் குறிப்பிட்ட நேரத்தில் தரை இறங்காது என்று பயணிகளிடம் பந்தயம் கட்டினார் அப் பெண்.

ஆனால் பந்தயத்தில் அவர் தோற்றுப் போனார். லேசுப்பட்ட பந்தயமல்ல. குறிப்பிட்ட நேரத்தில் விமானம் தரையிறங்கினால் தனது உடலிலுள்ள ஆடைகளை தரையிறக்குவதாக பந்தயம் கட்டியிருந்தார்.

அதனால் தனது வாக்கைக் காப்பாற்ற விமான நிலையத்தில் பொது மக்கள் எதிரில் நிர்வாணமாக நின்று கலங்கடித்தார் அந்தப் பணிப்பெண்.

# முறிந்த காதல்



விளையாட்டு வீரர்கள் பலரது மண வாழ்க்கை திருப்திகரமாக இருப்பதில்லை. குறிப்பாக மேல் நாடுகளில் அடிக்கடி மன முறிவு ஏற்படுகிறது.

டென்னிஸ் உலகின் முன்னாள் முடிசூடா மன்னர் அகாசி. இவரது முடியலங்காரத்தையும், ஆட்ட அழகையும் தரிசிக்க பெண் ரசிகைகள் போட்டி போடுவார்கள்.

1996இல் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்றவர் அகாசி. மூன்று கிராண்ட் சிலாம் பட்டங்களையும் பெற்றவர்.

அகாசி உச்சத்தில் இருந்தபோது அவரை வளைக்க அழகிகள் பலர் வலைகள் வீசினர். ஆனாலும் அகாசியின் மனதை வென்றவர் பிரபல நடிகை புரூக் ஷீல்ட்.

டயானாவின் காதலரான டோடியுடனும் சில காலம் கிசுகிசுக்கப்பட்டவர்தான் இந்த புரூக் ஷீல்ட்.

அகாசியும், புரூக் ஷீல்ட்டும் 1997ம் ஆண்டு அமெரிக்காவில் திருமணம் செய்து கொண்டனர்.

ஆரம்பத்தில் பகிரங்கமாக முத்தம் கொடுத்துக் கொண்டு இலட்சியத் தம்பதியாக வலம் வந்தனர். இப்போது சரியாக இரண்டு வருடத்தில் விவாகரத்து செய்து பிரிந்து விட்டனர்.

இது பற்றி புரூக் ஷீல்ட் பின்வருமாறு குமுறியிருக்கிறார்; "நான் ஒரு குழந்தைக்கு தாயாக விரும்புகிறேன். ஆனால் அகாசியின் நிகழ்ச்சிப்படி அவர் வெளியே சுற்றித்திரிகிறார். எங்கள் தாம்பத்ய வாழ்க்கை எப்படி நடக்கும்."

சில விளையாட்டு வீரர்கள் பெண்களோடும் விளையாட்டுப் பிள்ளைகளாக நடந்து கொள்வதால் மனைவிமார் அவர்களை விவாகரத்து செய்கிறார்கள். ஆனால் அகாசி விஷயத்தில் கதையே வேறு. அவருக்கு தன் மனைவியை கவனிக்கக்கூட நேரம் இல்லை.

# ஊர்வசி திருமணம்



நடிகை ஊர்வசி மலையாள நடிகர் மனோஜ் கே.ஜெயனை காதலிப்பதாக கிசு கிசுக்கள் வெளியானதல்லவா. முரசிலும் வெளியானதைப் பார்த்திருப்பீர்கள்.

அந்தக் கிசுகிசு இப்போது உண்மையாகிவிட்டது. அவர்கள் இருவரும் கோவில் ஒன்றில் திருமணம் செய்து கொண்டனர்.

தம்பதியாக புகைப்படமும் எடுத்துக் கொண்டனர். திருமணத்தின் பின்னரும் ஊர்வசி தொடர்ந்து நடிப்பாராம்.

## திரும்ப வந்து சேரும்




↑ அமெரிக்கா விண்வெளியிலும் மேலாதிக்கம் பெறுவதற்கு பலகாலமாக போட்டியில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்காவின் பிரபல விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் பெயர்: 'நாசா'. நாசாவின் ஆராய்ச்சியில் சமீபத்திய சாதனையான நவீன ரொக்கட்டையே இங்கு காண்கிறீர்கள்.

விண்ணில் ஆராய்ச்சி செய்ய அனுப்பப்படும் செயற்கைக் கோள்களை ஏவுவதற்கு பயன்படும் ரொக்கட்டுக்கள் அவற்றை ஏவிவிட்டு தானாக அமிழ்ந்துவிடும். அத்தோடு அதன் உபயோகம் தீர்ந்தது. ஆனால் இந்த நவீன ஏவுகணை செயற்கை கோளை செலுத்திவிட்டு மறுபடி திரும்ப வந்து சேரும்.

இதற்கு 'எக்ஸ் 34' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஒலியைவிட எட்டு மடங்கு வேகமாக பறக்கும் வல்லமை கொண்டது. இது நாசாவின் சாதனைகளில் மற்றொரு மைல்கல் எனலாம்.


## சாதனை வீரர்

↓ உலகப் பிரசித்திபெற்ற ஐஸ் ஹொக்கி விளையாட்டு வீரராக கனடாவைச் சேர்ந்த வெய்னே கிரெட்ஸ்கி கணிக்கப்படுகிறார். உலகின் பல பாகங்களிலும் பல ஆட்டங்களில் பங்கேற்று மிக அதிகமான கோல்களை இவர் பெற்றுள்ளார். சாதாரண களத்தில் விளையாடுவதைவிட, ஐஸ்கட்டி களால் செய்யப்பட்ட ஆடுகளத்தில் ஹொக்கி விளையாடுவது கடினம்.


மிகக் கூடுதலாக 382 புள்ளிகளைப் பெற்றிருக்கிறார். ஒரு விளையாட்டுச் சீசனில் 122 கோல்களைப் போட்டதுடன்தான் சார்ந்த குழுவினர் 260 கோல்களைப் போட உதவியும் இருக்கிறார்.

1985ம் ஆண்டில் இடம்பெற்ற போட்டிகளில் இவர் பெற்ற புள்ளிகள் 47.16. இதில் கோல்களைப் பெற்றதற்காகவும் 31 கோல்கள் பெறுவதற்கு உதவியதற்காகவும் இத்தனை புள்ளிகள் கிரெட்ஸ்கிக்கு வழங்கப்பட்டன. பிறிதாக நடைபெற்ற 1253 போட்டிகளில் 837 கோல்களைப் போட்டதுடன் 1771 கோல்கள் பெறுவதற்கு உதவியிருக்கிறார்.

இதனால் உலக சாதனை 'ஐஸ் ஹொக்கி' வீரராக இடம்பிடித்துள்ளார். அதிக வருமானம் பெறும் ஹொக்கி வீரரும் இவர்தான். இவரது வருடாந்த வருமானம் எவ்வளவு தெரியுமா? 65 இலட்சம் டொலர். நம் மதிப்பில் 45 கோடியே 50 இலட்சம். யப்பா! இவரது புகழுக்கும், அழகுக்கும் மயங்கிய பெண்கள் பலர். அப்படியிருந்தும் இவரை மணந்திருப்பவர் சிரெஸ்கி என்னும் திரைப்பட நடிகை. கணவனும், மனைவியும் இணைந்து ஒரு விளையாட்டு சஞ்சிகைக்கு கொடுத்த போஸ்தான் இது. இதற்காக எத்தனை இலட்சம் டொலர்களை கறந்தார்களோ?!



## ஆயுதங்கள்



← செர்பியர்களால் கோசோவா மக்கள் இடம் பெயர வைக்கப்படுவதும், படுகொலையாவதும் உலகறிந்த செய்திகள். அகதி முகாமில் பரிதவிக்கும் 'கோசோவா' அகதிகளையே இங்கு காண்கிறீர்கள்.

இடம் பெயர வைப்பது, படுகொலைகள், பாலியல் பலாத்காரம் போன்றவையே இன ஒழிப்புக்கான ஆயுதங்களாக செர்பியர்களால் பயன் படுத்தப்படுகின்றன.

## கிரிக்கெட் காய்ச்சல்




↑ மே 14ம் திகதி 'கிரிக்கெட் உலகக் கோப்பை' போட்டிகள் ஆரம்பமாக முன்பே, உலகெங்கும் கிரிக்கெட் காய்ச்சல் வேகமாக பரவிவிட்டது. நம் நாட்டில்கூட பலதெருக்களில் நடமாடவே முடியாத நிலை.

இப்படத்தைப் பாருங்கள். இந்தியாவில் ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து போராடிய மன்னன் திப்புசுல்தானின் கல்லறை முன்பாக கிரிக்கெட் ஆடுகிறார்கள் சில இளைஞர்கள். இதில் துயரம் யாதெனில், திப்புசுல்தானின் கல்லறையை 'ஸ்டெம்ப்'ஆக பயன்படுத்தி தொலைக்கிறார்கள். கல்லறைமீது இருப்பவர்தான் விக்கெட் கீப்பராம்.

'கிரிக்கெட் காய்ச்சலில்' உண்மையான வீரர்களை இகழலாமா?

## அலங்கார மலை



↑ ஆடை அலங்கார அணிவகுப்புக்கள் உலகெங்கும் அடிக்கடி நடந்து வருகின்றன. புதிய வடிவங்களை அறிமுகப்படுத்திக் கொண்டே இருந்தால்தானே ஆடை விற்பனை ஏறிக் கொண்டிருக்கும். (ஆடைதான் ஏறக்கூடாது) ஜப்பானில் நடைபெற்ற ஆடை அணிவகுப்பில் சுமோ மல்யுத்த மலையான கோனோஷிசி என்பவர் நவீன ஆடையுடன் பார்வையாளர்களை கலங்கடிக்கும் காட்சி.

## படகோட்டிகள்




→ இலண்டன் மாநகரை ஊடறுத்து ஓடும் தேம்ஸ் நதியில் வருடா வருடம் படகு செலுத்தும் போட்டி நடைபெறுவதுண்டு. அந்நகரிலுள்ள இரு பெரும் பல்கலைக் கழகங்களான ஒக்ஸ்போட் மற்றும் கேம்பிரிஜ் பல்கலைக் கழகக் குழுக்களே இப் போட்டியில் பங்கெடுக்கின்றன.

இந்தப் போட்டி நடைபெறும் தினத்தன்று இலண்டன் மாநகரமே திருவிழாக்கோலம் பூணும். எந்தக் குழு வெல்லும் என்பதற்கான பந்தயம் பிடிப்போரும் தேம்ஸ் ஆற்றின் கரைகளில் கூடாரம் அடித்து இலட்சக்கணக்கான ஸ்டேர்லிங் பவுண்களைச் சம்பாதிப்பார்கள். தேம்ஸ் நதியில் ஏழு மைல் நீளமான பகுதியில் தான் படகோட்டும் போட்டி இடம்பெறும்.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் கேம்பிரிஜ் பல்கலைக் கழக வீராங்கனைகள் குழுவில் பங்கேற்ற இரு பெண்களையே இங்கு பார்க்கிறீர்கள்.

ஜோஷுவா வெஸ்ற் என்ற பெண்மணி 6 அடி 9 அங்குல உயரமுள்ளவர். வியான் ஷரிஃப் என்ற பெண் ஆக 5 அடி உயரமுடையவர். இவர்கள் .இருவரின் துடுப்பு வலிக்கும் பாங்கினை பார்வையாளர்கள் வெகுவாக இரசித்தனர். பெண்கள் நினைத்தால் சாதிப்பார்கள்.

## வினோத உருவம்



↑ சுண்டெலியின் தலையுமல்ல, கன்றுக்குட்டியின் தலையுமல்ல, அப்படியானால் இது என்ன? விடுகதை போல இருக்கிறதா.

இது அபூர்வமான தோற்றமுள்ள சேனைக் கிழங்கு. தமிழ்நாட்டிலுள்ள சென்னையில் முருகேசன் என்பவர் காய்கறிகள் வாங்கியபோது சேனைக்கிழங்குகளோடு இந்த வினோத உருவமான சேனைக் கிழங்கும் இருந்ததாம். முதலில் பார்த்ததும் பயந்து போயிருப்பார். பின்னர் தானும் வியந்து ஊருக்கும் காட்டியிருக்கிறார்.

திரையுலக மறுபக்கம் 103

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# காதலரோடு சென்றார் மந்த்ரா
# தயாரிப்பாளரே காதலரானார்

முன்னழகுகளின் எடுப்பால் ரசிகர்களை அலறடிப்பவர் என்று மந்த்ராவை பற்றி கூறுவார்கள். முன்னழகுகளை குறைப்பதற்கு சத்திர சிகிச்சை செய்ததாகவும் செய்திகள் வந்தன. பிரபு உட்பட வேறு சில நடிகர்களுடன் இணைத்தும் பேசப்பட்ட நடிகை மந்த்ரா.

மந்த்ரா தயாரிப்பாளர் ஒருவரோடு நட்பு வயப்பட்டதாக சினி வீசிட்டில் 'காதோடு சொல்லி' கேட்டிருப்பீர்கள். இப்போது மேடை போட்டுக் கூறுமளவுக்கு பகிரங்கமான சங்கதியாகி விட்டது.

மந்த்ரா இப்போது அசோக் சாம்ராஜ் என்னும் தொழிலதிபரின் கட்டுப்பாட்டில் இருக்கிறார். திருமணம் செய்ய உள்ளதாகவும் கூறுகிறார்கள்.

'ப்ரியம்' படத்தை தயாரித்தவர் அசோக் சாம்ராஜ். அப்படத்தில் மந்த்ரா அருண்குமார் இருவரும் ஜோடியாக நடித்தனர். அப்படத்தோடு உருவான நட்பு வெகு தீவிரமாகிவிட்டது.

இது பற்றி மந்த்ராவின் தாயார் நாகமணியும், தந்தை வெங்கடேஷனும் அழுதழுது பேட்டியளித்துள்ளனர். இவர்கள் தெலுங்கு மாநிலத்தவர்கள். மந்த்ரா தெலுங்குப் பெண்தான். பேட்டியை பாருங்கள்.

"எந்த அப்பா அம்மாவுமே தன் பொண்ணு கெட்டு போகணும் என்று நினைக்க மாட்டார்கள். உலகம் அறியாத எம் பொண்ணை என்னென்னவோ சொல்லி மூளைச் சலவை பண்ணியிருக்கிறார் அசோக் சாம்ராஜ். ஆனால் அதற்கு இடம் கொடுத்தது நாங்கள்தான்!" என்று சோகமாக கூறியிருக்கிறார் தந்தை.

"கணவன் மனைவியாகிய எங்களுக்குள்ளே அடிக்கடி சண்டைவரும். அப்போதெல்லாம் குடும்ப நண்பர் என்ற முறையிலும், எங்கள் மகளை கதாநாயகியாய் அறிமுகப்படுத்தியவர் என்ற முறையிலும் அந்தச் சண்டையை தீர்த்து வைப்பதற்கு முயற்சிப்பார் அசோக் சாம்ராஜ்.

இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக எங்கள் குடும்ப விஷயங்களில் அதிக உரிமை எடுத்துக்கொள்ள ஆரம்பித்தார்.

அப்போதெல்லாம் எங்கள் மகளை அவர் காதலிப்பது தெரியாமல் போனது. உண்மை தெரிய வரும்போது விஷயம் எல்லைமீறிப் போய் விட்டது.

அவரை வீட்டுக்குள் வரக்கூடாது என்று நாங்கள் சொன்னதற்காக, எங்களை சண்டைபோட்டு வீட்டைவிட்டு விரட்டினா எங்க பொண்ணு.

அதுமட்டுமல்லாமல் என் பையனையும் ஏதேதோ சொல்லி, சினிமா ஆசை காட்டி தன் பக்கம் இழுத்துக் கொண்டார் அசோக் சாம்ராஜ்.

## திருமண முயற்சி

நாங்கள் இரண்டுபேரும் அடிக்கடி சண்டை போட்டு பிரிந்துபோவதால்தான் இப்படியெல்லாம் நடக்கிறது என்று உணர்ந்து, நாங்கள் ஒன்றாகிவிட்டோம். ஆனால் அவரும் என் பையனும் பிடிவாதமாக இருக்கிறார்கள்.

ஹைதராபாத்தில் படப்பிடிப்பில் இருந்த மந்த்ராவை சேலத்திலிருந்த அசோக் சாம்ராஜ் போய் சந்தித்து திருமண மண்டபத்துக்கு அழைத்து போய்விட்டார். இதனை அசோக்கின் மனைவி புனிதாவே ஃபோன் பண்ணி எங்களுக்கு கூறினார்.

அதன்பின்னர் நாங்கள் அங்கு ஓடிப்போய் நடக்கவிருந்த கல்யாணத்தை தடுத்து நிறுத்தினோம். நாங்கள் காதலுக்கு எதிரியில்லை. நாங்களே காதலித்து கல்யாணம் பண்ணிக் கிட்டவங்கதான். ஆனால் அசோக் சாம்ராஜிக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகி இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. அவர் கல்யாணமாகாத ஆளாக இருந்தால் நாங்களே இந்த கல்யாணத்தை நடத்தி வைத்திருப்போம்.

இதுபோல் கல்யாணம் செய்த எத்தனை நடிகைகள் நன்றாக இருக்கிறார்கள்? இதெல்லாம் தெரியாதவள் அல்ல மந்த்ரா. அவளுக்கு காதல் கண்ணை மறைக்குது. விரைவில் உண்மையை உணர்ந்து எங்களைத் தேடி வருவா" என்று கண்ணீரைத் துடைத்தபடி கூறுகிறார் அம்மா நாகமணி.

## உண்மை என்ன?

இவர்கள் கூறுவதுதான் உண்மையா? என்று மந்த்ராவுடன் தொடர்புடைய சிலரை விசாரித்தபோது வேறு மாதிரியான தகவல்கள் கிடைத்தன.

மந்த்ராவின் தந்தை எப்போதும் நிறைபோதையில் மிதப்பவர். மகளை நடிக்க வைத்து, அவளது சம்பாத்தியத்தில் சொகுசு காண்பவர்.

அசோக் சாம்ராஜ் மட்டுமல்ல வேறு பலரும் தமது மகளோடு நெருங்கிப் பழகியதை அனுமதித்து, வருமானம் பார்த்தவர்கள்தான் மந்த்ராவின் தாயும், தந்தையும்.

அசோக் சாம்ராஜ், மந்த்ரா வீட்டிலேயே, மந்த்ராவின் அறையில் பல இரவுகள் தங்கிச் சென்றிருக்கிறார்.

அசோக் சாம்ராஜ் ஜாலிக்காக வந்து போவதாகவே மந்த்ராவின் பெற்றோர் நினைத்தனர். ஆனால் தன்னுடன் பழகும் ஏனைய ஆண்கள் தன் உடலை மட்டுமே உபயோகப் படுத்திவிட்டு போய்க் கொண்டிருக்க, அசோக் மட்டும் மனரீதியாகவும் ஆறுதலாக இருந்தது மந்த்ராவுக்கு பிடித்துப்போனது.

இதற்கிடையே இந்திப்பட உலக உயரமான கதாநாயகனும் மந்த்ராவுக்கு வாய்ப்புத் தருவதாகக் கூறி தன் விருப்பப்படியெல்லாம் ஆடவைத்தார். இத்தகைய வாழ்க்கை சலித்துப் போன நிலையில்தான் அசோக்குடன் வாழ்வதற்கு முடிவு செய்தார் மந்த்ரா.

மந்த்ராவின் பெற்றோருக்கு இச் செய்தி இடியாகியது. மகள் நடிப்புக்கு முழுக்குப் போட்டால், வருமானம் நின்றுவிடும். தவிர மந்த்ராவின் சொத்துக்கள் கைவிட்டுப் போகும்.

அதனால் அசோக்குடன் சண்டை போட்டனர். மந்த்ராவோடு கட்டிலை பகிர்ந்துகொள்ள அனுமதித்தவர்களுக்கு வாழ்க்கையை பகிர்ந்துகொள்ள அனுமதிப்பதற்கு இஷ்டமில்லை.

அசோக்கின் மனைவிக்கும் தகவலைக்கூறி உஷார் படுத்தி வைத்திருந்தனர். ஆனால் இவர்கள் அனைவரது எதிர்பார்ப்பையும் மீறி மந்த்ரா இப்போது அசோக் சாம்ராஜின் பாதுகாப்பிலேயே இருக்கிறார்.

## பதிலுக்கு பதில்

'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தில் அஜித்குமார் கௌரவ வேடத்தில் நடித்தார். என்ன கதை, தன் முக்கியத்துவம் இருக்குமா? என்றெல்லாம் பாராது நடித்தார்.

இப்போது அஜித்குமார் நடிக்கும் 'ஆனந்தப்பூங்காற்றே' படத்தில் கார்த்திக் கௌரவ வேடத்தில் தோன்றுகிறார். கார்த்திக்கும் கதை கேட்கவில்லை. அஜித்குமாரின் நட்புக்காக கார்த்திக் காட்டும் பெருந்தன்மை இது.



நெப்போலியன்-ப்ரீதா விஜயகுமார்
படம்: தாலாட்ட நான் பொறந்தேன்

## ஓய்வு

'அமர்க்களம்' படப்பிடிப்பு முடிந்ததும் மூன்று மாதம் ஓய்வெடுக்கப்போகிறார் அஜித்குமார்.

மூன்று மாதமும் வெளிநாட்டில் கழிக்க போகிறார். இம்முறை அழைத்துப் போக ஷாலினி இல்லை. வேறு யாரை அழைத்துப் போகப்போகிறாரோ?



மன்சூரலிகான்-கன்னியா
படம்: கொல கொலயா முந்திரிக்கா

## கலக்கல் முகர்ஜி

'ஹேராம்' படத்தின் பின்னர் தங்கருக்கு சவாலாக மாறிவிடுவாரோ? என்று தமிழ்ப் பட உலக நடிகைகளுக்கு கலக்கம்.

யாரிடம் கலக்கம்? ராணி முகர்ஜியிடம்தான் கலக்கம். இந்திப் பட உலகில் குறுகிய காலத்தில் பல ஆண்களை அழுக்கியவர் ராணி முகர்ஜி.

ஷாருக்கானின் மனைவி இவரைக் கண்டு பயப்படுவதை சென்றவாரம் தெரிவித்திருந்தோம்.

மனிஷா கொய்ராலா இந்தியில் நடித்தாலும் தமிழில் நடித்த பின்னரே பெரிதாகப் பேசப்பட்டார்.

அதேபோல 'ஹேராம்' தமிழிலும் வெளியானதால், ராணியும் மனிஷா போல இந்திப் பட உலகிலும் கலக்கல் நடத்துவார் என்று நம்பப்படுகிறது.

எதற்கும் துணிந்த ராணி முகர்ஜி தமிழ்ப் பட ரசிகர்களையும் கலக்கத் துணிந்துவிட்டார் என்பதற்கு இங்குள்ள காட்சிகளே சாட்சி.



ராணி முகர்ஜி

## இஷாமீது கார்த்திக் ஆர்வம்

கார்த்திக்குக்கு 'உள்ளத்தை அள்ளித்தா' மூலம் மறுபடி திருப்பம் கொடுத்தவர் சுந்தர்.சி. தற்போது இளம் நாயகர்கள் மத்தியில் சத்யராஜ், பிரபு, சரத்குமார், விஜயகாந்த் போன்றோர் சற்று பின்தங்கி விட்டனர். ஆனால் கார்த்திக் இளம் கதாநாயகர்களுடன் சவாலுக்கு நிற்கிறார்.

கைவசம் பல படங்கள் தொடர்ந்து அவரது படங்கள் வெளியாகி வருகின்றன. அண்மையில் தேவயானியுடன் நடித்த 'நிலவே முகம் காட்டு' வெளியாகி நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது.

சுந்தர். சி. தனது அடுத்த படத்தில் கார்த்திக்கை பிடித்துப் போட்டிருக்கிறார். படத்திற்கு 'காதல் சொல்ல வந்தேன்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

கதாநாயகியாக இஷாகோபிகர் நடிக்கிறார். கார்த்திக்குடன் இஷா ஜோடி சேருவது இதுவே முதற்தடவை. 'என் சுவாசக் காற்றே' படத்தை வீசிடியில் பார்த்திருக்கிறார் கார்த்திக். இஷாமீது ஒரு ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவரையே சிபாரிசு செய்திருக்கிறார்.

ஆனால் இஷா கோபிகர் ஒருவிதமானவர் என்று தகவல். அதனால் கார்த்திக்குக்கு ஏமாற்றம் கிட்டக்கூடும் என்கிறார்கள்.

## கோடியில் விளம்பரம்

விக்ரமன் இயக்க விஜயகாந்த் நடித்துவரும் 'வானத்தைப் போல' படத்திற்கு பிரமாண்டமாக விளம்பரம் செய்ய இருக்கிறார்கள்.

இரண்டு கோடி ரூபாய் விளம்பர செலவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் தயாரிப்பாளர் ரவி.

கலைப்புலி தாணுதான் முன்பு விளம்பரங்களுக்கு அதிக பணம் ஒதுக்குவார். அவரையே ஓரம் கட்டப் போகிறார் தயாரிப்பாளர் ரவி.

தற்போது ஓடிக் கொண்டிருக்கும் 'பெரியண்ணா' வசூலில் பாதகம் செய்ய வில்லை. அதனால் அடுத்த படமும் ஹிட்டானால் சரிவில் இருந்து மீண்டு விடுவார் விஜயகாந்த்.

## அலை பாயுதே

மணிரத்னம் இயக்க புதுமுகம் மாதவன் நடிக்கும் படம் 'அலைபாயுதே'. இப்படத்தின் நாயகி ஷாலினி.

இப்படத்தில் அரவிந்தசாமி கதாநாயகனாக நடிப்பார் என்ற ஊகங்கள் வெளியாகின. ஆனால் புதுமுகத்தை போட்டுவிட்டார் மணிரத்னம்.

'மௌனராகம்', 'நாயகன்', அக்னி நட்சத்திரம்', போன்ற படங்களில் மணிரத்னம், ஸ்ரீராம் கூட்டணி கலக்கியது. பின்னர் இருவரும் பிரிந்தனர். இப்போது மறுபடி கூட்டணி சேர்ந்துள்ளனர். 'அலை பாயுதே' படத்தை பி.சி. ஸ்ரீராம்தான் ஒளிப்பதிவு செய்கிறார்.

# மினி சினி

❑ முரளி-மீனா-சங்கவி மூவரையும் வைத்து பொற்காலம் படத்தை இயக்கிய சேரன், மீண்டும் இம் மூவரையும் வைத்து 'மாயமான்' என்ற புதிய படத்தை இயக்கப்போகிறார்.

❑ வினு என்ற இயக்குநரது புதிய மலையாளப்படத்தில் நடித்து வரும் மெகா ஸ்டார் மம்மூட்டி. அப்படத்தில் இடம்பெறும் பாடல் ஒன்றை சொந்தக் குரலில் பாடியுள்ளார்.

❑ ராமன் அப்துல்லா' போன்ற படங்களில் கதாநாயகியாக நடித்துள்ள ஈஸ்வரிராவ். தற்போது ராமராஜனின் பூ மனமே வா' படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார்.

❑ நாகார்ஜுன-சாக்ஷி நடித்த தெலுங்குப் படமொன்று, தமிழில் 'மீசைக்கார அண்ணே' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வந்தது. தற்போது அதன் பெயரை 'சத்திரிய தர்மம்' என்று மாற்றிவிட்டார்கள்.

❑ சத்யராஜ் நடித்த 'சேனாதிபதி' படத்தை இயக்கிய ரத்னகுமார் சொந்தப்படம் தயாரிக்கிறார். கஸ்தூரிராஜா இயக்கும் இப்படத்தில் நெப்போலியன்-குஷ்பு நடிக்கிறார்கள்.

❑ விஜய்-இஷா கோபிகர் ஜோடியாக நடிக்கும் 'நெஞ்சினிலே' படத்தில் இடம் பெறும் பாடல்காட்சி ஒன்று மொரீஷியஸில் படமாக்கப்பட உள்ளது.

❑ படவாய்ப்புக்களின்றி தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிவரும் கஸ்தூரி, கின்னஸ் சாதனைக்காகத் தயாராகும் 'சுயம் வரம்' படத்தில் சிறிய வேடத்தில் தலை காட்டியுள்ளார்.

❑ சத்யராஜ் நடித்து தமிழில் ஓரளவு வெற்றிபெற்ற 'கல்யாணக் கலாட்டா' தெலுங்கில் தயாராகவுள்ளது. சத்யராஜ் வேடத்தில் தெலுங்கில் சுப்ரீம் ஸ்டார் சிரஞ்சீவி நடிக்கிறார்.

❑ பிரபல இந்திப் பாடகி அனுராதா படுவால், 'கனவே கலையாதே' படத்தின் மூலம் முதன் முறையாக தமிழ்ப்படம் ஒன்றில் பாடியுள்ளார்.

❑ 'ஒருவன்' படத்தில் சரத்குமார் ஜோடியாக நடித்து வரும் பூஜா பத்ரா, ராஜீவ் மேனன் இயக்கும் 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்' படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கிறார்.

## அமெரிக்காவில் 'படையப்பா'

'படையப்பா' பழைய சாதனைகளை படையப்பா எனுமளவுக்கு இருப்பதாக கலைஞர் கருணாநிதி கூறியிருந்தார். படையப்பா' முன்னைய தமிழ்ப்பட சாதனைகளை உடைத்து வருகிறது.

தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெய் ஓட்டம். அமெரிக்கா, ஜப்பான்,கொரியா, இலண்டன்,கனடா போன்ற நாடுகளில் திரையிட ஏகப்பட்ட பிரதிகள் விற்பனை.

அமெரிக்கா போன்ற நாடுகளில் தமிழர்கள் அலைமோதுகிறார்கள். படம் இரவு 7 மணிக்கு என்றால் 6 மணிக்கே அலைமோதும் ஜனக் கூட்டம். ரஜினி தோன்றியதும் பூமாரி.

தமிழ் நாட்டைச் சேர்ந்த டாக்டர் சொக்கலிங்கம் என்பவரே படையப்பா படத்தை அமெரிக்காவில் திரையிடும் உரிமையை வாங்கியவர்.

இவ்வளவு செலவு செய்து ஒரு தமிழ்ப் படம் வாங்கி வெளியிட வேண்டுமா? என்று அவரது நண்பர்கள் கேட்டார்களாம். இப்போது அவர்களே அசந்து போய் நிற்கிறார்கள். அந்தளவுக்கு செமத்தியான வசூல்!


## பயங்கர விற்பனை

ராஜீவ் மேனன் இயக்கிய 'மின்சாரக் கனவு' படமும் வெற்றி. பாடல்களும் வெற்றி. அதனால் அடுத்த படமான 'கண்டுகொண்டேன், கண்டு கொண்டேன்' பட பாடல் கசட்டுகளுக்கு பலத்த வரவேற்பு. இதற்கும் ரகுமான்தான் இசை. இதுவரை இரண்டு கோடி ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. தயாரிப்பாளரான கலைப்புலி தாணுவுக்கு கலக்கல் சந்தோசம்.



## காதோடு சொல்லுகிறோம்

தேக்குமர தொழிலதிபரோடும், முன்னணி கதாநாயகனுடனும் பேசப்பட்ட இரண்டெழுத்து நடிகை பற்றி புதிய தகவல். தோல் பொருட்கள் ஏற்றுமதி செய்யும் நிறுவன அதிபருடன் சுற்றுலா போகிறாராம். தாய்க்குலத்தின் கட்டளைப்படிதான் இதற்கு பணிந்தாராம். பல இலட்சங்கள் வரும்போது விடுவானேன்? என்று கூறி தொழிலதிபரை தன்பராக்கிக் கொள்ள உபதேசித்தாராம் தாய்க்குலம். இதனால் நடிகர் கோபமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.



விஜயகாந்த்-மீனா
படம்: பெரியண்ணா

இந்திய அரச கவிழ்ப்பில் தமிழக கட்சி ஒன்றின் எம்பிகளை குஷிப்படுத்திய நடிகைகளில் ஒருவருக்கு, போட்டிக் கட்சி பிரமுகர் ஒருவரால் நெருக்கடி. சாதாரண நெருக்கடியல்ல. அன்பு நெருக்கடி. அந்த நடிகையும் அவரது அன்புக்கு கட்டுப்பட்டு இலவச கலைச் சேவை வழங்கியுள்ளாராம். அந்த நடிகை தொலைக் காட்சித் தொடர்களிலும் நடித்து வருகிறார். அந்தப் பிரமுகருக்கு இலவச சேவை வழங்காது விட்டிருந்தால் தொலைக்காட்சி வாய்ப்பும் பறிபோயிருக்குமாம்.

'நடிகர்களின் வீரம், தீரம் எங்கே, எந்தளவுக்கு என்பது எங்களுக்குத் தெரியும். மும்பாய் நடிகைகள் என்றால் ஏன் இவர்கள் இப்படி உருகிப் போகிறார்கள் என்பதும் தெரியும். வெளியே சொன்னால் எமக்கும்தான் வெட்கம்." என்கிறார் அந்த மூன்றெழுத்து தமிழ் நடிகை.

மூன்றெழுத்துப் பெயர் கொண்ட பிரபலமான தொலைக்காட்சித் தொடரில் 'பா' நடிகையை அநியாயமாக ஓரங்கட்டி விட்டனர். குறிப்பிட்ட தொடரின் இயக்குநர் மட்டுமன்றி, தொலைக்காட்சி நிறுவன முக்கியஸ்தர் ஒருவரையே சகஸ்யமான நடிகை தன் கைக்குள் சுருட்டிக் கொண்டாராம். 'பா'நடிகையும் பலரையும் அனுசரித்தவர்தான். ஆனால் சகஸ்யமான நடிகையின் இளமையைக் கண்டதும் அவரைப் புறக்கணித்துவிட்டனர். இதனால் வேறொரு தயாரிப்பாளரை மடக்கிப் பிடித்துள்ளார் 'பா' நடிகை.

'சிம்ம'நடிகைக்கு உற்சாக பானம் அருந்தும் பழக்கம் இருக்கிறது. பல தயாரிப்பாளர்களிடம் முற்பணம் வாங்கி விட்டு, படப்பிடிப்புக்கு செல்லாமல் இழுத்தடிக்கிறார். நியாயம் கேட்கப் போன தயாரிப்பாளரை போதையில் திட்டி விட்டாராம். தயாரிப்பாளர் சங்கத்தில் அதனை புகார் செய்ய முயன்றாராம் அந்தத் தயாரிப்பாளர். நடிகையின் நடன சுந்தரக் காதலர் தலையிட்டு புகார் செய்யாமல் தடுத்துவிட்டாராம்.

## ரவளிக்கு முத்தம்

ரவளிக்கு தெலுங்கு ரசிகர்கள்மீது மகாகோபம். கோபத்திற்கான காரணத்தை அவரே விளக்குகிறார்.

"ஆந்திராவில் முந்திரிக்குப் பக்கத்தில் ஒரு சின்னக் கிராமத்தில் படப்பிடிப்பு நடந்தது. நான் தங்குவதற்கும், ஓய்வு எடுப்பதற்கும் ஒரு வீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வேறொரு இடத்தை பார்வையிட படப்பிடிப்புக் குழு சென்றது. நானும் என் உதவியாளரான பெண்ணும் அந்த வீட்டிலேயே இருந்தோம்.

திடீரென்று இரண்டு நடிகர்கள் வீட்டுக்குள் புகுந்தனர். நான் எதிர்பாராத நேரத்தில் என்னை கட்டிப் பிடித்து எனக்கு முத்தம் கொடுத்து ஒரு வழி பண்ணிவிட்டனர். அச்சமயம் என் உதவியாளர் சத்தம் போடவே அவர்கள் ஓடிவிட்டனர்."

## ஆறு பாடல்கள்

'தாஜ்மஹால்' படத்தின் ஆறுபாடல்களும் ஏ.ஆர்.ரகுமான் இசையில் அற்புதம் என்கிறார் பாரதிராஜா. ஒரு பாடலை ரகுமானே பாடியிருப்பதும் இரட்டிப்பு சந்தோசம்.

புதுடில்லியிருந்து ரிச்சா சர்மா என்னும் பாடகியும் ஒரு பாடலை பாடியுள்ளார்.

தாஜ்மஹாலுக்கு கதை, வசனம் இரண்டும் மணிரத்னம் என்றே விளம்பரப்படுத்தப்பட்டது. ஆனால் கதையை மட்டும் கொடுத்து விட்டு ஒதுங்கிக் கொண்டார் மணி. இதனால் பாரதிராஜாவுக்கு வருத்தம் என்றாலும், வெளியே காட்டிக் கொள்ளாது மணியைப் புகழ்கிறார்.

## நிருபர் விஜய்

இந்தியாவின் சர்ச்சைக்குரிய முன்னாள் தேர்தல் ஆணையாளர் சேஷன். அவர் 'உதயா' என்னும் படத்தில் நடிக்க சம்மதித்திருந்தார். பின்னர் நடிக்காது நழுவிவிட்டார்.

இப்போது அவரது பாத்திரத்தில் தயாரிப்பாளர் பிரமிட் நடராஜன் நடிக்கிறார். 'உதயா' படத்தில் விஜய் கதாநாயகன். அவரது நண்பன் விவேக். இருவரும் பத்திரிகை நிருபர்களாக நடிக்கின்றனர். தயாரிப்பாளர் பிரமிட் நடராஜன் மணிரத்னத்தின் 'அலை பாயுதே' படத்திலும் நடிக்கிறார்.

## நிலவே முகம் காட்டு

'பூமணி', 'பூந்தோட்டம்' ஆகிய படங்களை இயக்கிய மு.களஞ்சியம் இயக்கியுள்ள படம் 'நிலவே முகம் காட்டு'. அண்மையில் திரைக்கு வந்திருக்கிறது.

மு.களஞ்சியம் தன் படங்களில் தொடர்ந்து தேவயானிக்கு வாய்ப்புக் கொடுத்து வந்திருக்கிறார்.

களஞ்சியத்திற்கும் தேவயானிக்கும் திருமணம் நடக்க உள்ளதாக வதந்திகள் கிளம்பியிருந்தன.

அப்படி ஒரு நோக்கம் களஞ்சியத்துக்கு கிடையாது. ஆனால் தேவயானியுடன் இனியில்லை என்றளவுக்கு ஈடுபாடு உண்டாம்.



முகப்பில்
ரஜினி
படம்: படையப்பா

பிரசாந்த்-சிம்ரான்
படம்: ஜோடி

## மர்மதேசம், ஜன்னல்

நம் நாட்டிலும் சக்தி ரி.வி மூலமாக வெற்றி நடை போட்டவை 'மர்மதேசம்' ஜன்னல், 'சாசனவு நேசம்' போன்ற தொடர்கள். இத் தொடர்கள் இப்போது தமிழ் நாட்டில் 'ராஜ்' ரி.வியில் ஒளிபரப்பாகின்றன. பலத்த வரவேற்பு. 'மர்மதேசம்' மூன்றாவது பாகமான 'சொர்ண ரேகை' தமிழ் நாட்டில் ஒளிபரப்பாகி வருகிறது.

பாலசந்தர் தொடர்கள் 'ராஜ் ரி.வி'யில் தற்போது ஒளிபரப்பாவதால், இங்கு சொர்ணவாகினி நினைத்தால் அவற்றை ஒளிபரப்பலாம். அவர்கள் செய்வார்களா? என்பது சந்தேகம்தான். பாலசந்தர் தொடருக்கு இங்கும் தனி மரியாதை.

## பல வேஷம்

எந்த வேசம் போட்டாலும் பொருந்தக்கூடியவர் சத்யராஜ். மணிவண்ணன் இயக்கும் 'ஆண்டவர்' (?) படத்தில் சத்யராஜுக்கு பல வேசங்கள். அதில் ஒன்று தந்தை பெரியார் வேசம்.

மணி வண்ணன், சத்யராஜ் இணைந்து தரப்போகும் இப்படத்திற்கு பலத்த எதிர்பார்ப்பு இருக்கிறது.


## இன்னொரு நாயகன்

'ரட்சகன்' படத்தை பிரமாண்டமாக இயக்கி கோட்டை விட்டவர் பிரவீன் காந்தி. இப்போது பிரவீன் காந்த் என்னும் பெயரில் சிறு திருத்த வேலை செய்துகொண்டு, 'ஜோடி' படத்தை இயக்கி வருகிறார்.

பிரசாந்த், சிம்ரான் ஜோடியாக நடித்து வரும் இப்படத்தில் இன்னொரு நாயகனும் நடிக்கப்போகிறார். அவர், அப்பாஸ்.

வி.ஐ.பி. படத்தின் பின்னர் இரண்டு ஹீரோ படங்களில் நடிக்கவே மாட்டேன் என்றார். ஆனால் தனிக் கதாநாயகனாக அவரை நடிக்க வைக்க ஆளில்லை. அதனால் முடிவை மாற்றிக்கொண்டிருக்கிறார்.

# அந்த ஒரு நொடி




↑ கிரிக்கெட் போட்டிகள் இப்போது யுத்தம் போலாகிவிட்டன. வீரர்கள் உயிரைக் கொடுத்து ஆட, இரசிகர்கள் மதம் கொண்டு நிற்கிறார்கள். அவுஸ்திரேலிய வீரர் லீமன் தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரரை 'ரன் அவுட்' செய்ய முயற்சிக்கையில், தென்னாபிரிக்க வீரர் சடுதியாகப் பாய்ந்து வந்து தரையில் புரண்டு அவரது கால்களுக்கு இடையே தன் துடுப்பைப் புகுத்தி கோட்டினை தொட்டுவிடுகிறார்.



# அந்த நாள் ஞாபகம்

↑ உலகக் கோப்பை போட்டியில் கிரிக்கெட் இரசிகர்களது கவனத்தை தன்பக்கம் ஈர்க்கும் கப்டன் அர்ஜுன் ரணதுங்கா. அவரது இளமைத் தோற்றமே இங்குள்ளது. இடமிருந்து வலமாக மூன்றாவதாக நிற்கிறார் ரணதுங்கா.

## ஏனோ இந்த நிலை?

வெள்ளைப் பறவை எல்லாம்
எம் வானில்
'வெள்ளி'ப் பறவைகளாய்
மாறியதும் ஏனோ?

துணையின்றி கூடின்றி
அந்தரத்தில் பறந்துகொண்டு

'அனல் முட்டை'
கொட்டுவதும் ஏனோ?
தீச்சுடரில் செம்மையெல்லாம்
எம் தேசமெங்கும்
சீறிப் பாய்வதும் ஏனோ?

இன்னிசைக் 'கருவி' ஒலியெல்லாம்
'சட்டச்சட', 'டும்டும் டுமீல்'
என்று காதைத் துளைப்பதும் ஏனோ?
தென்திசை மைவிழி மான்களெல்லாம்
எம்மைச் சிறுத்தையாய் கண்டு
நோக்குவதும் ஏனோ?

தெய்வத்தின் வாசலில்கூட
'சந்தேக பிறவிகளாய்'
கைவிலங்கு பூட்டப்படுவதும்
ஏனோ?

ப.ராதா-வவுனியா.

## ஒரு பூவரசும் கழியும் வாழ்க்கையும்

சாமத்தில் தெரிந்த ஒளி
மாறும் வாழ்வை
தடவிச் செல்கிறது.
*
செத்த பூக்களின் சருகுக்
குவியலிலிருந்து மெல்ல
வேர் விட்டு சோகப்
பாரங்களை தூக்கி
என் சின்னப் பூவரசும்
எழுந்து நிற்கிறது.
*
சுகமான தொட்டிலில்
தொங்கி தூங்கியபோது
விழி கரிக்கும் கண்ணீர்
உப்பை உணர்வு
ரணங்களால் அழுதபோது
தாய்மடி மட்டுமே
தாலாட்ட செய்தது.
*
வாங்கிப் படித்த
வரலாறுகளை விடவும்
என் பூவரசை வெட்டி
முறித்த கதைகளே அதிகம்.
துளி நீர் சிந்தி கட்டிய
குளங்களை தேச
அரிப்புக்களே
சமுத்திரமாக்கின...
பயிர்கள் எரிந்து நாசமாகி
சந்தியில் குந்தி கதை
அளக்கும்
நண்பர்கள் காணாமல்
அழவரும் போதும்
*
அவரவர் அறிவதற்காய்
மனமொழி புரியாமல்
ஆக்ரோஷம் என்னை
அடிக்கடி
ஆத்திரப்படுத்துகிறது.
*
கடந்த காலத்து சில்லறை
பெருமுச்சுக்களால் என்றோ
வீசக்கூடிய சாமர தழுவலில்
தொடரும் வாழ்வினூடு
இந்த பூவரசின் அருகிலேயே
தொடர்கிறது என் வாழ்வு!

விடத்தல்தீவு-உவைஸ்கனி.

## நான் போகிறேன்....

இரவுகள்
நித்திரையை
கரைக்கும்.
•
உன்
முக பிம்பம்
இன்னும்
கரையவில்லை.
•
முரண்பாடுகள் தான்,...
என்
மனக்
கருங்கல்லில் நீ!
உன் மனமும்
கருங்கல்தான்.
•
பிறப்பு
இறப்பு
'காதல்'
என்னைப்
பொறுத்தளவில்
ஒருதரம்தான்.
•
உதிரத்தைப்
பிழிந்து
பாதை
போட்டிருந்தேனே
ஏன் வரவில்லை?
•
உயிரை
உடைத்து உடைத்து
ஓலை அனுப்பினேனே
ஏன் வரவில்லை?
•
நான்
போகிறேன்.
ஒருநாள்
நீயும் அங்கு
வருவாயென்ற
எதிர்பார்ப்பில்.

மாரிமுத்து யோகராஜன்
மட்டக்களப்பு

## ராசாத்திமார்களுக்கோர் விண்ணப்பம்

வீறு கொண்டெழும்
ராசாத்திமார்களின்
உத்வேகம் எனக்குப்
பிடித்துப் போய்விட்டது.
***
அக்னிப் பிரவேசம் செய்ய
அடிபட்ட சீதைகள்
மறுத்தொதுக்கும்
இருபத்தோராம்
நூற்றாண்டே வருக!
***
காதல் தீயில் வெந்தொழுகி
கல்லறை காணா
மனவிறுக்கம் கொண்ட
ராசாத்தியை நான் நேசிக்கத்
தெரிந்து கொண்டேன்.
***
காதல் பாணத்தில்
உயிருக்குத் தீமூட்டி உறபவிக்க
என்ன இருக்கிறது?
***
வீறுடன் எழும்
என் ராசாத்தியே
உன் விழி பார்த்த
உத்வேகத்தில் என்மனது
உனக்காய் சரியும்!
***
தீ விறகின் பஸ்பமாய்
நீ தேடியழி கொடுமைகளின்
வேர்களையும் இன்னும்
அதன் கர்ப்பக்கிரகங்களையும்
கட்டுகளின் இறுக்கத்தில்
கிடந்துலைய உனக்கு
யாரடி பெண்ணே
விதிசெய்தவன்?
***
அவனையும்.....
உன் வாழ்தலில் உன்
உயிர்ப்பிலும்
வழி நெடுக பூப்பூக்க வேண்டும்
தவம் கலைத்து வாருங்கள்
என் ராசாத்திகளே!
***
புத்தம் புதியதான தினவுலகம்
வரவேற்றுக் கிடக்கிறது.
கன்னம் கூசிய வெட்கம்
போதுமடி பெண்ணே!
உன் பிறப்புதல் பற்றிய
புரிதலில் பூரித்துப்
போவதற்காய்
செயல்பட்டு பரவசமடை.
***
இடை வெளி பற்றிய
உறுத்தலின் வெறுப்புகள்
கலைய நீ புதிய பெண்ணாய்
வரவேண்டுமடி...
***

ஹரீரா அனஸ்-இலண்டன்

# இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானி'

16.05.99 முதல் 22.05.99வரை

### மேடம்:

கிரகநிலைகள் சீராக உள்ளதால் எண்ணிய கருமங்கள் நடைபெறும். புதிய உறவினர்கள் நண்பர்களின் சேர்க்கைகள் காணப்படும். உடலில் நோய் துன்பங்கள் வார இறுதியில் கொடுக்கப்பார்க்கும். குடும்ப மகிழ்ச்சி, தொழில், கல்வி முன்னேற்றம் சீராகத் தொடரும். அச்சுவினி நட்சத்திரம் உள்ளவர்கள் நல்ல திட்டங்களை தொடங்கமுடியும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண் : 1.
அதிஷ்ட திகதிகள் : 19, 21.

### இடபம்:

இறுதியாக வியாழன் 11ம் இடத்தில் ஆட்சிபலத்துடனும் சுக்கிரன், புதன் 2ம் வீட்டிலும் உள்ள நிலையால் காரிய சித்தி ஏற்படும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். காதல் உறவுகள் தொடரும். ரோகினி நட்சத்திரக்காரர்களுக்கு சுபவைபவங்கள் நிகழும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம்: இளம்பச்சை; எண் : 6.
அதிஷ்ட திகதிகள் : 21, 19.

### மிதுனம்:

சனி 11ம் இடத்திலும் ஜென்ம ராசிப் புதன் சுக்கிர அமைப்பும் தடைப்பட்டு வந்த கருமங்கள் கைகூடப்பெறும். திருமணத் தடைகள் யாவும் நீங்கப் பொருளாதார வளர்ச்சி தொழில் உயர்வும் பிரயாண வெற்றிவாய்ப்பும், திருவாதிரை நட்சத்திரக்காரருக்கு மனதிற்கு இனிய சம்பவங்கள் நடைபெறும்.
அதிஷ்ட நாட்கள்:புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள் : 18, 21.

### கடகம்:

பாக்கியஸ்தானதிபதியும் கிரககால உயர்வும் பொருளாதாரத்துறையை சிறப்பாக்கும். தடைப்பட்ட விடயங்கள் காரிய சித்தியைக் கொடுக்கும். ஆயிலிய நட்சத்திரக்காரர்களுக்கு சுபநிகழ்வு, நல்ல விடயங்கள் கைகொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்: 6.
அதிஷ்ட திகதிகள் : 21, 18.

### சிம்மம்:

எடுத்த விடயங்கள், முயற்சிகள் என்பன கைகூடும். பிரயாணங்கள் ஏற்படும். தடைப்பட்ட காதல், குடும்ப உறவுகள் மலர ஆரம்பிக்கும். பண உதவிகள் கிடைக்கும். மக நட்சத்திரத்தில் பிறந்தோருக்கு மகத்தான முன்னேற்றமான காலமாகும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: மரூண் வர்ணம்; எண்: 1.
அதிஷ்ட திகதிகள் : 19, 21.

### கன்னி:

அட்டமத்துச் சனிகாலமும் ஏழாம் இட வியாழனும் மனதில் கஷ்டங்களைக் கொடுக்கும். நோய் துன்பங்களை எதிர்பார்க்கலாம். திருமணப் பேச்சுக்கள் வெற்றியைக் கொடுக்கும். அலைச்சல்கள் பணவிரயங்கள் ஏற்படும். அத்த நட்சத்திரக்காரருக்கு சுப பலன்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 4.
அதிஷ்ட திகதிகள் : 22, 20.

### துலாம்:

வியாழன், சனி கிரக நிலைகள் 6ம் 7ம் இடங்களில் உள்ளதால் இவர்களின் குடும்ப வாழ்வில் மனக் கஷ்டங்கள் வரலாம். சுவாதி நட்சத்திரப் பெண்களுக்கு முன்னேற்றமான காலம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 3.
அதிஷ்ட திகதிகள் : 18, 19.

### விருட்சிகம்:

சனி சுகஸ்தானத்தில் உள்ளதாலும் கிரக நிலைகள் அனுகூலமாக உள்ளதாலும் குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகக் கூடியவாறு அமையும். புதிய முயற்சிகள் திட்டமிடுவார்கள். அனுஷ நட்சத்திரம் கொண்டோருக்கு இலாபங்களைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 2.
அதிஷ்ட திகதிகள் : 18, 20.

### தனுசு:

புதிய வசதி வாய்ப்புக்கள் இடமாற்றங்கள் ஏற்படக்கூடும். உடலில் நோய் துன்பங்கள் வந்துபோகும். உத்திராட முதலாம்பாத நட்சத்திரம் கொண்டவருக்கு பண வருவாய் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 9.
அதிஷ்ட திகதிகள் : 19, 21.

### மகரம்:

சனிவீட்டில் உள்ள இராசியினருக்கு எடுத்த விடயங்கள் தடைதாமதங்களைக் கொடுத்தாலும் வார இறுதியில் முயற்சிகள் நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும். திருவோன நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு சுபயோக வாரம்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை;எண்: 5.
அதிஷ்ட திகதிகள் : 21, 16.

### கும்பம்:

எடுத்த கருமங்கள் சுணக்கத்தை கொடுக்கும். வழக்கு, நோய் துன்பங்கள் ஏற்படும். சதய நட்சத்திரக்காரர்களுக்கு சிக்கல்களைக் காட்டும். புரட்டாதி நட்சத்திரகாரர்களுக்கு சுபகருமங்களும் எண்ணிய காரியம் வெற்றியும் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி.
அதிஷ்ட பச்சை: நீலம்; எண் : 9.
அதிஷ்ட திகதிகள்: 18, 22.

### மீனம்:

கரைச்சல்களில் இருந்த பிரச்சனைகள் யாவும் நீங்கும். உத்திரட்டாதி நட்சத்திர பெண்களுக்கு சுப அதிஷ்டமான வாரமாக அமையும். எண்ணியது கைகூடும். வெளி ஆட்களுடன் கவனமாக நடந்துகொள்ளவும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 1.
அதிஷ்ட திகதிகள் : 19, 21.

# நில்-கவனி-முன்னேறு

## அழுக்கு



பழைய காகிதக் குப்பை, துணிக் கிழிசல்கள் இவற்றை மூட்டையாகக் கையில் வைத்துக் கொண்டு திரிகிற பைத்தியங்களைச் சிலர் வியப்புடன் பார்க்கிறார்கள்.

சித்தம் பிசகிய பெரும்பாலானவர்கள் சிரித்தவாறே உள்ளனர்.

பயனற்ற குப்பைகளைச் சேர்த்து வைத்துக் கொள்வதற்கும் சிரிப்புக்கும் ஏதோ ஒரு சம்பந்தமிருக்கிறது. அழுக்குக்கும் ஆனந்தத்துக்கும் ஒரு தொடர்பு உள்ளது. பல சித்தர்களும் சாமியார்களும் அழுக்காக இருக்கிறார்கள். அவர்களிடம் ஏதோ ஒரு சக்தி இருப்பதாக மக்கள் அவர்களை நாடுகிறார்கள்.

சுத்தமான சாமியார்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களைவிட அதிகமான வியப்பூட்டுகிறவர்கள் அழுக்குச் சாமியார்கள்தான்.

குழந்தைகளும்கூட சகதியிலும் புழுதியிலும் விளையாடுவதிலேயே ஆனந்தம் கொள்கிறார்கள்.

குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று கருதுகிறவர்கள், குழந்தை விரும்பும் அழுக்கை, தெய்வமும் விரும்புகிறதா என்று கேட்கக்கூடும்.

தெய்வம் மக்களை விரும்புகிறது ஏன், மக்களிடம் உள்ள அழுக்குத்தான் தெய்வத்தைக் கவர்கிறது.

'அவதரிக்கிறேன், அவதரிக்கிறேன்' என்று தெய்வம் அவதரிப்பது, மக்களின் அழுக்கைக் குறி வைத்துத்தான்.

ஆகவே, அழுக்குக்கு தெய்வத்தையே ஈர்க்கும் சக்தி உள்ளது என்பது புலனாகிறது.

தெய்வம் தன்னிடம் வரவேண்டும், அருள்புரிய வேண்டும் என்பதையே மகான்கள் விரும்பினர். அதனால் தங்கள் கவிதைகளிலும் பாடல்களிலும் தங்களை, 'நாயேன்' என்றும், 'புழுத்தலைப்ப புலையனேன்' என்றும் தாங்கள் மகா அழுக்கானவர்கள் போல் காட்டிக் கொண்டார்கள்.

அழுக்குக்கு இன்னொரு மகத்தான பயன் உண்டு.

தான் அழுக்கு என்று நினைக்கிறவன் சுத்தமானவன்.

ஆகவே சுத்தமாக்குவதற்கும் அழுக்கு பயன்படுகிறது.

'அழுக்கைக் கொண்டு அழுக்கை எடுப்பது' என்பது இதனால்தான்.

பிரகஸ்பதி

# ஹலோ டாக்டர்

**கேள்வி: கர்ப்பிணிகளுக்கு எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சிசேரியன் அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள்?**

**பதில்:** இடுப்பு எலும்புகள் குறுகி இருப்பதால் பிரசவத்தின்போது இன்னல் ஏற்பட்டு மகப்பேறு தடைப்படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு, சிசுவின் தலையை நசுக்கியே (Perforation) இக்கடினப் பேற்றைக் கவனிக்க முடிந்தது. இப்போது அக்குழந்தையை அறுவைச் சிகிச்சையின் மூலம் காப்பாற்றலாம். பிறக்கும் குழந்தை பெரிய குழந்தையாக இருந்தால் பிரசவ காலத்தில் இன்னலை ஏற்படுத்துகிறது.



மிகச் சிறிய குழந்தையாக இருந்தாலும் கருப்பையிலேயே மூச்சுத் திணறல் ஏற்படுகின்றது. இது மாதிரியான நேரங்களில் சிசேரியன் மேற்கொள்ளப்படுகிறது.

ஐந்து அடி உயரத்திற்குக் குறைவாக உள்ள பெண்களின் இடுப்பு எலும்பு அமைப்பு சிலருக்கு குறுகியதாக உள்ளதாலும், சில கர்ப்பிணிகளுக்கு பிரசவ காலத்திலும் தலை இறங்காமல் மிதந்து கொண்டிருப்பதாலும் கடினப்பேறு ஏற்படக் காரணமாக இருப்பதால், அவர்களும் அறுவைச் சிகிச்சையை நாடவேண்டி உள்ளது. ஒருமுறை அறுவைச் சிகிச்சை செய்தவர்களுக்கு, மறுமுறையும் பல்வேறு காரணங்களால் அறுவைச் சிகிச்சையை கையாள வேண்டி வருகிறது.

## தூங்கலாமா? வாருங்கள்

நீங்கள் நன்றாகத் தூங்க வேண்டுமா?

தூக்கம் என்பது சாதாரண விஷயம் இல்லை. தினமும் நிம்மதியாகத் தூங்கினால்தான் மறுநாள் சோர்வில்லாமல், பதற்றம் இல்லாமல் வேலை பார்க்க முடியும். அதாவது இரவில் தூங்குவது மனித உடலுக்கு புத்து வலு ஏற்றிக் கொள்வது போன்றது.



நீங்கள் இரவில் தூக்கம் இல்லாமல் புரள்கிறவரா? இதைப் படியுங்கள். படிப்பதோடு விட்டு விடாமல், கடைப்பிடிக்கவும் பாருங்கள்.

★ தினமும் இரவில் குறிப்பட்ட ஒரே நேரத்தில் தூங்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

★ தினசரி சிறிது நேரமாவது முறைப்படியான உடற்பயிற்சிகளைச் செய்யுங்கள்.

★ பகலில் தூங்குவதை நிறுத்துங்கள். நிறுத்த முடியாது என்றால் கண்டிப்பாக பகலில் உறங்கும் நேரத்தை குறையுங்கள்.

★ இரவு சாப்பாட்டுக்கு உட்கார்ந்தால் மூக்கு முட்டச் சாப்பிடாதீர்கள். வயிறு ஒன்றும் தொட்டியல்ல. அரைவயிறு சாப்பாடு உடலுக்குப் போதும். அப்படியானால்தான் முழுத்தூக்கம் வரும்.

★ குடிப்பழக்கம் இருந்தால், படுக்கைக்குச் செல்லும்போது குடிப்பதை நிறுத்துங்கள்.

★ மனநிலையைச் சீர்குலைக்கும் விதத்தில் உள்ள தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரவில் பார்க்க வேண்டாம். அவ்வாறான புத்தகங்களையும் படிக்க வேண்டாம்.

★ நீங்கள் தூங்க முடிவு செய்து படுக்கைக்குச் சென்றதும் அந்தப் பகுதியில் மற்றவர்கள் வர அனுமதிக்க வேண்டாம்.

★ படுக்கைக்குப் போன பின்பு வாழ்க்கைப் பிரச்சனைகளையும் தொல்லைகளையும் இடர்பாடுகளையும் நினைப்பதும் அதைப் பற்றிச் சிந்திப்பதும் தூக்கத்தை விரட்டிவிடும்.

## அணைக்காதீர்கள்

★ டியூப் லைட் மற்றும் பல்ப்களில் அதிக தூசி பிடிக்கும். அதனை அடிக்கடி சுத்தப்படுத்தினால், அதிக வெளிச்சம் கிடைக்கும். இவ்வாறு செய்தால் அதிக வோல்டேஜ் உள்ள விளக்குகள் தேவையில்லை.

★ சிறிது நேரத்தில் வெளியே சென்று திரும்ப நினைத்தால் டியூப் லைட்டை அணைக்க வேண்டாம். ஏனென்றால் டியூப் லைட்டை அணைத்து விட்டு மறுபடி போடும்போது அதிக கரண்ட் தேவைப்படுகிறது. அதுமன்டுமன்றி அடிக்கடி சுவிட்சைப் போட்டு, அணைத்தால் சுவிட்சுகளும் விரைவில் பழுதடைந்துவிடும்.

## உருவமும் —புருவமும்

பெண்களுக்குத் தனி அழகு தருவது முகம். அதிலும் குறிப்பாக கண்களும், புருவங்களும் கூறும் கதைகளே தனிதான். கண்புருவங்களால் முக அழகு கூடுகிறது என்பதை மறுக்க முடியாது.



நமது மூக்கையோ முகத்தையோ மற்றுமுள்ள அங்கங்களையோ மாற்ற முடியாது.

ஆனால் புருவத்தைத் திருத்த முடியும். அதனால் முக அழகைக் கூட்டவும் முடியும்.

ஓவல் வடிவமுள்ள முகத்திற்குப் புருவம் சிறிய வளைவுடன், அதன் உயர்ந்த புள்ளி கண்ணின் நடுப்பகுதிக்கு மேலே இருக்கவேண்டும்.

குறுகிய நெற்றியுடையவர்களுக்கு புருவங்களுக்கிடையே இடைவெளி அதிகம் இருக்கவேண்டும்.

நெடிய நெற்றியுடையவர்களுக்கு இடைவெளி அதிகம் தேவை.

இரண்டு புருவங்களுக்கிடையே இருக்கும் முடிகளை களைந்து விடவேண்டும்.

இரு புருவமும் நெருங்கி இருந்தால் கண்கள் சிறியதாகவும் முகம் குறுகியும் தோன்றும்.

உங்களுக்குப் பெரிய அகன்ற மூக்கு இருந்தால் புருவத்தின் இடைவெளியை அகலப் படுத்தாதீர்கள். திருத்தப்பட்ட புருவத்தால் நீண்ட முகத்தைச் சிறியதாகக் காட்டலாம். இதற்கு புருவத்தை கிட்டத்தட்ட நீளமாக நேராகத் தோன்றும்படி செய்ய வேண்டும்.

புருவத்தை அழகு படுத்தும்போது கவனம் மிகவும்தேவை.

மிகவும் குறுக்கப்பட்ட புருவம் வயதான தோற்றம் தரும்.

புருவத்தின் முடிவு மிகவும் கீழ்நோக்கி அமைந்தாலும் வயதான தோற்றமே தரும். இயற்கையாகவே கீழ்நோக்கி வளரும் புருவத்தைச் சரிசெய்து. விடவேண்டும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FS

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22-05-1999

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள் 87

புவனா

டயானாவின் கண்ணில் பட்ட கடிதக் கோர்வையில் பல கடிதங்கள் இருந்தன.

அடுத்தவர் கடிதங்களை படிப்பது நாகரிகமற்ற செயல் என்பது டயானா அறியாததல்ல.

ஆனால் தன் வருங்காலக் கணவரான டோடிக்கு எழுதப்பட்ட கடிதங்கள் என்பதால், அவற்றை வாசித்துப் பார்க்கும் எண்ணமே மேலெழுந்தது.


முதல் கடிதமே பயங்கர கிளுகிளுப்பாக இருந்தது.

'அன்பே! டோடிப் பையா! நீ முத்தமிட்ட இடமெல்லாம் இப்போது நினைத்தாலும் ஏதேதோ பண்ணு கிறது. எங்கெல்லாம் முத்தமிடுவது என்று ஒரு வரையறையே உனக்குக் கிடையாதா?' என்று ஆரம்பித்து பச்சை பச்சையாக தொடர்ந்தது முதல் கடிதம்.

டோடியின் லீலைகளை ஒவ்வொரு கடிதத்திலும் விலாவாரியாக விபரித்திருந்தாள் ஒருத்தி.

டயானாவுக்கே அக் கடிதங்களை படிக்க படிக்க கிளுகிளுப்பாக இருந்தது. டோடி காதல் மன்னன் என்பதையும், பெண்களை உணர்ச்சியின் எல்லைக்கு இட்டுச் செல்லும் லீலைகளில் சூரர் என்பதும் டயானாவுக்கு, கடந்த சில நாட்களுக்குள் அனுபவபூர்வமாக தெரிந்துதான் இருந்தது.

மொடல் அழகி கெல்லி ஃபிஷருடன்



பிரபல ஹொலிவூட் நடிகை புரூக் ஷீல்ட்டுடன் டோடி

மட்டுமன்றி ஹொலிவூட் திரைப்பட அழகிகளுடனும் டோடி காதல் லீலைகளை அரங்கேற்றியவர் என்பதையும் டயானா அறிவார்.

ஆனாலும் அக் கடிதங்களை படித்ததும் பொறாமை உணர்வும் தலையெடுத்தது. இத்தனை லீலைகளை புரிந்து பல பெண்களோடு சல்லாபித்த டோடி இனிமேல் சபலம் இல்லாமல் இருப்பாரா? என்ற சந்தேகமும் எட்டிப் பார்த்தது.

கிளுகிளுப்பு, பொறாமை, சந்தேகம் ஆகிய உணர்ச்சிக் கலவைகளோடு டோடியை அழைத்தார் டயானா.

### காரில் பவனி

டயானா குரல் கொடுத்த விதத்தில், ஏதோ அவசரம் என்று விரைந்தோடி வந்தார் டோடி.

அவருக்கு முன்பாக கடிதக் கோவையை தூக்கிக் காட்டிய டயானா, "உங்கள் கதையெல்லாம் இதற்குள் இருக்கிறது" என்றார்.

"ஓ.... அதுவா?" என்று சமாளிக்க முயன்ற டோடியை டயானாவின் சந்தேகப்பார்வை நிலை குலைய வைத்தது.

டயானாவை சமாதானப்படுத்தினார் டோடி. அக் கடிதங்கள் மதுபான விற்பனையாளர் ஒருவரது மகளான மாரி பிகௌ என்பவரால் எழுதப்பட்டது.

அந்தப் பெண்ணின் வீடும் டோடியின் வீட்டுக்கு அருகேயே இருந்தது. இருவரும் அடிக்கடி சந்திக்க அதுவே வசதியாக இருந்தது. டோடியின் காதல் லீலைகளுக்காகவே அவரைச் சுற்றி வந்தாள் அந்தப் பெண்.

பாரிஸ் நகருக்கும் அப்பெண் டோடியுடன் வந்திருக்கிறாள். பாரிஸ் நகர வீதிகளில் டோடியுடன் பவனி வந்திருக்கிறாள்.

இன்னொரு சற்று அதிர்ச்சியான செய்தியும் அக் கடிதங்களில் ஒன்றில் இருந்தது.

டோடியும், அவளும் போதை மருந்தை பாவித்துவிட்டு, காதல் லீலைகளில் ஈடுபட்டனர். காருக்குள்ளேயே உறவு கொள்ளுமளவுக்கு தங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருந்தனர்.



டயானா, டோடி மற்றும் அல் ஃபயட்

டோடி போதை மருந்து பயன்படுத்துபவர் என்பதை அறிந்தபோது டயானா துணுக்குற்றார்.

அதுபற்றி டோடியுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டார். முன்பு அப்பழக்கம் இருந்தது உண்மை. தற்போது அதனை தொடுவதே இல்லை என்று டோடி கூறினார்.

"என்னை மட்டும்தான் பாரிஸ் அழைத்து வந்திருக்கிறீர் என்று நினைத்தேன். பல பெண்களை இங்கு கொண்டுவந்து பதம் பார்த்திருக்கிறீர்" என்று ஒருவித பொறாமையோடு டயானா கூறினார்.

### புதிய அனுபவம்

டோடி டயானாவை அணைத்து அவரது உடலை மெல்ல வருடிக்கொடுத்தார். டோடியின் இதமான காதல் லீலைகளாலும், கடிதத்தில் படித்து ஏற்பட்ட கிளுகிளுப்பாலும் டயானாவின் கோபம் கரைந்து போனது. அவர் டோடியின் கரங்களுக்குள் விரும்பிச் சிறைப்பட்டார்.

டயானா இதுவரை கண்டிராத புதிய அனுபவங்களை டோடி அறிமுகப்படுத்தினார்.

டயானா டோடியின் செய்கைகளால் கிளர்ச்சியுற்றார். தன்னை மறந்து புதிய உலகம் ஒன்றுக்குள் பிரவேசிப்பதுபோல் இன்பமுற்றார்.

தனது துன்பங்கள் அனைத்து க்கும் வடிகால் கிடைத்துவிட்டதாக மகிழ்ந்தார்.

இளவரசர் சாள்ஸ் என்றுமே நினைத்துப் பார்த்திராத காதல் லீலைகளை டோடி டயானாவுக்கு புகட்டினார்.

வாசனையூட்டப்பட்ட குளியல் தொட்டியில் குளித்தும், ஒருவரை ஒருவர் தழுவியும் மெய் மறந்து போயினர்.

குளிப்பதற்கு முன்னர் இருவரும் சம்பெயின் பானம் அருந்தினார்கள்.

வானத்தின் கீழே உள்ள சுகம் அனைத்தையும் இருவரும் அனுபவிக்க உறுதி பூண்டனர்.

டயானா எல்லையற்ற மனத் துணிச்சலை பெற்றார். 'என் வாழ்க்கையை நான்தான் தீர்மானிப்பேன். என் வாழ்க்கை எனக்குரியது. இதனை பூரணமாக அனுபவித்துவிட்டு சாகவே விரும்புகிறேன்' என்று டயானா அடிக்கடி கூறுவார்.

டோடியுடன் தனது காதல் முன்னைய காதல்கள் போல் அல்லாது திருமணம்வரை செல்லப்போவதை நினைக்க டயானாவுக்கு சந்தோசம் தாங்கமுடியவில்லை.

### புகைப்படம்

இதே நேரம் உலக சஞ்சிகைகளில் டயானாவும், டோடியும் நீச்சல் உடையில் கட்டியணைத்தபடி முத்தமிட்டுக் கொண்டிருக்கும் புகைப்படங்கள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

இப் புகைப்படங்கள் வெளியான பத்திரிகைகள் உலகெங்கும் சுடச்சுட விற்றுத் தீர்ந்தன.

டோடி, டயானா, அல் ஃபாயிட் ஆகியோர் கப்பலில் ஒன்றாக அமர்ந்திருந்து கடலை ரசிக்கும் காட்சியும் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன.

## டோடியின் காதலிகள்

இப் புகைப்படத்தை குறிப்பிட்ட சில பத்திரிகைகளுக்கு அல் ஃபாயிட்தான் இரகசியமாக அனுப்பி வைத்திருந்தார்.

டயானா திடீரென்று மனது மாறி டோடியை மணக்க மறுக்கலாம் என்று நினைத்தார் அல் ஃபாயிட்.

அவர்களது காதல் கதை வெகு பிரபலமாகினால், டயானா பின்வாங்க முடியாது போகும் என்று கருதினார்.

அல் ஃபாயிட்டும் குறிப்பிட்ட புகைப்படத்தில் இருந்தமையால் டயானா, டோடி சந்திப்புக்கள் கள்ளத்தனமான சந்திப்புக்கள் அல்ல என்பதும், இருவருமே உண்மையான காதலர்கள் என்பதும் நன்கு தெரிய வரும் என்பதுதான் அல் ஃபாயிட்டின் தீர்மானம்.

அல் ஃபாயிட்டின் இந்த நடவடிக்கை டோடிக்கும் தெரியாது. டயானாவுக்கு காதல் கண்ணை மறைத்ததால் அல் ஃபாயிட்டின் மீது சந்தேகம் ஏற்படவில்லை.




பரபரப்பை ஏற்படுத்திய புகைப்படம்

அல் ஃபாயிட் குடும்பம் பெரும் பணம் படைத்தது என்றாலும் உலகம் எங்கும் அறியப்பட்ட குடும்பமல்ல.

டயானா, டோடி உறவினால் அக் குடும்பத்தின் பெயரும் ஒரே நாளில் உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவியது.

டயானாவுக்கு தன் செல்வ வலிமையைக் காண்பிக்க அல் ஃபாயிட் திட்டமிட்டார்.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### ஆல்கரனோயா வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | கா. ஸ்ரீதேவகுமாரி, டெல்மார், ஆல்கரனோயா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## அம்மன் ஜுவல்ஸ்–முரசு இணைந்து வழங்கும்

### வைர மோதிரப் போட்டி

- முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு ஐ வைர மோதிரப் போட்டி





சேனை நடத்துவாயோ–
தொழும்புகள்
செய்திட விரும்பாயோ?
ஈனமான தொழிலே உங்களுக்கு
இசைவதாகும் போடா!

–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# அருணனின் அபார மூளை

ஓர் ஊரிலே அருணன் என்ற பணக்கார இளைஞன் வாழ்ந்து வந்தான்.

அவ்வூரில் உள்ள இளைஞர்களுக்குள்ளே தான் தான் அபார மூளையுடையவன் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்வான். மற்றவர்கள் அவனைக் குறைத்து மதிப்பிட்டால் அவனுக்குக் கோபம் வந்துவிடும்.

உண்மையில் அருணன் அப்படியொன்றும் புத்திசாலியல்ல.

ஒருநாள் அயலூரில் நடக்கும் திருவிழாவிற்கு அருணன் புறப்பட்டுச் சென்றான். நடுவழியில் ஓர் அடர்ந்த காடு இருந்தது.

முன்னெச்சரிக்கையாக அருணன் பெரிய தடியொன்றை எடுத்துக் கொண்டு சென்றான்.

நடுக்காட்டை அருணன் அடைந்தபோது சில திருடர்கள் அவனை வழி மறித்தார்கள். அவனிடம் இருப்பதைத் தரும்படி மிரட்டினார்கள்.

ஆனால் அருணன், திருடர்களுக்குக் கொஞ்சமும் பயப்படாமல் பேசாமல் நின்றான்.

இதைக் கண்ட திருடர்கள் கோபம் கொண்டு அருணனைத் தாக்க முற்பட்டார்கள்.

அருணன், கொண்டுவந்த பெரிய தடியால் அவர்களை எதிர்த்துச் சண்டையிட்டான். திருடர்களின் உடலில் காயம் ஏற்பட்டது. அருணனுக்கும் சில காயங்கள் ஏற்பட்டன.

திருடர்கள் நான்கைந்து பேர் நின்றதால் அருணனால் அதிக நேரம் எதிர்த்துச் சண்டைபோட முடியவில்லை. இறுதியில் திருடர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து அருணனைப் பிடித்து மரத்தில் கட்டிப் போட்டனர்.

திருடர்களில் ஒருவன் அருணனைச் சோதனையிட்டு அவன் இடுப்பில் இருந்த பணப்பையை எடுத்துப் பார்த்தான். அதற்குள் சில சில்லறை நாணயங்கள் மட்டுமே இருந்தன.

இதைக் கண்ட திருடன், "ப்பூ! இதற்காகவா எங்களுடன் இவ்வளவு நேரம் சண்டையிட்டாய்?

உனக்குக் கொஞ்சமாவது மூளை இருக்கிறதா?" என்று ஏளனமாகக் கேட்டான்.



அவன் கேட்டதுதான் தாமதம், அருணனுக்குக் கோபம் வந்துவிட்டது.

"யாரைப் பார்த்து மூளையிருக்கிறதா என்று கேட்டாய்? எனக்கு அபார மூளை உள்ளது. நான் ஒன்றும் இந்தச் சில்லறைக் காசுக்காகச் சண்டை போடவில்லை. எனது தலைப்பாகையில் முடிந்துவைத்திருக்கும் ஆயிரம் ரூபாய்களைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் சண்டை போட்டேன்!" என்று சொன்னான்.

உடனே திருடர்கள் அவன் தலையிலிருந்த தலைப்பாகையைக் கழற்றி அதில் முடிந்துவைத்திருந்த ஆயிரம் ரூபாயை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். ■

## அதிசயம் – ஆனால் உண்மை!



← எகிப்திய சுல்தான் பேபர்ஸ் தமது படையினருக்கு எடுத்துக்காட்டாக விளங்க 17 ஆண்டுகள் தினமும் நைல் நதியின் இரு கரைக்கும் நீந்துவதை வழக்கமாகக் கொண்டார். அதுவும் 38 இறாத்தல் கனமுள்ள இரும்புக் கவசங்களை அணிந்து கொண்டு. ■



← கீவெஸ்ட் என்ற இடத்தைச் சேர்ந்த பீட்டர் எல்.ஜே.கொக்ஸ் தமது இரு உள்ளங்கைகள்மீது இரண்டுபேரை அமர்த்தி 80 அடி தூரம் நடந்து சென்றார். ■



↑ ப்ளாண்டஸ் கோமகனான முதலாம் படோயினை கரடி ஒன்று தாக்க வந்தபோது அதனோடு சண்டையிட்டு, வெறும் கைகளாலேயே அதன் கழுத்தை நெரித்துக் கொன்றார். ■

## புதுமையான பூக்கள்

- ❀ உலகிலேயே மிகப்பெரிய பூ, சுமாத்ரா காடுகளில் உள்ள 'ராப்லேஷியா' என்றும் பூக்கள். இது 100 சென்டிமீட்டர் சுற்றளவு கொண்டது.



- ❀ உலகிலேயே மிகவும் சிறிய பூ 'பார்விப்ஸோரா' என்ற பூவினமாகும். இதன் நீளம் அதிகபட்சம் ஒரு மில்லி மீட்டர் இருக்கும்.
- ❀ சுமாத்ரா காடுகளில் உள்ள 'அமோர் போ பாலஸ்' என்ற பூதான் உலகிலேயே மிகவும் உயரமான பூவினமாகும். இதன் உயரம் 8 அடிக்கு மேல் இருக்கும்.
- ❀ அமேஸன் நதியில் 'விக்டோரியா ரிஜியா' என்ற அல்லி வளர்கிறது. இதன் இலையின் குறுக்களவு 6 அடி ஆகும். உலகில் மிகவும் பெரிய இலை இதுதான். ❀

## ஏன் தெரியுமா?

இடி இடிக்கும்போது வாயைத் திறந்து வைத்திருக்க வேண்டும் என்று கூறுவார்கள். இது ஏன் என்று தெரியுமா?

இடி இடிக்கும்போது அதன் ஒலி அலைகள் மிக வேகமாக வந்து செவிப்பறையில் மோதும். அதனால் செவிப்பறை கிழிந்து காது, கேட்கும் சக்தியை இழந்துவிட ஏதுவாகும்.

நாம் வாயைத் திறந்து வைத்துக் கொண்டோமேயானால் வாய் வழியாக வெளிக்காற்று உட்சென்று, செவிப்பக்கம் சென்று மோதும்.



அப்போது அவ்வெளிக்காற்று செவிப்பறையில் இடி இடிக்கும்போது ஏற்படும் அதிக அதிர்வை வாங்கிக் கொண்டு செவிப்பறை பாதிக்காமல் பாதுகாக்கும்.

## பிளாட்டினம்

உலோகங்களில் மிகவும் விலையுயர்ந்ததும் கடினமானதுமான உலோகம் பிளாட்டினம். வெள்ளி போன்ற நிறத்தைக் கொண்ட இந்த உலோகம் தங்கத்தை விட விலையுயர்ந்தது.




இது எரிமலை பாறைகளில் அதிகமாகக் காணப்படும். உலகில் எடுக்கப்படும் பிளாட்டினத்தில் 25 சதவீதம் மட்டுமே நகைகள் செய்யப்படுகின்றது.

இது கந்தக அமிலம், நைட்ரிக் அமிலம் தயாரிக்க பயன்படுகிறது. மேலும் எண்ணெய் சுத்திரிகரிப்பிலும் பயன்படுத்தப்படுகின்றது.

கனடா, ரஷ்யா, தென் அமெரிக்கா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் பிளாட்டினம் அதிகமாகக் கிடைக்கின்றது. ■

## பிசாசுக் குகை



அமெரிக்காவில், கான்ஸாஸ் மாநிலத்தில் உள்ள குகையின் பெயர் 'பிசாசின் ஐஸ் பெட்டி.' இந்தக் குகை இருள் சூழ்ந்து பயங்கரமாகவும், குளிர்ச்சியாகவும் இருப்பதால்தான் இந்தப் பெயர் வந்தது.

இந்தக் குகை எப்போது, எதற்காகத் தோன்றியது என்று தெரியாது. இயற்கை விந்தைகளில் இதுவும் ஒன்று.

இந்தக் குகையைச் சுற்றி அழகிய பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு ரொக் ஃபிரிட்ஜ் மெமோரியல் ஸ்டேட் பார்க் என்று பெயர். இது தற்போது சிறந்த சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது.

உலகிலேயே மிகப் பெரிய குகை இதுதான். இது 6 கிலோமீட்டர் நீளமானது. குகையினுள் 0 பாகை குளிர்ச்சி காணப்படுகிறது. சில இடங்களில் குகையின் கூரைப் பகுதி மிகத் தாழ்வாக இருப்பதால் தவழ்ந்து தான் உள்ளே செல்ல முடியும். ■

## சுற்றுச் சூழல்



- ❖ ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 5ம் திகதி சுற்றுச் சூழல் பாதுகாப்பு நாளாகக் கொண்டாடப்படுகின்றது.
- ❖ சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுக்க 1972ம் ஆண்டு சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமில் முதல் குரல் எழுப்பப்பட்டது.
- ❖ நாம் சுவாசிக்கும் மாசுபடாத காற்றில் பிராணவாயு 21 சதவீதம் உள்ளது.
- ❖ காடுகளை அழிப்பதில்லை என ஹவாய் மக்கள் சபதம் எடுத்துள்ளனர்.
- ❖ ஓசோன் மண்டலத்தில் ஓட்டை விழக் காரணமான வாயு 'குளோரோஃப்ளூரா கார்பன்.' ■

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **22.05.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **296**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 294

**பரிசுக்குரியவர்:**
எஸ்.பாத்திமா நிரோஷா,
பு/பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, புத்தளம்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஆர்.சுஜீவன்,<br>அர்ச் தோமையர் கல்லூரி, பண்டாரவளை. | முத்துலிங்கம் பிரிதிகலா,<br>பது/கோணக்கலை த.வி, பசறை. |
| கே.கேஷினி,<br>மகியங்கன வீதி, பதுள்ளை. | ரி.பிரசாந்தன்,<br>புளியாவத்தை த.ம.வி, டிக்கோயா. |
| ரி.சஞ்ஜீவன்,<br>றோயல் கல்லூரி, கொழும்பு-07. | ரா.நிரோசன்,<br>இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு. |
| தம்பிப்பிள்ளை தவக்குமார்,<br>மட்/மண்டூர் மகாவித்தியாலயம், மண்டூர்-01. | ஷர்மினி லெஸ்லி ரவீந்திரன்,<br>ஸ்ரீ/சண்முக இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. |
| வை.சியாட்,<br>அநு/நேகம முஸ்லிம் மகா வித்தியாலயம், நேகம்பஹா. | ஜே.சங்கா,<br>ஹைலெவல் ஆங்கில பாடசாலை, ஹட்டன். |

## குட்டிச் செய்திகள்

- அதிக விஷம் கொண்ட பாம்புகள் மற்றெல்லா நாடுகளையும் விட அவுஸ்திரேலியாவில்தான் அதிகம் உள்ளன.
- உலகின் மிக பிஸியான விமான நிலையம் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் உள்ள 'ஓ ஹரே' விமான நிலையம் ஆகும்.
- வட ஆபிரிக்காவில் காணப்படும் 'பார்பரி' என்ற எலி இனங்களுக்கு புலியைப் போன்ற வரிகள் உடம்பில் உள்ளன.
- இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை உலக மக்கள் தொகை ஒன்றரைக் கோடியாக அதிகரித்துக் கொள்கிறது.
- உலகிலேயே அதிகமாகப் பால் கொடுக்கக்கூடிய பசு இனத்தின் பெயர் ஹோல்ஸ்டைன், பிரீசியன். இவை ஹொலண்ட் நாட்டில் இருக்கின்றன.
- உலகிலேயே மிக உயரமான கலங்கரை விளக்கம் ஜப்பானில் உள்ள யோகோகாமா நகரில் உள்ளது.
- மடகாஸ்கர் தீவில் குகைகளில் வாழும் முதலை இனம் உள்ளது. உலகில் வேறெங்கும் குகைகளில் முதலை இனம் இல்லை.
- மனிதர்களைப் போலவே ஒட்டகச் சிவிங்கியின் கழுத்திலும் மொத்தம் ஏழே ஏழு எலும்புகள்தான் இருக்கின்றன.
- ட்ரான்ஸ்ஃபோமரை வடிவமைத்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் ஸ்டான்லி என்பவர்.
- பறவையினங்களிலேயே மிக மிக அபூர்வமானது 'ஹவாயன் ஓ ஆ'- இந்தப் பறவையினத்தில் ஒரே ஒரு சோடி மட்டுமே உலகில் உள்ளது.
- உலகிலேயே மிக நீளமான புகையிரத நிலையம் சுவீடன் நாட்டில் உள்ள 'ஸ்டோர்விக்' நகர புகையிரத நிலையமாகும்.
- சுவிற்ஸர்லாந்து நாட்டில் ஒவ்வொரு வருடமும் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பார்கள்.
- உலகில் மிக உயரமான இடத்தில் வாழும் மீன் 'திபெத்தியன் லோச்' ஆகும். இது திபெத்தில் உள்ள 17,060 அடி உயரத்தில் இருக்கும் ஏரியில் காணப்படுகிறது.
- செயற்கைக்கோளை முதன் முதலாக விண்வெளிக்கு அனுப்பிய நாடு சோவியத் யூனியன்.
- மனிதர்களுக்கு நாக்கில் மட்டுமே சுவை அரும்புகள் இருக்கும். ஆனால் மீன்களுக்கு உடல் முழுக்க சுவை அரும்புகள் உள்ளன. ■

# கைதி 3

**பூ**விழியின் கண்கள் பாதி திறந்திருக்க உள்ளே கண்ணின் பாவை ஸ்லோமோஷனில் உருண்டது.

நீலமேகமும், சொர்ணமும் பக்கத்துக்கு ஒருவராய் நின்று கொண்டு பதற, இன்ஸ்பெக்டர் அவர்களைத் தள்ளி நிற்கும்படி சொல்லி விட்டு, பூவிழியிடம் குனிந்தார்.

"இதோ.. பாரம்மா..உன்னோட அப்பாவும் அம்மாவும் இங்கே வந்திருக்காங்க. நீ பயப்படாதே.... உனக்கு ஒண்ணும் ஆயிடலை. ரெண்டு நாள் ஹாஸ்பிடல்ல இருந்துட்டு அப்புறமா வீட்டுக்குப் போயிடலாம்... உன்னை இப்படித் தாக்கினது யாரு...?"

பூவிழி இன்ஸ்பெக்டரையே இமைக்காமல் பார்த்தாள். ஆணியடித்த மாதிரியான பார்வை.

இன்ஸ்பெக்டர் பூவிழியின் கன்னங்களை மெல்லத் தட்டினார்.

"சொல்லும்மா... யாரு...?"

பதில் சொல்லும் முயற்சியில் கீழ் உதடு அவஸ்தையாய்க் கோணியது. உதடு கோணிக்கொண்டிருக்கும் போதே ஒரு எழுத்து தொண்டையிலிருந்தும் பீறிட்டு வந்து விழுந்தது.

"மி...."

"சொல்லு பூவிழி.... யாரு....?"

"மி..."

"ம்... சொல்லு... ஒரு எழுத்தை மட்டும் சொன்னா எப்படி... பூரா பேரையும் சொல்லும்மா..."

பூவிழி சிரமப்பட்டு பேச முயன்றதில் தொண்டை நரம்புகள் புடைத்துக் கொண்டு விம்மியது. வாய் வேக வேகமாய் திறந்து மூடியது. மார்பு தூக்கித் தூக்கிப் போட்டது.

இன்ஸ்பெக்டர் டாக்டர்களை ஏறிட்டார்.

"டாக்டர்..."

"ஸாரி.... இன்ஸ்பெக்டர்! ஷி...இஸ் கௌண்டிங் ஹெர் லாஸ்ட் செகண்ட்ஸ்..."

சொர்ணம் இரண்டாய் மடித்து உட்கார்ந்து பெரிய குரலில் அழ ஆரம்பிக்க பிரமை பிடித்துப் போய் நின்றிருந்தார் நீலமேகம்.

பூவிழி இப்போது கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிக் கொண்டிருந்தாள்.

இன்ஸ்பெக்டர் தொப்பியைக் கழற்றி கக்கத்தில் வைத்துக் கொண்டு யோசனை முகத்தோடு வெளியே வந்தார்.

பூவிழி யாரோட பேரையோ சொல்ல முயற்சி பண்ணி 'மி' என்கிற ஒரு எழுத்தோடு நிறுத்திக் கொண்டாள்.

"யார் அந்த 'மி'..?"

★★★

**வெ**டர்னரி டாக்டர் ரத்னவேல் வர்ணாவை ஃபிப்டி பர்செண்ட் வியப்போடும் ஃபிப்டி பர்செண்ட் எரிச்சலோடும் பார்த்தார்.

"என்னம்மா... நீ.. ஒரு நாய்க்குப் போய் இவ்வளவு ஃபீல் பண்றே...? மனித உயிருக்கே விலைமதிப்பில்லாத காலம் இது. இந்த நாய்க்குட்டி போனா என்ன வேற ஒண்ண வாங்கி வளர்க்க வேண்டியது தானே..."

"டாக்டர்... ப்ளீஸ் டாக்டர்... என்னோட பிங்கியை எப்படியாவது காப்பாத்திக் கொடுத்திடுங்க டாக்டர். பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை..."

டாக்டர் புன்னகைத்தார். "நீ... எத்தனை இலட்ச ரூபாய் செலவு பண்ணினாலும் சரி இந்த நாயை நீ காப்பாத்த முடியாதும்மா..."

பாக்யம் வர்ணாவின் தோளைத் தொட்டாள்.

"சரி... எடுத்துகிட்டுக் கிளம்பு! இந்த நாயோட தலைவிதி அவ்வளவுதான்."

வர்ணா, பாக்யத்தின் பேச்சைப் பொருட்படுத்தாமல் டாக்டரிடம் கெஞ்ச ஆரம்பித்தாள்.

"டாக்டர், ஏதாவது பண்ணுங்க டாக்டர்."

"ஒண்ணும் பண்ண முடியாதம்மா. ஒரு மனுஷனுக்கு எய்ட்ஸ் வந்தா எப்படிக் குணப்படுத்த முடியாதோ அதே மாதிரி தான் இந்த நாய்களுக்கு டிஸ்டெம்பர் வந்தாலும் குணப்படுத்த முடியாது. இந்த நோய் டைரக்டா ப்ரெய்னை அட்டாக் பண்றதுனால உயிர் பிழைக்க வாய்ப்பே இல்லை. இந்த நாயோட உடம்புல இன்னும் பத்து சதவீத உயிர்தான் ஒட்டிக்கிட்டு இருக்கு... நீ இதை எடுத்துக்கிட்டு வீடு போய் சேர்றதுக்குள்ளே நாயோட கதை முடிஞ்சுடும்..."

"நோ... டாக்டர் என்னோட பிங்கி செத்துப் போகாது. அதைச் சாக விடமாட்டேன்."

டாக்டர் எரிச்சலின் உச்சத்துக்குப் போனார்.

"இதோ பாரம்மா... உன்கிட்டே இனிமே என்னால பேச முடியாது. நீ நாயை எடுத்துக்கிட்டு கிளம்பு. படிச்ச பெண்ணாட்டம் தெரியறே. ஒரு வாட்டி சொன்னா புரிஞ்சுக்க வேண்டாமா..? நாயைச் சாக விடமாட்டேன், சாக விடமாட்டேன்னு சொல்றியே நீயென்ன உயிர் தர்ற பிரம்மாவா?" பொரிந்து தள்ளிய டாக்டர் பாக்யத்திடம் திரும்பினார்.

"இது உங்க பெண்ணா....?"

"ஆமா... டாக்டர்...."

"மொதல்ல கூட்டிக்கிட்டுப் போங்கம்மா. நாய் கண்டிப்பாச் செத்துடும். நாய் செத்துப் போன ஏக்கத்துல உங்க பொண்ணு ஏதாவது பண்ணிக்கப் போகுது."

டாக்டர் சொல்லி விட்டு வீட்டுக்குள் போய்விட பாக்யம் மகளைக் கோபமாய்ப் பார்த்தாள்.

"கிளம்பு வர்ணா...!"


வர்ணா கண்களில் நிரம்பிய நீரோடு நாயை அள்ளி அணைத்துக் கொண்டு வாசலை நோக்கி மெல்ல நடந்தாள். பிங்கியிடம் இப்போது ஒரு சின்ன ஈனஸ்வர முனகல் கூட இல்லை.

"அம்மா..."

"என்னடி...?"

"பிங்கி சாகக் கூடாதும்மா... அதை எப்படியாவது உயிர் பிழைக்க வைக்கணும்.."








"அதுக்கு என்ன செய்யலாம். இமயமலை அடிவாரத்துக்கு ரெண்டு பேருமா போய்த் தவம் இருக்கலாமா? டாக்டர்தான் சொல்லிட்டாரேடி... நாய்க்கு வரக்கூடாத நோய் வந்திருக்கு... அது பொழைக்காதுன்னு! மனதைத் திடப்படுத்திக்க வேண்டியதுதான். இது போனா என்ன..? வேற ஒரு பொமரேனியன் வாங்கிக்கலாம்..."

"பிங்கி மாதிரி வருமா...?"

பாக்கியம் நின்று முறைத்தாள்.

"இப்ப என்ன பண்ணலாம்ங்கிறே..."

"வேப்பேரியில் இருக்கிற வெடர்னரி ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போனா அங்கே எக்ஸ்பர்ட் டாக்டர்ஸ் இருப்பாங்க. அவங்க எப்படியாவது என்னோட பிங்கியைக் காப்பாத்திக் கொடுத்துடுவாங்க..."

"ஏண்டி... இப்படிப் படுத்தறே..?"

**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஸ்குமார்**

"அம்மா... ப்ளீஸ்... இந்த பிங்கி நம்ம வீட்ல மறுபடியும் துள்ளிக் குதிச்சு விளையாடணும்."

"சரி...! வேப்பேரி ஹாஸ்பிடலுக்கு போலாம். அங்கே இருக்கிற டாக்டர்ஸ் இந்த டாக்டர் சொன்ன மாதிரியே நாய் பிழைக்காதுன்னு சொன்னா மறுவார்த்தை பேசாமே வெளியே வந்திடணும்."

"சரி..."

இருவரும் வாசலில் காத்திருந்த ஆட்டோவுக்கு வந்தார்கள்.

★★★

**வே**ப்பேரி வேடர்னரி ஹாஸ்பிடல் அந்த ராத்திரி வேளையில் வெறிச்சோடிப் போயிருக்க, செல்லப் பிராணிகள் சிகிச்சைப் பிரிவில் இரண்டு டாக்டர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வர்ணா ஆட்டோவிலிருந்து புயல் வேகத்தில் கீழே இறங்கி பிங்கியோடு அவர்களை நெருங்கினாள். பாக்கியம் தலையில் நோகாமல் அடித்துக் கொண்டு பின் தொடர்ந்தாள்.

வர்ணா பிங்கியை மேஜையின் மேல் ஒரு பூ மாதிரி படுக்க வைத்து விட்டு டாக்டர்களைப் பார்த்துக் கை கூப்பினாள்.

"இந்த நாய்க்குட்டியை எப்படியாவது பிழைக்க வையுங்க டாக்டர்... ப்ளீஸ்.."

"நாய்க்கு என்ன உடம்பு..?"

வர்ணா விபரம் சொல்ல-இரண்டு டாக்டர்களும் மாறி மாறி நாயைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு ஒட்டு மொத்தமாய் உதட்டைப் பிதுக்கினார்கள்.

"ஸாரி...! இது டிஸ்டெம்பர். நாய் பிழைக்காது. இனி ஒரு பத்து நிமிஷம் தான் உயிரோடு இருக்கும். வீட்டுக்குக் கொண்டு போயிடுங்க...!"

வர்ணா ஒரு விநாடி திக்கித்துப் பின் மீண்டாள். "டாக்டர்... ஏதாவது... ஊசி...?"

"நோ... யூஸ்... கொண்டு போயிடுங்க. நாய்க்கு வரக்கூடாத வியாதி இது. இது வந்தா மரணம்தான். மருந்து கிடையாது."

பாக்கியம் பின்னால் இருந்து கொண்டு வர்ணாவின் இடுப்பைக் குத்தினாள்.

"இனியும் என்னடி...? நாயை எடுத்துக்கிட்டு கிளம்பு..."

வர்ணா பொங்கிய கண்ணீரோடு பிங்கியை அள்ளிக் கொண்டாள்.

பிங்கியிடம் இப்போது கொஞ்சம் கூட சலனம் இல்லை.

'மூச்சை நிறுத்திக் கொண்டு விட்டதோ...?'

வர்ணா மௌனமாய் நடந்து ஆட்டோவுக்கு வந்து ஏறி உட்கார்ந்தாள். பாக்கியம் உட்கார்ந்ததும் ஆட்டோ கிளம்பியது.

"வர்ணா..."

"ம்..."

"இனிமே என்ன பண்றது...? மனசைத் தேத்திக்க! இதுக்குத்தான் எதையுமே பிரியமா பாசத்தைக் கொட்டி வளர்க்கக் கூடாதுங்கிறது...! இதோடு போகட்டும். இனிமே நம்ம வீட்டுக்கு நாய்க்குட்டியும் வேண்டாம் பூனைக்குட்டியும் வேண்டாம்..."

வர்ணா மௌனமாய் வந்தாள்.

பிங்கி சுற்றி வைத்த துணிக்குள் அசைவில்லாமல் கிடந்தது. பாக்கியம் துணியை விலக்கிப் பார்த்துவிட்டுச் சொன்னாள்.

"பிங்கியோட கதை முடிஞ்சுடுச்சுன்னு நினைக்கிறேன். நம்ம வீட்டுக்குப் பின்னால இருக்கிற தோட்டத்திலேயே புதைச்சுடலாம்."

வர்ணா ஒன்றும் பேசாமல் மௌனமாய் வந்தாள்.

இருபது நிமிஷ பயணத்துக்குப் பிறகு வீடு வந்தது.

ஆட்டோ வாசலில் நிற்க-பாக்கியம் இறங்கி டிரைவரிடம் எவ்வளவு சார்ஜ் என்று கேட்டுக் கொண்டிருந்த விநாடி-

அந்த அதிசயம் நிகழ்ந்தது.

வர்ணாவின் அணைப்புக்குள் சலனம் இல்லாமல் இருந்த பிங்கியின் உடல் திமிறித் துள்ளியது. துணிச் சுருளுக்குள்ளிருந்து உருவிக் கொண்டு எழுந்தது.

"வ்வள்..." என்று செல்லமாய்க் குரைத்து விட்டு ஆட்டோவினின்றும் கீழே குதித்து வீட்டுக்குள் ஓடியது.

(தொடர்ந்து வரும்)

## நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்




**க**ப்பிலிருந்து தண்ணீரைப் பிடித்து, நான் தடுப்பதற்குள் அத்தனை மாத்திரைகளையும் ஒரேயடியாக வாயில் போட்டுக் கொண்டு முழுங்க ஆரம்பித்தார். நான் பதறிப் போய் 'ஒண்ணும் பண்ணிடாதீங்க'ன்னு கத்தியபடியே, மாத்திரைகளை அவர் விழுங்காமல் தடுக்க அவருடைய கழுத்தைப் பிடித்துக் கொண்டேன்.

அவர் கழுத்தைப் பிடித்த என் கையை உதறித் தள்ளினார். "நான் செத்துப் போறேன் போ. 'நீ என் சாவுக்குக் காரணம்'னு எழுதி வைச்சுட்டு நான் செத்துப்போறேன் போ. நீ தொலைஞ்சே" என்று சொல்லியபடியே மாடிக்கு ஓடினார். அப்படியே படுக்கையில் சாய்ந்துவிட்டார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்தச் சமயத்தில் டாக்டரை கூப்பிடக்கூட யோசனை வரவில்லை.

படுத்துக் கொண்டிருந்த அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். மணி ஓடிக்கொண்டேயிருந்தது. திடீரென்று எழுந்து உட்கார்ந்து கொண்டார். மணி அப்போது விடியற்காலை நாலரை மணி இருக்கும்.

எழுந்து உட்கார்ந்தவர் என் கையைப் பிடித்துக்கொண்டார். "இப்ப சொல்லு, 'என்னை விட்டுட்டுப் போக மாட்டேன்'னு சொல்லு" என்றார். ஏதோ காலையில் எழுந்ததும் 'குட்மார்னிங்' சொல்வது மாதிரி இதையே சொல்லிக் கொண்டிருந்தார். அப்போதுதான் எனக்கு பொறி தட்டியது. இவ்வளவு மாத்திரை சாப்பிட்ட ஒரு மனிதர் எப்படி இரண்டு மணி நேரத்தில் எழுந்து உட்காரமுடியும்? யோசித்தேன். எனக்குச் சந்தேகம் வந்தது.

### நாடகம்

அவசரமாக கீழே இறங்கி வந்தேன். மாத்திரை சாப்பிட்ட இடத்தில் ஒன்றிரண்டு மாத்திரைகள் சிதறிக் கிடந்தன. எடுத்துப் பார்த்தால், எல்லாமே வைட்டமின் மாத்திரைகள்.. தூக்க மாத்திரையேயில்லை! வெறுத்துப் போயிற்று.

'சே, என்ன கேவலமாக ஒரு நாடகம் நடத்தியிருக்கிறான் இந்த மனிதன்' என்று எனக்குள் இன்னும் கோபமும், ஆத்திரமும் பற்றிக் கொண்டு வந்தது.

இனிமேலும் இதை ஒத்துக் கொண்டு வாழ்க்கையை எப்படித் தொடரப் போகிறோம் என்று மனதிற்குள் பல கேள்விகள். அப்போது ஏற்கனவே நான் எடுத்திருந்த முடிவுக்கு ஒரு தீர்மானமான விடை கிடைத்தது. இனிமேல் இந்த வாழ்க்கை உதவாது. எப்படியாவது வெளியேறுவதுதான் புத்திசாலித்தனம் என்கிற தீர்மானத்திற்கு வந்தேன்.

இதற்குள் விடிந்துவிட்டது. கீழே இறங்கி வந்தார். ராத்திரி நடந்தது எதுவுமே என் அம்மாவிற்குத் தெரியாது.

அவர் கீழே படுத்திருந்தார். காலையில் கீழே இறங்கி வந்தவர், என் அம்மாவிடம் போனார்.

"இத பாருங்க உங்க பொண்ணுக்கு நான் வேண்டாமாம். நான் இந்த வீட்டை விட்டுப் போறேன். போய் நான் தற்கொலை பண்ணிக்கிட்டு சாகப்போறேன்"னு கத்தினார். என் அம்மாவிற்கு ஒன்றுமே புரியவில்லை.

எங்கம்மாவிற்கு இதெல்லாம் புதுசு. எங்க வீட்டில இந்தக் கூச்சல், சண்டையெல்லாம் நாங்க பார்த்ததே கிடையாது. என்னதான் கோபம், தாபம் இருந்தாலும், நாங்கள்ளாம் ஒருத்தருக்கொருத்தர் இப்படிக் கத்தி சண்டை போட்டுக்கிட்டதில்லை.

எங்க வீட்டுலயே தடார்ன்னு கோபம் வரும்னா, அது எங்கப்பாவுக்குத்தான். வேற யாரும் சத்தமே போட மாட்டோம். எங்கண்ணா பேசியே நான் அதிகம் கேட்டது கிடையாது. அவ்வளவு அமைதியானவர்.

எங்களுக்குள்ளே அண்ணா, தங்கைன்னு ஒரு சம்பாஷணையே நடந்தது கிடையாது. குடும்பத்துப் பிரச்சனையை உட்கார்ந்து பேசி அலசுனதே இல்லை. அதே மாதிரிதான் எங்க அம்மாவும்.

அவங்களைச் சின்ன வயதிலிருந்தே ஒரு ஆர்டிஸ்ட்டா, மிகப் பெரிய பாடகியா, ஒரு பிரமிப்பாவே பார்த்துட்டேன். எங்களுக்குள்ளே ஒரு அந்நியோன்யமான பேச்சுவார்த்தையே நடந்ததில்லை. வீட்டில் நடக்கிற பேச்சுவார்த்தையெல்லாம் புடவை, நகை, சமையல்ன்னு பொதுவா போயிடும்.

ஏதாவது சின்னப் பிரச்சனை என்றால் கூட, அம்மா அதை மிக நாசூக்காக கையாள்வார். அதனால் அம்மாவிற்கும், அப்பாவிற்கும் என்ன பிரச்சனை என்றுகூட எங்களுக்குத் தெரியாது; எங்களுக்குத் தெரியாமலேயே மறைச்சிடுவாங்க.

அப்படிப்பட்ட வாழ்க்கைக்கு பழக்கப் பட்டது எங்க குடும்பம். அப்பா சண்டை போட்டால் கூட இப்படி ஆர்ப்பாட்டமெல்லாம் பண்ணமாட்டார்.

அம்மா விக்கித்துப் போய் நின்றார்.

"என்னடி இது? இப்படி பேய் மாதிரி கத்தறான்." என்று அம்மா சொல்லிக் கொண்டேயிருக்கும்போதே அவர் எங்கோ வெளியே ஓடினார். "அம்மா! இனிமேல் இங்கிருக்கக் கூடாது. நாம போயிடலாம்." என்று அவசரப்படுத்தினேன். மாற்று உடையையாவது எடுத்துக் கொள்ளலாம் என்று மாடியிலிருந்த அறைக்கு அவசரமாக ஓடினேன். அறைக்குள் நுழைந்த சில வினாடிகளில் என் அறைக் கதவு மூடப்படும் சத்தம் கேட்டது.

பயந்துபோய் திரும்பினேன். இவர் தான். ஒரு கையைப் பின்னால் மறைத்தபடி என்னை நோக்கி வந்துகொண்டிருந்தார். எனக்கு குலை நடுக்கம். கையில் ஏதோ ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கிறார். என்னைக் குத்திக் கொலை செய்யப் போகிறார். என்கிற முடிவிற்கே வந்துவிட்டேன். அவர் என்னை நெருங்குவதற்குள் நேராக ஓடி அவரைப் பிடித்துத் தள்ளினேன். அவசரமாக கதவைத்திறந்து கொண்டு கீழே வேகமாக ஓடிவந்தேன்.

"அம்மா! உடனே வெளியே வா. இனிமேல் இங்கிருந்தால் நம்மைக் கொன்று விடுவான்....வா, வா" என்று அம்மா கையை பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே ஓடி வந்தேன். வருகிற வழியில் ஹாலிலிருந்த என் மேக்கப் பெட்டியை மட்டும் எடுத்துக் கொண்டேன்.



### என் பயம்

அம்மா, முதல்நாள் வந்த வாடகைக் கார் வெளியே காத்திருந்தது. சட்டென்று காரில் ஏறி உட்கார்ந்து கொண்டோம். "அம்மா வண்டியை எடுக்கச் சொல்லு. போலாம்...போலாம்" என்று பதறினேன்.

அம்மாவிற்கோ, காரின் டிரைவருக்கோ ஒன்றுமே புரியவேயில்லை. இதெல்லாமே சில வினாடிகளில் நடந்து முடிந்தது. அப்போது காலை மணி சுமார் பத்து இருக்கும்.

என் பதற்றத்துக்கான காரணத்தை முழுமையாக அம்மாவிடம் சொல்லக்கூட எனக்கு நேரமில்லை. அந்த வீட்டில் நான், அம்மா, ஜார்ஜ், ஒரு கூர்க்கா மட்டுமே. காலையில் இந்தத் தகராறு நடக்கும்போது வந்த அவர் பெற்றோர்களையும் அவர் துரத்தியிருந்தார்.

"நமக்கு மரியாதை இல்லாத இடத்தில் நாம் இருக்கக்கூடாது." என்று அவர்களும் கிளம்பி விட்டார்கள்.

என் பயமெல்லாம் அந்த கூர்க்கா என் அம்மா தலையில் கல்லைப் போட்டுட்டு, ஜார்ஜ் என்னைக் கத்தியால் குத்தினால்கூட கேட்க நாதியில்லை. இந்தத் தகராறுக்கு நடுவே அவர் சொன்னதெல்லாம்கூட அவ்வப்போது காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

"இந்தா பாரு! ஏதாவது ஊசிபோட்டுருவேன். நீ எப்படி செத்தேன்னு கூட யாராலயும் கண்டுபிடிக்க முடியாது." என்கிற மிரட்டல் வேறு இருந்தது.

அது உண்மையாகிவிடுமோ? என்று பயமாக இருந்தது.

**ஸ்ரீவித்யா**

(தொடர்ந்து வரும்)

# கோகிலா என்ன செய்து விட்டாள்?

02

'அவளென்ன சாதாரண மனைவியா?' என்று ஒரு வகை விரக்தியோடு சிரித்துக் கொண்டான்.

"நாம ரெண்டு பேருமே மனசுக்குப் பிடிக்காத ஒரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கோம்... இல்லையா?"

"ஆமா, அதுக்கென்ன?"- அது வரையிலும் அவள் முகத்தில் ஒரு நிரந்தரம் போல குடிகொண்டிருந்த அந்தப் பொய்யான புன்னகை மறைந்து எந்த ஒரு ஆணும் தன் மனைவியின் முகத்தில், கண்களில், உதடுகளின் வளைவில் காணக் கூடாத ஒரு கொடிய வெறுப்பும், குரோதம் மிகுந்த விரக்தியும் குடிகொண்டிருந்தது. அடி வயிற்றில் மூண்ட கனலை அவளது கண்கள்தான் என்னமாய் உமிழ்ந்தன. நெருப்பையே சுவாசித்துக் கொண்டிருப்பதைப்போல அந்த நாசித் துவாரங்கள் தாம் எவ்வளவு விகாரமாய் விரிந்து, சுருங்கின.... அந்த மெல்லிய உதடுகளின் வளைவில் திடீரெனக் கோரப் பற்கள் முளைப்பதுபோல என்னமாய் ஒரு வெறியோடு அந்த வாயின் அமைப்பே மாறி வக்கிரம் பெற்றது.

**தமிழ் நாட்டின்**
**முற்போக்கு எழுத்தாளர்**
**ஜெயகாந்தன்.**
**அவரது எழுத்துக்கள்**
**உலகப் பிரசித்தமானவை.**
**பலகோடி வாசக' நெஞ்சங்களை**
**வசீகரம் செய்தவை.**
**ஒரு காலத்தில் ஓய்வே இல்லாது**
**வெகுஜன சஞ்சிகைகளிலும்**
**எழுதிக் குவித்தார்.**
**இப்போது அவர் எழுதுவதில்லை.**
**எத்தனை கோடி தந்தாலும்**
**கதை எழுத மாட்டேன்**
**என்று சபதம்.**
**அந்த மாபெரும் எழுத்தாளரது**
**படைப்புக்களில் ஒன்றுதான் இது!**
**உங்கள் வரவேற்பை**
**நிச்சயம் பெறும்.**



-அந்த அனுபவத்தை நினைத்துப் பார்க்கக்கூடச் சகிக்காமல் அனந்தராமன் தலையை உலுக்கிக்கொண்டான். அப்படிப்பட்ட ஒரு முகத்தைப் பார்த்தவுடன் அவளைப் புண்படுத்த வேண்டுமென்பதற்காகவே அவன் அப்போது சொன்னான்: "நீ என்னை வெறுக்கிறாய்; நானும் உன்னை வெறுக்கிறேன்."- அதாவது அவன் பல்லைக் கடித்துக் கொண்டு ஆங்கிலத்தில், சொன்னான்: "யூ ஹேட் மீ, ஐ டூ ஹேட் யூ!"

அவள் அவனை அமைதியாய்ப் புருவங்களை உயர்த்தி நோக்கி குரல் வளையில் நின்று குலுங்கும் ஒரு சிரிப்போடு, "அதற்கென்ன தெரிந்தது தானே?" என்றாள்.

"நீ என்னிக்காவது ஒருநாள் அவனோட ஓடிப்போவே."

"சீ! இப்படிப் பேச உங்களுக்கு வெக்கமாயில்லே?"

"வெட்கம்! அதுகூடத் தெரியுமா உனக்கு?"

அவளுக்கு திடீரென்று இரைந்து ஆங்கிலத்தில் கத்தினாள்; "இந்தத் தலை வேதனை இன்னிக்குக் காலையிலேயே ஆரம்பிச்சுடுத்தா?"

அனந்தராமன் அவளைச் சற்று நேரம் வெறித்துப் பார்த்தான். அந்த மௌனத்தில் அவன் சற்றே அமைதி அடைந்தான். அந்த அமைதியில் அவன் மேலும் உறுதி பெற்றான். அந்த உறுதியில் அவனுக்கு மூர்க்கமான ஒரு பிடிவாதமே விளைந்தது. அந்தப் பிடிவாதத்தில் இன்று இதற்கு ஒரு முடிவு காணவேண்டுமென்ற தீர்மானமும் பிறந்தது.

அவன் மெதுவான குரலில் கனமாகப் பேசினான்: "அவன் நிழலைக்கூட இந்த வீட்டில் இனிமேல் ஒருமுறை நான் பார்க்கக்கூடாது புரிகிறதா?" என்று கூறியவாறே அந்தத் தனது உத்தரவைக் கேட்டு அவள் முகத்தில் ஏற்படும் சிறு சலனத்தைக் கூடப் பயில்வது போல் தனது பார்வையைக் கூர்மையாக்கி அவளைப் பார்த்தான்.

அவள் அமைதியாக ஒரு பெருமுச்சுடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் முன்னே உணர்ச்சிச் சூடேறிப் பற்றி எரிவதால் படபடக்கும் தனது விரல் நுனிகளை ஏந்தியவாறு பற்களைக் கடித்துக் கொண்டு மேலும் தாழ்ந்த குரலில் அவன் சொன்னான்: "எனக்குத் தெரியுமே- உனக்கு வாழ்க்கையிலே கிட்டாத சந்தோஷமெல்லாம்" அவன் முகதரிசனத்திலேயே கெடச்சுடுது-ஓ! இப்பொழுது அவன் வாய் விகாரமாய்ப் பிளந்திருந்தது!- "அவனைப் பார்த்த உடனே அப்படியே மலர்ந்து பூரிச்சிப் போயிடறே நீ. எனக்கு அதைத் தாங்க முடியலியே. உனக்கு அவன்தான் முக்கியம்னா அவனை எங்கேயாவது சந்திச்சுக்கோ. என் கண் முன்னேயே இந்த வீட்டுக்குள்ளேயே இந்த நாடகத்தை என்னால் அனுமதிக்க முடியாது!"

உணர்ச்சியும் அறிவும் நைந்து பல வீனப்பட்டு ஒரு அற்ப மனிதனாய்க் குறுகிப் போன அவனைக் கண்டு அவள் சிரித்தாள்: சப்தமில்லாத சிரிப்பு! உதடுகள் லேசாகப் பிரிந்து ஒரு பக்கம் விலகி இடைவெளி காட்டி 'ஏ! புழுவே' என்பது போன்ற சிரிப்பு.

என்ன செய்கிறோம் என்று தெரியாமல் கையிலிருந்த காபித் தம்ளரை ஓங்கித் தரையில் அறைந்தான் அது தன்மேல் படாமல் விலகி நின்று 'ம்- அப்புறம்?' என்பதுபோல் அவனை விஷமமாகப் பார்த்தாள் அவள். அந்தத் தம்ளரை அவள் எடுத்து வைப்பாளென்று அவன் எதிர்பார்த்தான்.

அவளோ இவனுக்கு வெறி பிடித்திருப்பதை ரசிப்பதே போன்று மார்பின்மீது கைகளைக் கட்டிக் கொண்டு சுவரில் சாய்ந்து நின்று "ரொம்ப நல்லாருக்கு" என்றாள்.

அவன் நிலை குலைந்தான். தனது செய்கையினால் தானே பாதிக்கப்பட்டதைப் போன்று 'சீ' என்று தலையைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்து சென்று அறைக்குள்ளே கிடந்த கட்டிலின்மேல் அமர்ந்தான்.

'வெறி அடங்கி வருகிறது' என்று தன்னுள் முனகிக்கொண்ட அவளுக்கு இப்போது கோபம் மூண்டது. "காலத்துக்கும் இதே கழுத்தறுப்பா? பார்க்கறவா சிரிச்சுக் காறித் துப்பறா! போறும் போறும், பத்து வருஷமா எனக்கு- இதுக்கு ஒரு முடிவு வேணும்!"

"அதைத்தான் நானும் சொல்கிறேன். இதுக்கு ஒரு முடிவு வேணும்" என்று அடங்கி வந்த கோபம் திரும்பிவர அவன் கத்தினான்.

"ஏன் இப்படி அலறணும்- நம்ம லட்சணம் எல்லாருக்கும் தெரியணும்போல இருக்கு! நான் என்ன பண்ணனும்? அதைச் சொல்லுங்கோ?"

"அவன் இனிமே இங்கே வரப்படாது. நம்ம வாழ்க்கை நல்லா இருக்கணும்னா நீ அவனைப் பார்க்கவே கூடாது."

"சரி"- அத்துடன் அவள் நிறுத்தி இருக்கலாம், ஆனால் அவள் தொடர்ந்து சொன்னாள்: "சரி, அவர் வரலே- நானும் பார்க்கலே- அதோட நம்ம வாழ்க்கை அப்படியே பூத்துக் குலுங்கிடுமாக்கும்! நான் அவரையே நெனச்சிண்டுருப்பேன்னு உங்களுக்குத் தோணுமே. அதுக்கு நான் எங்கே போய் அழுவேன்?"

எவ்வளவு பசையற்ற நெஞ்சோடு இவள் தன்னைக் கேலிசெய்கிறாள் என்று அவனுக்குத் தோன்றிற்று. அவனும் அவளைக் குரூரமாகக் கேலிசெய்ய முனைந்தான்.

"எனக்குத் தோன்றது இருக்கட்டும், உங்களால் முடியாதே. நீங்க அப்படியே பெரிய பிளாடானிக் லவர்ஸ் காவியக் காதலர்களாச்சே!"

அவனது கிண்டலுக்காக அல்ல. தன்னைப் பற்றிய அவனது கேவலமான கணிப்பை எண்ணியபோது அவளது அடி வயிற்றிலிருந்து என்னவோ சுரந்து மேற் கிளம்பித் தொண்டையில் வந்து கசந்து குமட்டியது அவள் காறித் துப்பினாள்.

தன் முகத்தில் துப்பாத குறையாக அவள் தரையில் துப்பி இருக்கிறாள் என்பதாக அந்தச் செயலை அதீதமாய்ப் புரிந்துகொண்டு, வந்த ஆத்திரத்தில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல், என்னவும் செய்யலாம் என்ற வெறியேறிய திமிரில் தனது விரல் நகங்கள் அவளது மேவாயில் அழுத்திப் புதைய மூர்க்கமாய் அவள் முகத்தைப் பற்றி நிமிர்த்தி அவள் முகத்திலேயே அவன் காறித் துப்பினான்.

அடுத்த வினாடி தன்செயலுக்காக அவன் வெட்கப்பட்டான்; அங்கு நிற்க முடியாத தவிப்பில், திடீரென்று அங்கு நிலவிய அமைதியில் ஒரு பயம் கொண்டு அங்கிருந்து நகர்ந்து- அந்த அறையிலேயே அவள் கண் படாத ஒரு மூலையில் போய் நின்று கொண்டான். அவனுக்கு அழுகை வந்தது. தன் மீதே வெறுப்பு வந்தது, தன்னை நினைத்தே அவனுக்கு உடம்பு கூசிற்று. 'சீ- இவள் என்ன எவ்வளவு கேவலமானவளாக மாறிவிட்டாள்' என்ற நினைப்பில் அவளுக்கும் தனக்கும் விளைந்த உறவுக்காக அவன் மனம் இப்போது அழுதது. 'வாழ்க்கை முழுவதும் இப்படியே இருக்குமோ' என்ற கற்பனையில் அவன் திகைத்து மருண்டான். கலியாணம் என்கிற பந்தம் இந்த தேசத்தில் ஏன் இப்படி அவிழ்க்க முடியாத முடிச்சாய், பிரிக்க முடியாத சிக்கலாய் விழுந்து இறுகி விபரீதமாய் உறுத்தி மனித உணர்ச்சிகளையே தண்டிக்கும் விலங்காய் மாறிப்போயிருக்கிறது என்று எண்ணிப் பார்த்தான்.

சற்று நேரம் கழித்து அவன் திரும்பிப் பார்த்தபோது கோகிலம் அங்கே இல்லை. அவள் பாத்ரூமில் முகம் அலம்பிக் கொண்டிருப்பது அறைக் கதவின் வழியே தெரிந்தது.

ஜெயகாந்தன்

(கோகிலா.... தொடரும்)

---

# அரங்கம் அந்தரங்கம்

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

11

கமலநாதன் சட்டம் படித்தவர்; அதைவிட இந்திய ஜனநாயகத்தில் ஊறித் திளைத்தவர்.

இந்திய ஜனநாயகத்தில் அகன்ற சாலைகளைவிட, சந்து பொந்துகள் தானே அதிகம்!

எலி மட்டுமே போகக்கூடிய பொந்துகளிலெல்லாம் தான் புகுந்து வெளியே வரும் சக்தி படைத்தவர் கமலநாதன்.

பொலிஸ் மாநாட்டை முடித்துக் கொண்டு அவர் தன் அலுவலகத்துக்கு வந்தபோது, கூட்டம் கூட்டமாகப் புதுக் குற்றவாளிகள் அங்கே நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

"இந்த நாய்களைக் கோர்ட்டில் ஆஜர் படுத்தி, ரிமாண்டில் வை!" என்று அங்கிருந்த பல்வேறு இன்ஸ்பெக்டர்களுக்கும் ஆணையிட்டார் கமலநாதன்.

அங்கு நின்ற குற்றவாளிகள் பலரிடம் பணம் இல்லை; இருந்திருந்தால் அவர்கள் குற்றவாளிகள் ஆகியிருக்க மாட்டார்கள்.

அவர் தனது மேஜையின் முன்னால் உட்கார்ந்ததும் திடீரென்று அவருக்கு ஒரு டெலி:போன் வந்தது.

பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள கமலா ஒட்டலில், ஆறு ரூம்களில் விபசாரம் நடப்பதாகச் செய்தி வந்தது.

ஐயையோ! சட்டம் ஒழுங்கு குலைகிறதே!

விடுவாரா கமலநாதன்?

அந்தப் பகுதி இன்ஸ்பெக்டருக்கு டெலி:போன் செய்தார்.

எங்கே போகிறோம் என்று சொல்லாமல், "மூன்று வேனில் பொலிஸ்காரர்களையும், இரண்டு ஜீப்பையும் நிறுத்தி வைக்கும்படி" கட்டளையிட்டார்.

'இன்ன இடத்துக்குப் போகப் போகிறோம்' என்று மேலதிகாரிகள் கீழ் அதிகாரிகளுக்குச் சொல்வதில்லை.

ஏனென்றால் அதில் மாமூல் பேர்வழிகள் அதிகம் இருப்பார்கள்; முன்கூட்டியே செய்தி சொல்லி அனுப்பி விடுவார்கள் அல்லவா? வாங்கினால் தான் வாங்கலாம்; தனக்கு கீழே உள்ளவன் வாங்கக்கூடாது என்பது தானே பொலிஸ் தர்மம்!

கமலா ஒட்டலில் நல்ல சரக்குகள் பிடிபட்டால், அது கமலநாதனின் நண்பர்களுக்கு உதவுமே?

விலை மாதர்களைக் கைது செய்து, விலை இல்லாது அனுபவிக்கும்படி பொலிசாரின் வேதப் புத்தகத்தில் சொல்லப்பட்டு இருக்கிறதல்லவா?

பூந்தமல்லி நெடுஞ்சாலைப் பொலிஸ்காரர்களுக்கு ஒரே கொண்டாட்டம்.

நேரே கமலநாதனின் ஜீப் ஸ்டேஷனுக்குள் நுழைந்தது.

"என் பின்னால் வாருங்கள்!" என்று அங்கு நின்ற வேன்களுக்கு உத்தரவிட்டார்.

அந்தப் பகுதி இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டர்களும் ஏறிக் கொண்டார்கள்.

ஒரு தீ அணைக்கும் படை போவது போல மூன்று ஜீப்களும், மூன்று வேன்களும் பிரமாண்டமான அந்தக் கமலா ஒட்டலுக்குள் நுழைந்தன.

அது ஒரு ஐந்து நட்சத்திர ஒட்டல்.

அந்நியர்கள் அதிகம் தங்குமிடம்.

அந்நிய நாணயச் செலாவணியும் அதிகம் சம்பாதிக்கும் இடம்.

பொலிஸ் கூட்டம் உள்ளே நுழைவதைப் பார்த்து அங்கு நின்ற ஒரு ஜெர்மன்காரர், பக்கத்தில் நின்ற ஒரு தமிழரை, "என்ன?" வென்று வினவினார்.

"விபசாரம் நடப்பதாக 'ரெப்' பண்ண வந்திருக்கிறார்கள்" என்று அந்த நண்பர் சொன்னார்.

"வாட் நான்சென்ஸ்! எங்கள் நாட்டில் ஆண்களும் பெண்களும் உறவு கொள்வதையே சட்ட பூர்வமாக ஆக்கி இருக்கிறோமே! விபசாரம் என்றால் என்ன? ஆசை உள்ள ஒரு ஆடவன் விரும்பி வருகிற ஒரு பெண்ணோடு உறவு கொள்வது தானே! இதில் பொலிஸ்காரனுக்கு என்ன வேலை? இந்தியர்கள் மடையர்கள்!" என்றார் அந்த ஜெர்மன்காரர்.

கமலநாதனின் தலைமையில் சென்ற பொலிஸ்காரர்கள் அந்த ஒட்டலின் ஒவ்வொரு அறைக் கதவையும் எட்டி எட்டி பூட்ஸ் காலால் உதைத்தார்கள்.



ஒரு அறைக்குள் பொலிசார் 'திபுதிபு' வென்று நுழைந்தார்கள்.

அங்கே அப்போதுதான் குளித்துவிட்டு தலை துவட்டிக் கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கேள்வி கூடக் கேட்காமல் கைது செய்து விட்டார்கள்.

அந்தப் பெண்ணோ, ஐதராபாத்தைச் சேர்ந்த ஒரு கெஸட் பதிவு பெற்ற அதிகாரியின் மனைவி. சென்னையில் தன் உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்காக வந்திருந்தாள். அதை அவள் எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை.

இன்னொரு அறையில் ஒரு நடுத்தர வயதுக்காரர். மதுரையில் இருந்து தன் மகளைப் பெண்கள் கல்லூரியில் சேர்ப்பதற்காக வந்திருந்தார்.

அவரையும், அவரது மகளையும் விபசாரம் செய்ததாகப் பொலிசார் கைது செய்து விட்டார்கள்.

அவள் பெயர் சுமித்ரா.

காரணம், அந்த ஆந்திரப் பெண்ணும் சுமித்ராவும் அழகாக இருந்தார்கள். கமலநாதன் விடுவாரா?

எல்லா அறைகளிலும் இருந்த மணிபர்சுகள், கைக்கடிகாரங்களை அதிகாரிகள் தங்கள் பெரிய பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டார்கள்.

அத்தோடு விட்டார்களா?

சமையல் அறைக்குள்ளும் சென்று விபசாரிகளைத் தேடினார்கள்!

அங்கிருந்த கோழி வறுவல், மீன் வறுவல் முதலியவற்றை 'சோதனை' செய்வதற்காக மூட்டைக் கட்டிக் கொண்டார்கள்.

அப்பாடா!

எப்படியோ ஒட்டலில் சட்டம் நிலை நாட்டப்பட்டு விட்டது.

அங்கு பிடிக்கப்பட்ட பெண்களில் அழகான பெண்களையெல்லாம் தனி லாக்-அப்பில் வைக்கும்படி கமலநாதன் உத்தரவிட்டார்.

வீட்டுக்குப் போய் குளித்துவிட்டு வருவதற்காகப் புறப்பட்டார்.

கவியரசு கண்ணதாசன்

(அந்தரங்கம் வரும்)

# அவள் வித்தியாசமானவள்

"தலை நிறைய மல்லிகைப்பூவோட செக்கச் செவேல்னு தக்காளிப்பழம் மாதிரி ஒரு தேவதை அதோ போய்க்கொண்டிருக் காளே..... அவ யார்டா?"

"அவளா... முன்னாள் மாகாணசபை மந்திரி தங்கத்துரையோட ஒரே பொண்ணு. பேரு வினயா! முன்பு ஏதோ ஒரு இயக்கத்தில இருந்தாளாம். இப்போ அதெல்லாத்தையும் விட்டுட்டு ஏதோ ஒரு தனியார் நிறுவனத்தில வேலைக்குப் போய்க்கிட்டிருக்காள்; உன்னோட சேட்டையெல்லாம் அவகிட்ட செல்லாது. ஜாக்கிரதை!"

"போடா... பயந்தாங்கொள்ளி! ஆனா நான் யார்? கோடீஸ்வரர் மகாதேவனோட பையன்! பொறுத்திருந்து பார். இந்த ரகுவர னோட வேலையை!" நண்பர்கள் இருவரும் பிரிந்தனர்.

வழக்கம்போல் அன்றும் வினயா வேலைக் குப் போவதற்காக பஸ்தரிப்பு நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். வேகமாக வந்த ஒரு கார் அவளை உரசினாற்போல் நின்றது. புறப்பட்டது! வினயா அந்த இடத்தி லிருந்து காணாமல் போயிருந்தாள்.

காருக்குள்... "என்ன வினயா என்னைத் தெரியுமா உனக்கு?"

"என்ன சார் அப்படி கேட்டுட்டீங்க? அமைச்சர் மகாதேவன் சாரோட மகன் ரகுவரன்தானே நீங்க?" சர்வ சாதாரண மாகக் கேட்டாள்.

ஆச்சரியத்தில் அசந்துபோன ரகுவரன், "என்னது கொஞ்சங்கூடப் பயமில்லாமல சர்வ சாதாரணமா பேசறியே?" என்றான்.

"நான் எதுக்காகப் பயப்படணும்... நீங்க என்னைக் கடத்திக்கிட்டுப்போறத பார்த்தா என்னோட சிலமணிநேரங்கள் ஜாலியா இருக் கணும்னு விரும்பறீங்கன்னு நெனைக்கிறேன். ஆனா அதுக்காக நீங்க கஷ்டப்பட்டு இப்படி என்னைக் கடத்தவே தேவையில்லை; ஒரு கண்ஜாடை காட்டியிருந்தா போதும். கூப்பிட்ட இடத்திற்கு நானே வந்திருப்பேன்!" என வினயா கூறியதைக்கேட்ட ரகுவரன் அதிர்ச்சி, ஆச்சரியம், ஆனந்தம்... இன்னும் என்னென்ன உணர்ச்சிகள் இருக்கிறதோ அத்தனை உணர்ச்சி களையும் கண்களில் தேக்கிக் கொண்டு "எ... என்ன சொல்ற நீ?" எனக் கேட்டான்.

"ஆமா ரகு... இதில ஆச்சரியப்பட என்ன இருக்கு? என் தொழிலே அதுதானே. அதாவது பார்ட்டைம் ஜொப்!" எனக் கூறிய வினயா ரகுவரனை ஓரக்கண்களால் பார்த்தாள்.

பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப்போல் ரகுவின் நாவில் ஊறிக்கொண்டிருந்த உமிழ்நீர் 'மடக்' கென அவனது தொண்டைக்குள் இறங்க, "அப்படீன்னா உன்னோட ரேட் எவ்வளவு?" என்றான் ஆசையை அடக்கமாட்டாமல்.

"ரேட்டா... உங்ககிட்டயா; என்ன ரகு... நான் பொலிஸ் கிலீஸ்னு ஏதாவது வம்பு தும் புல மாட்டிக்கிட்டா அமைச்சர்கிட்ட அதாவது உங்க அப்பாக்கிட்ட சொல்லி எனக்கு உதவி பண்ண மாட்டீங்களா?" என்று வினயா கேட்க; "ஓ... நிச்சயமாக." என்று கூறிய ரகு அதன்பிறகு ஒன்றும் பேசவில்லை.

சில நிமிடங்களில் அந்த மலையடிவாரத் தில் இருந்த பெரியபங்களா முன்னால் கார் நின்றது. இருவரும் இறங்கி பங்களாவுக்குள் நுழைந்தார்கள். அப்பனுக்கும் மகனுக்குமாகச் சேர்த்து சில சில்மிஷ வேலைகளுக்காகவே கட்டப்பட்ட அந்த ஒதுக்குப்புறமான பங்களா வில் எல்லா வசதிகளும் இருந்தன.

படுக்கையறைக்குள் நுழைந்த வினயா பிரமித்துப் போனாள். அந்த அளவுக்குப் பிரமாண்டம்.

கட்டிலில் அமர்ந்த ரகு வினயாவையும் இழுத்து தன் பக்கத்தில் அமர்த்திக்கொண்டு அவளை அணைக்க முயன்ற போது, "ப்ளீஸ்.. கொஞ்சம் இருங்க..." என்றவாறு தன் கைப்பையைத் திறந்த வினயா அதனுள் கையை விட்டு இரண்டு குளிசைகளை எடுத்து ஒன்றை தன் வாயில் போட்டுக் கொண்டு மற்றதை ரகுவிடம் நீட்டினாள்.



மாத்தளை ஆர். பாலகிருஷ்ணன்

ஆச்சரியத்துடன் பார்த்த ரகு, "என்ன இது மாத்திரை?" என்றான் கண்களை அகல விரித்தபடி.

"உற்சாக மாத்திரை, என்ன புரியலையா? இத போட்டுக்கிட்டா நான் இல்லா மலே நீங்க சொர்க்கத்தைக் காணலாம்." என்றாள்.

"ஓஹோ! வயகராவா?"

"ஆமாம்... உள்ளூர் வயாகரா" சிரித்தாள் வினயா. அந்த சிரிப்பில் பித்தனானான் ரகு.

"கொண்டா... கொண்டா...!" வாங்கி வாயில் போட்டுக் கொண்டான். அரை நிமிடங்கூட கழிந்திருக்காது. கண்கள் செருக, கட்டிலில் சரிந்தான். அந்தக் காலைப் பொழுது அவன் கண்களுக்கு மந்தமாருதமாக மங்கலாகத் தெரிந்தது.

"டேய்... பொம்பளப் பொறுக்கி ராஸ்கல்! பெண்களெல்லாம் உனக்கு முந்தானை விரிக் கணும்னு சட்டமா? நீ என்ன பெரிய மைனர்னு நெனைப்போ? உன்ன மாதிரி அயோக்கிய நாய்களுக்கு நான் கொடுக்கிறது தாண்டா சரியான தண்டனை. இப்போ நீ விழுங்கியது உற்சாக மாத்திரையில்லடா உன் உயிரைக் குடிக்கிற மாத்திரை. இப்போ நான் இல்லாமலே நீ சொர்க்கத்திற்கோ, நகரத்திற்கோ போகப் போற!" ஆவேசம் பிடித்தவள் போல் பொரிந்து தள்ளினாள் வினயா.

"அ... அப்போ நீ...நீ...நீ. விழுங்கியது..." நாக்குழறியது ரகுவுக்கு. "அது வெறும் பெனடோல்டா மவனே! இப்பப் புரியுதா இந்த வினயா யார்னு?"

ரகுவின் உயிர் அவனது உடலைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்க; வினயா அந்த பங்களாவை விட்டு வெளியேறிக் கொண்டிருந் தாள்.

# அப்பா

"என்ன சுவேதா ஒரு மாதிரி இருக்க?"

"ஒண்ணுமில்லை"

"இல்ல என்னவோ இருக்கு. சொல்லு உடம்புக்கு ஏதாச்சும் செய்யுதா...?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீங்க சாப்பிடுங்க"

"அப்பா சாப்பிட்டாரா?"

"ம்...!"

சில வினாடிகள் நிசப்தமாகக் கரைந்தது அந்த அமைதியை கலைத்தவளாக,

"என்னங்க நான் ஒண்ணு சொன்னா கோவிக்க மாட்டீங்களே?" என்றவாறு தண்ணீர் முடிந்த கிளாஸிற்குள் மீண்டும் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த மனைவி சுவேதாவை நிமிர்ந்து பார்த்தவாறே, "அதான் சொன்னேனே... சொல்லு என்ன விசயம்?"

"இல்ல உங்க அப்பாவைப் பற்றித்தான்!" என்று சுவேதா கேட்கவும் கைகளைக் கழுவிக்கொண்ட சிவா.

"ஆ... அப்பாவுக்கு என்ன?"

"நீங்க ஒப்பீசுக்குப் போனபிறகு நானும் பள்ளிக்கூடத்திற்கு போன பிறகு அவர் உதவிக்குக்கூட யாருமில்லாம தனியா கஷ்டப்படுகிறார் பாவம்."

அப்பாவைக் கண்டாலே எரிந்து விழு வதுபோல் நடந்து கொள்ளும் சுவேதா, இன்று அப்பா பாவம் என்று சொல்வது சிவாவுக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் எதற்காக இப்படி பக்குவமாக கதைக்கிறாள். என்பதை தெரிந்து கொள்வதற்காக "ம்" கொட்டிக்கொண்டு இருந்தான்.

"ம் அதற்கு என்ன செய்யச் சொல்லுற சுவே?" இவர்களின் பேச்சின்போது, சிவாவின் அப்பா கனகசபைக்கு தண்ணீர் தாகமெடுக்க வும் வழமையாக தண்ணீர் எடுத்து வைத்துக் கொள்ளும் பிளாஸ்ரிக் போத்தலை எடுத் துக்கொண்டு குசினிக்கு வந்த கனகசபை தன் கதை நடைபெற்றுக் கொண்டிருப்பது காதில் விழவும் ஓரமாக நின்று கொண்டார்.

"இல்லங்க மாமாவுக்கு கதைப்பேச்சுக்கு மாமாவமாதிரி நாலுபேர் இருக்கிற இட மெண்டால் எதையும் யோசிச்சிக்கிட்டு இருக் காம மாமாவும் சந்தோஷமா இருப்பார்..."

"இத நானே சொல்லணும் எண்டு நினைச்சன்... அப்பா அத ஊத்தையாக்கிறார், இதை ஊத்தையாக்கிறார் என்று எப்பவும் நீ குறை சொல்லிக்கிட்டே இருக்கிறது எனக் குக்கூட மனசுக்கு ஒரு மாதிரித்தான் இருக்கு. அதால நானே ஒரு முடிவுக்கு வந்திட்டன்."

"என்ன முடிவுங்க?"

"அப்பாகிட்ட ஒருமாதிரி கதைச்சி அவரை வயோதிபர் இல்லத்தில சேர்த்து விடலாம்னு இருக்கிறேன்," என்றதும்!

"அதத்தான் நானும் சொல்ல நினைச்ச னான். நாம கிழமைக்கு ஒரு தடவை போய்ப் பார்க்கலாம்தானே? மாமா இதுக்கு சம்மதிப்பாரோ தெரியல."

"நீ ஏன் சுவே யோசிக்கிற...? காலையில நான் அப்பாவிடம் கதைச்சி ஒழுங்கு செய் யிறன். நீ போய் படுக்கையைப் போடு!" என்றவன் எழுந்து கொண்டான்.

தண்ணீரைப் பிடித்துக்கொண்டு படுக் கைக்குத் திரும்பிய கனகசபைக்கு அழுகை வந்துவிடும் போல் இருந்தது. 'மனைவி இறந்ததோடயே தானும் போயிருந்தா இவையளுக்குப் பாரமாக இருந்திருக்க வேண்டி இருந்திருக்காது.' என்ற விரக்தி தன் வெறுமையான சிறகுகளை விரிக்கத் தொடங்கியது.

'இவன் சிவா பிறந்திருக்கும்போது என் னையே உரிச்சி வச்சமாதிரி இருக்கான் எண்டு பாக்கிறவையள் சொல்லும்போது எவ்வளவு சந்தோசப்பட்டேன் என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும். இவன்தான் கடைசி வரைக்கும் வச்சிப்பார்ப்பான் என்ற நம்பிக்கை அப்போதே இருந்தது.



திருமலை தாமரைமகன்

நல்லா ஞாபகமிருக்கு. இவனுக்கு ஒருக்கா மலேரியா காய்ச்சல் வந்து சாக பிழைக்க கிடந்த நேரம் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு கோயில் குளமெண்டு அழுது அழுது திரிஞ்சது. அப்ப இவன் கிடந்த கிடையை இப்ப நினைச்சாலும் உடம்பு சிலிர்த்துப் போகும்.'

மத்த நாலு பிள்ளையளை விட கடக் குட்டியான இவன் மேல அளவு கடந்த பாசம் வச்சி வளர்த்து இந்தப் பிரச்சனைக் குள்ளே தனிப்பெடியனா இருந்தா பிடிச்சுக் கொண்டு போயிடுவாங்கள் என்று கல்யாணத்தை செய்து வச்சோம். இவனுக்கு கல்யாணம் முடிஞ்ச மறுமாசமே மனைவியை இழந்த கவலையில் ஒவ்வொரு இரவும் கனகசபையின் மனது அழும்.

அவ்வளவு ஆசையா வளர்த்த மகன் தன்னை ஒரு பாரமா நினைக்கிற அளவுக்கு தன்னுடைய கடைசி கால வாழ்க்கை திசை மாறிப் போயிருப்பதை நினைக்க நினைக்க கனகசபைக்கு தள்ளாத வயதிலும் உறுதியா இருந்த மனசு சுக்கு நூறாய்ப் போனது.

வயசுபோய், ஓய்ந்துபோய் இருக்கிற இந்த நேரத்தில் வச்சிப்பார்க்க முடியாம வயோதிபர் இல்லத்தில் பெற்றோர்களை சேர்த்து விட்டிட்டா தொல்லை முடிஞ்சிடும் என்று நினைக்கிற பிள்ளைகளை பெத்த பெற்றோர்கள் அபாக்கியசாலிகள்தான். அந்த வரிசையில் தானும் ஒரு அபாக்கிய சாலியாகிவிட்டதை ஜீரணிக்க முடியாமல் மூச்சுவிட மிகவும் கஷ்டமாக திணறிக் கொண் டிருந்தார் கனகசபை.

மறுநாள் பொழுதும் விடிந்தது தேத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்த சுவேதா "ரமேஷ்போய் தாத்தாவினுடைய கோப்பையை எடுத்துவா." என்று மகனை அனுப்பினாள். "இல்ல சுவேதா நானே போய் குடுத்திட்டு வாரன்... அவரோட கதைக்கவும் வேணும்."

சாப்பாட்டுடன் போன சிவா இரவுச் சாப்பாடும் சாப்பிடாமல் கிடப்பதை பார்த்து விட்டு தகப்பனின் அருகில் இருந்து கொண்டான்.

"அப்பா இரவு சாப்பிடலையா? அநி யாயம்.. சரி பரவாயில்லை எழும்புங்க விடிஞ்சிட்டுது. உங்களுக்கும் தனியா இருக்க யோசனையாகத்தான் இருக்கும். அதனால உங்களுக்கு விருப்பமெண்டால் உங்களோட கதைச்சுப் பேச நாலுபேர் இருக்கிற வயோ திபர் இல்லத்திற்கு கூட்டிக்கிட்டுப் போகலா மெண்டு இருக்கிறன். அதுக்காக ஒண்டுக்கும் யோசிக்காதீங்க; நாங்க அடிக்கடி வந்து பார்த்துக்குவோம்! என்னப்பா சொல்றீங்க, உங்களுக்கு விருப்பமா?" இவ்வளவு சொல்லி யும் எதுவுமே பேசாது திரும்பாமல் படுத் திருக்கும் தகப்பனை தன்பக்கம் திருப்பு வதற்காக அவர் மேல்கையை வைத்தபோது தான் அவர் உடம்பு சில்லிட்டு விறைத்துப் போய் இருப்பது சிவாவுக்குப் புரிந்தது. ●

# தொலைக்காட்சி நட்சத்திரம்

தொலைக்காட்சி அறிவிப் பாளர்கள் பலர் நட்சத்திர அந்தஸ்துடன்தான் கணிக் கப்படுகின்றார்கள். நம் நாட்டில் மட்டுமல்ல பல வெளிநாடுகளில் கூட இதுதான் உண்மையாக இருக்கிறது.

கார்த்திகா சிவசுப்பிரமணியம் ஒரு புகழ் மிக்க தொலைக்காட்சி அறிவிப்பாளர் மட்டு மல்ல, புகழ்மிக்க செய்தி வாசிப்பாளராகவும் திகழ்கின்றாள். ஆனாலும் அவளின் குரலில் அப்படியொன்றும் பெரிய கவர்ச்சியிருக் கின்றது என்று சொல்லிவிட முடியாது.

ஆனாலும் இலட்சக்கணக்கான இரசிகர் களை அவள் தன்னகத்தே இழுத்து வைத்துத் தானிருக்கிறாள். இதற்கு அவளின் பேரெழி லும், அழகு ஆளுமையுந்தான் பிரதானமாக விளங்குகின்றது.

கார்த்திகா தொலைக்காட்சியில் செய்தி வாசிக்க வந்துவிட்டாலேபோதும்; சின்னஞ் சிறுசுகள் முதல் குடுகுடு கிழவர்கள்வரை தொலைக்காட்சியை மொய்த்துவிடுவார்கள்.

அன்று அவள் செய்தியில் என்ன சொன்னாள் என்று யாரிடமாவது கேட்டால், சத்தியமாகப் பலபேர் திருதிருவென்றே முழிப்பார்கள்.

அத்தனைபேரும் அவளது அழகையே வாய்பிளந்து இரசித்துப் பார்த்துக் கொண்டி ருப்பார்கள்.

இந்தக் கார்த்திகாவிற்கு முப்பத்தி நான்கு வயதாகின்றது. படைத்தவன் வந்து பார்த் தால்கூட இருப்பத்தைந்து வயதிற்கு மேல் ஒருநாளைக்கூட கூட்டிச் செல்லமாட்டான். அப்படியிருந்தும் அவுளுக்கு இன்னமும் திருமணம் நிகழவில்லை.

'திருமணம் நிகழவில்லை' என்று சொல் வதைவிட திருமணத்திற்கு அவள் சம்மதிக்க வில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

பொதுவாகப் பெண் பகுதியினர்தான் ஆண்களை மாப்பிள்ளை கேட்டுப் படியேறு வார்கள். ஆனால் கார்த்திகாவைப் பொறுத்த வரை இலங்கையிலுள்ள பல இலட்சாதிபதி கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் என்று பலதரப்பட்டோர் அவளைத்தான் கேட்டு அலைந்திருக்கிறார்கள்.

அவளுக்கு இந்தத் திருமணம் என்னும் பந்தத்திற்குள் நுழைவதற்கு அவ்வளவாக இஷ்டமில்லை. தன் அழகையெல்லாம் ஒருவ னுக்கு அம்பலமாக்கி, வீட்டினுள் முடங்கிக் கிடந்து, குழந்தை குட்டி பெற்று, அடுப்பூதி இப்படி அந்தப் பந்தத்திற்குள் கட்டுப்படுவது அவளுக்குப் பிடிக்காமலேயிருக்கிறது.

இதனால்தான் அவளின் தாயும் அவ ளைத் திருமணம் செய் என்று வற்புறுத்தி, வற்புறுத்தி இப்பொழுது விதி வந்தால் எல்லாம் தானாக நடக்கும் என்று சமாதானத் துடன் அடங்கியேவிட்டாள்.

முந்தநாள் கூட அவளது மாமா ஊரி லிருந்து வந்திருந்தார். ஆளுங்கட்சியில் புக ழுடன் இருக்கும் ஓர் அரசியல்வாதி. பெண் கள் விடயத்தில் கண்ணியமானவர் என்று பெயரெடுத்த அந்த அரசியல் பிரமுகர் அவளைப் பெண்கேட்டு அனுப்பியிருந்தார். அந்தச் சம்பந்தத்தையும் அவள் மறுத்து விட்டாள்.

இப்படிப் பல ஆண்கள் தன்னைத்தேடி வருவதனாலும், வானளவு உயர்ந்த புகழினா லும் அவளுக்குப் பெருமை எல்லையில்லா மலே இருந்தது. இந்த எல்லையில்லாப் பெருமையினால் ஒருவகைக் கர்வம் உண் டாகி எல்லா ஆண்களும் தனக்காக ஏங்குப வர்கள், தன் சுண்டு விரல் அசைவுக்காகக் காத்திருப்பவர்கள் என்ற ஒரு மட்டமான அபிப்பிராயம் அவளுள் வளர்ந்து கொண்டு வந்தது.

அன்று கார்த்திகா 'சொப்பிங்' செய்யப் போயிருந்தாள். கூடவே அவளது வீட்டில் வேலைசெய்யும் தேவியும் சென்றிருந்தாள்.

தேவி எட்டுவயதிலேயே கார்த்திகாவின் வீட்டிற்கு வேலைக்கு வந்தவள். இப்பொழுது அவளுக்குப் பதினெட்டு வயது கடந்து கொண்டிருக்கிறது.

தேவிதான் அந்த வீட்டின் முதுகெலும்பு. பாத்திரம் தேய்த்துச் சமைப்பதிலிருந்து கார்த்திகாவின் உடுப்புகள் 'அயனிங்' செய்து தாய்க்குக் கால் பிடித்து விடுவதுவரை அத் தனை காரியங்களையும் அவள் ஒருத்தியே செய்து முடிப்பாள். எந்தவித மனக் கோணல் களுமில்லாமல் சுறுசுறுப்பாக வலம் வரு வாள்.

இந்தத் தேவியை கொழும்பு நாகரீகத் திற்கு மாற்றி எடுப்பதற்காக கார்த்திகா பல காலங்கள் முயன்றிருக்கிறாள். எப்படித்தான் அலங்காரம் செய்தாலும் தேவியின் வதனத்தி லிருந்து அந்தக் கிராமத்து வாடையை



மாற்றவே முடியாமலிருக்கும்.

"என்னை விட்டுடுங்க அக்கா, எனக்கு அதெல்லாம் வேணாம்" இப்படிச் சொல்லி அவள் நழுவி விடுவாள்.

இருவரும் 'சொப்பிங்' முடித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கார்த்திகா, தேவியிடம் கேட்டாள்,

"இப்பவும் அந்தக்கார் நம்மைத் தொடர் கிறதா தேவி?" தேவி திரும்பிப் பார்த்தாள். "ஓமக்கா அந்த நீலநிறக்கார் நமக்குப் பின் னால்தான் வந்து கொண்டிருக்கிறது."

"இவனுக்கு வேலையில்லை. இப்ப புதி தாக எனக்குப் பின்னால் அலைய ஆரம்பிச் சிருக்கிறவன் இவன்தான். இப்படி எத்தனை பேரைப் பார்த்துப் போட்டன், ஐ லவ் யூ என்பார்கள், உன்னைத் திருமணம் செய்ய விரும்புகிறேன் என்பார்கள். இதச் சொல்லத் தானே அலைகிறார்கள். இப்படி எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தா என்னால் என்னதான் செய்ய முடியும்? சே... இந்த ஆண்கள் எல்லாம் இப்படித்தான், அழகாக வும் கொஞ்சம் புகழுடனும் இருந்தால் போதும் துரத்தவே தொடங்கிடுவாங்கள்." வெறுப்பைக் கக்குவதுபோல் பேசினாலும் உள்ளூர அவளுக்கு மகிழ்வாகவே இருந் தது.

அந்த மகிழ்வுடன் மறுநாள் தொலைக் காட்சிப் பணி முடிந்து வீடு வந்து சேர்ந்தாள் கார்த்திகா. அப்பொழுது அவளைத் தொடர்ந்து கொண்டிருந்த நீலநிறக்கார் இளைஞன் அவளது வீட்டு முன் அறையி லிருந்து தாயுடன் கதைத்துக் கொண்டிருப் பது தெரிந்தது.

அவனைத் தனது வீட்டில் கண்டதும் அவளுக்கு முதலில் சிரிப்புத்தான் வந்தது. பின் அந்தச் சிரிப்பு சினமாக மாற அவள் எதுவுமே சொல்லாமல் தனது அறைக்குள்ளே நுழைந்தாள்.

வேலைப்பழு களைப்புத்தீர சிறிது நேரம் கட்டிலிலே படுத்திருந்தாள் கார்த்திகா. பத்துநிமிடங்கள் கழிந்திருக்கும்.

"கார்த்திகா, கார்த்திகா!" அழைத்துக் கொண்டு அவளது தாய் உள்ளே வந்தாள்.

"என்னம்மா?" வெறுப்புடன் கேட்டாள் அவள்.

"அந்த இளைஞன் உன்னுடனும் கதைக்க வேணுமாம்."

"என்னோட என்ன கதைக்கப்போறான்? உன்னை விரும்புறன். உன்னையே கல் யாணஞ் செய்ய ஆசைப்படுகிறன். நீயென் றால் எனக்கு உயிர். நீ இல்லையென்றால் என்னால் வாழவே முடியாது. நீ என் மனைவியானாலும் உன் சுதந்திரத்தில் நான் தலையிட மாட்டேன். என்னிடம் ஏகப்பட்ட சொத்துக்கள் இருக்கு அதெல்லாம் உனக்கே சேரும்', இப்படி ஏதாவது தானே என்னுடன் கதைக்கப்போறான். நீங்கள் அம்மா சொல்ல வேண்டியதுதானே? இப்பவெல்லாம் என் சம்மதத்தைப் பெறுவதற்கு உங்களிடம்தானே வந்து கேட்கிறார்கள்." தாயிடம் பொரிந்து தள்ளினாள் கார்த்திகா.

"அவன் தேவியை கல்யாணஞ்செய்ய ஆசைப்படுகிறானாம்." அவள் தாய் அழுத்த மாகத் தெரிவித்தாள்.

கார்த்திகாவிற்கு நெஞ்சு சுருக்கென்றது. களைப்புத்தீர படுத்திருந்தவள் சட்டென எழுந்து அமர்ந்தாள்.

"தேவியை அவன் கடைத்தெருக்களில் பார்த்திருக்கிறானாம். அவளது கிராமத்து அழகு சுறுசுறுப்பு எல்லாம் பிடித்துப் போயிற் றாம். கல்யாணஞ் செய்தால் அது தேவி யைத்தானென்று முடிவாக இருக்கிறான். அதுதான் உன்னோடு பல இடங்களில் தேவியைக் கண்டதால உன்னுடன் கதைத்துப் பார்க்கலாமென்று அலைந்திருக்கிறான். அது மட்டுமல்ல அவன் வீட்டில் ஒரே பிள்ளை யாம். தங்களது சொத்துக்களெல்லாம் தேவியையும் சேருமாம். இது சம்பந்தமாக உன்னுடனும் கதைக்கலாமென்று ஆசைப்படு கிறான்." இப்படியும் இன்னும் பலவாறும் அவளது தாய் சொல்லிக்கொண்டே போனாள். கார்த்திகா அமைதியாக தன் அறையைவிட்டு எழுந்தாள். மெதுவாக

களுவாஞ்சிக்குடி யோகன்

நகர்ந்து முன் அறையில் அமர்ந்திருந்த அவன்மீது பார்வையைச் செலுத்தினாள்.

வசீகர முகவெட்டும், கம்பீரமான உடல் வாகும், செல்வச் செழிப்புடனான அவ னது தோற்றமும் அவளின் மனதை சிந்திக் கத் தூண்டிக்கொண்டிருப்பதுபோல் தெரிந் தது.

இவை எதனையும் அறிந்திராத தேவி, வீடுதேடிவந்தவனுக்கு தேநீர் தயாரித்து 'கப்'பிலே ஊற்றி சீனி போட்டுக் கலக்கிக் கொண்டிருந்தாள்.

# இனம்

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்



'**பா**ர் போற்றும்
திருவே போற்றி!

போர் முகத்தின்
புயலே போற்றி!

நீ நடந்தால்
நாடு அதிரும்!

நீ சினந்தால்
உலகே அஞ்சும்!

நீ எழுந்தால்
பகை பணியும்!'

மன்னனை போற்ற
போட்டா போட்டி!

புரவலனைப் புகழ்வதில்
புலவர்களுக்குள் போட்டி!

முத்தான வார்த்தைகளால்
முகஸ்துதிகள்!

புகழ்பவர்களுக்கு
பொன் முட்டைகள்!
புலவர்களுக்கா கசக்கும்?

ஓலை ஓலையாக
புகழாரம்!
ஓதி ஓதியே
பொன் கறந்தார்கள்!

மகுடி கேட்டு
பாம்பு ஆடும்!
முகஸ்துதி கேட்டு
மன்னன் ஆடினான்!

இல்லாத பெருமைகள்
இருப்பதாக நினைத்தான்!

இல்லாத திறமைகள்
இருப்பதாய் இரசித்தான்!

தகுதிக்கு மீறிய
தற்பெருமை கொண்டான்!

புத்தி சொன்ன
அமைச்சர்
புறம் தள்ளப்பட்டார்!

தவறுகளை இடித்துரைத்தார்
எடுத்தெறியப்பட்டனர்!

"நான் சொல்வதே வேதம்
நான் சொன்னதே சட்டம்
தேவையில்லை வேறு வாதம்!"

ஆமாம் சாமிகள்
தாளம் போட்டனர்!

தாங்கள் அறியாதது
தரணியில் உண்டா?

முளையில் உதிப்பதெல்லாம்
முத்தான் தத்துவங்கள்!

உங்கள் சிந்தையில்
முளைப்பதெல்லாம்
சத்தான கோட்பாடுகள்!

மன்னன் காதுகளில்
போதை ஊற்றினார்கள்!

மன்னன் இதயத்தில்
மமதை நாட்டினார்கள்!

தகுதிக்கு மீறிய
தற்பெருமை ஊட்டினர்!
தரத்துக்கு மீறிய
எண்ணம் கூட்டினர்!

மன்னன் மதிக்கு
முகஸ்துதி சதியானது!

மன்னனின் பலவீனம்
கண்டறிந்தவர்கள்
காரியம் சாதித்தனர்!

கட்டழகிகள் என்றால்
மன்னன் விழிகள்
அவர்கள்மீது வட்டமிடும்!

நளின சுந்தரிகளை
அறிமுகம் செய்தனர்!

மேனி வளைவுகளில்
மோகித்துக் கிடந்தான்!

மேடு பள்ளங்களில்
மெய் மறந்து தகித்தான்!

சல்லாபம் தேடி
உல்லாசத்தில் புரண்டான்!

'மாங்கனி மேனி
மன்மத கேணி
தாங்கடி தோணி
தழுவடி ராணி
நான்தான் தேனி'
என்று புலம்பினான்.

கட்டழகிகளை பராமரிக்கவே
கஜானா பாதி காலியானது!

கூட்டித் தருபவர்களுக்கு
நீட்டிக் கொடுக்க
நாட்டில் வளம் போதவில்லை!

"நாடுகளைப் பிடி
அங்கெல்லாம் கொள்ளையடி!"
என்று உத்தரவிட்டான்.

மன்னனின் தேவைக்கு
மண்ணிலே யுத்தம்!

பொன்னள்ளி கொடுத்து
போகம் காண்பதற்கு
தேசம் எங்கும்
சிந்தவேண்டும் இரத்தம்!

படைகள் சோர்வுடன்
களம் சென்றன!

சென்ற இடமெல்லாம்
தோல்வி தழுவியது!

இறுதியில் மன்னனே
களம் சென்றான்!

மோக விளையாட்டில்
மூழ்கிக் கிடந்தவனுக்கு
வீர விளையாட்டு
தூரமாய் போனது!

"களம் சென்றால்
பகை பறக்கும்
குளம் என்றாகும்
பகைவர் சிந்தும் இரத்தம்!"
என்று முகஸ்துதி
செய்துதான் அனுப்பினார்கள்.

புகழ் வீச்சை இரசித்தவன்
வாள்வீச்சில் கோட்டைவிட்டான்!

கைதான மன்னன்
எதிரி நாட்டு
இராஜ சபையில்
நிறுத்தப்பட்டான்!

"பகைவனை வென்று
பகலவன் ஆனாய்!

நாடு பிடிக்க வந்தவரை
நாடி பிடித்து பார்த்தாய்!"

அயல் நாட்டு மன்னனுக்கு
செவியாரப் புகழாரங்கள்!

'எங்கோ கேட்ட குரலாய்
இருக்கிறதே'
முன்னாள் மன்னன்
முகம் திருப்பிப் பார்த்தான்!

என்னே ஆச்சரியம்
என்னே ஆச்சரியம்!

நேற்று அவன் சபையில்
நெற்றிக்கு நேராக
வெற்றி என்று உரைத்தவர்கள்
சுற்றி சுற்றி வந்தவர்கள்!
இன்று தோல்வி முற்றியதும்
கட்சி மாறி சுற்றுகிறார்கள்!

சேராத இனத்தோடு
சேர்ந்து விட்டால்
தீதான குணமெல்லாம்
சேர்ந்து வரும்!

செம் நிலத்திலே
நீர் பொழிந்தால்
சிவப்பாகி சேர்ந்துவிடும்!

தீ மனத்தோடு
சேர்ந்துவிட்டால்
திருவான மனம்கூட
தீதாகிவிடும்!

அவன் மனதில்
இறுதியாக ஒலித்தது
திருக்குறள் ஒன்று

"நல் இனத்தைவிட
சிறந்த துணையும் இல்லை!
தீய இனத்தைவிட
கொடிய பகையும் இல்லை!"

நல் இனம் என்பது
முதுகில் குத்தாதது!
முகஸ்துதியும் செய்யாதது!
தீய இனம் என்பது
சேர்ந்தே இருந்து குழி பறிப்பது!
முகஸ்துதி செய்தபடி
முதுகில் குத்துவது!
என்பதை உணர்ந்தான்!

**"நல்லினத்தி தூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல"**

அதிகாரம்: 46 குறள்: 460

---

(ஸ்போர்ட்ஸ்)

# உலக கோப்பை கிரிக்கெட்

# மே 23 வரையான போட்டிகள்

**ஏ**ழாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் மே 14 முதல் ஜூன் 20 வரை நடைபெறுகின்றன. இவற்றில் மே மாதம் 14ம் திகதியில் இருந்து மே 22ம் திகதி வரை நடைபெறும் போட்டிகளும் அவை நடைபெறவுள்ள திகதிகளும், விளையாடும் அணிகள் பற்றிய விபரங்களும் வருமாறு:

மே 14 இலங்கை எதிர் இங்கிலாந்து
மே 15 இந்தியா எதிர் தென்னாபிரிக்கா
மே 15 ஸிம்பாப்வே எதிர் கென்யா
மே 16 அவுஸ்திரேலியா எதிர் ஸ்கொட்லாந்து
மே 16 மே.இ.தீவுகள் எதிர் பாகிஸ்தான்
மே 17 நியூஸிலாந்து எதிர் பங்களாதேஷ்
மே 18 இங்கிலாந்து எதிர் கென்யா
மே 19 இலங்கை எதிர் தென்னாபிரிக்கா
மே 19 இந்தியா எதிர் ஸிம்பாப்வே
மே 20 அவுஸ்திரேலியா எதிர் நியூஸிலாந்து
மே 20 பாகிஸ்தான் எதிர் ஸ்கொட்லாந்து
மே 21 மே.இ.தீவுகள் எதிர் பங்களாதேஷ்
மே 22 இங்கிலாந்து எதிர் தென்னாபிரிக்கா
மே 22 ஸிம்பாப்வே எதிர் இலங்கை
மே 23 கென்யா எதிர் இந்தியா
மே 23 அவுஸ்திரேலியா எதிர் பாகிஸ்தான்.

## யாருக்கு கோப்பை?

**மொ**த்தம் 12 நாடுகள் கலந்து கொள்ளும் உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் கோப்பையை வெல்லும் அணி எது என்ற கேள்வி எங்கும் விவாதிக்கப்பட்டு வருகிறது.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கான் அண்மையில் ஷார்ஜாவில் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் அணிகள் விளையாடிய இறுதிப் போட்டியைப் பார்க்கச் சென்றிருந்தார்.

அப்போது, அவர் அளித்த போட்டியின் போது, "இம்முறை உலகக் கோப்பையை வெல்லும் அணி இந்தியாவா அல்லது பாகிஸ்தானா?" என்று கேட்கப்பட்டது.

அதற்கு இம்ரான்கான், "இரண்டு அணிகளுக்குமே கோப்பை கிடையாது. தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளில் ஏதாவது ஒன்று வெற்றிபெறும். பாகிஸ்தானிடம் துடுப்பாட்டம் எதிர்பார்க்கும் அளவுக்கு இல்லை. இந்தியாவிடம் பந்து வீச்சு இல்லை" என்று தெரிவித்தார்.

## அபராதம்

**இ**ங்கிலாந்தின் முன்னணி துடுப்பாட்ட வீரர் கிரஹாம் தோர்ப், இங்கிலாந்து கவுண்டி கிளப்பான கென்ட் கிளப் உறுப்பினர் கூட்டத்தில் கலந்து கொள்ளாததால் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

முக்கியமான இந்தக் கூட்டத்தில் இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். ஆனால் தோர்ப் கலந்து கொள்ளவில்லை. இதனால் அவருக்கு ஆயிரம் ஸ்டெர்லிங் பவுன் (சுமார் ஒரு இலட்சத்து 14 ஆயிரம் ரூபா) அபராதம் விதிக்கப்பட்டது.

## புதிய பயிற்சியாளர்

**ப**யிற்சியாளர் இல்லாமல் உலகக் கோப்பைப் போட்டியில் கலந்து கொள்ளச் சென்ற பாகிஸ்தான் அணிக்கு, பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் முஷ்டாக் முகமட் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்தடுத்துத் தோல்வியில் துவண்டு போயிருந்த பாகிஸ்தான் அணி ஜாவெட் மியாண்டாட் பயிற்சியாளரான பின் பல வெற்றிகளைக் குவித்தது. ஷார்ஜா போட்டிக்குப் பின் மியாண்டாட் தனது பதவியை திடீர் இராஜினாமா செய்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் இரசிகர்கள் இதனால் அதிர்ச்சியடைந்தனர். இதற்கு முற்றுப் புள்ளி வைக்க, முஸ்டாக் முகமட் புதிய பயிற்சியாளராக்கப்பட்டுள்ளார். இவரும் ஏற்கனவே இருமுறை பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக இருந்து பிரச்சனை காரணமாக விலகியமையும் குறிப்பிடத்தக்கது.

## இம்முறை நட்சத்திரங்கள்

**இ**ந்தியாவின் சச்சின் டெண்டுல்கர், மேற்கிந்தியத் தீவுகளின் பிரையன் லாரா, பாகிஸ்தானின் வாஸிம் அக்ரம் ஆகியோர் இம்முறை நடைபெறும் உலகக்கோப்பைப் போட்டித் தொடரில் நட்சத்திரங்களாக ஜொலிப்பர் என கிரிக்கெட் விமர்சகர்களால் கணிப்பிடப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் ஏனைய 9 அணிகளிலும் நட்சத்திர வீரர்கள் உள்ளனர். இருப்பினும் சச்சின், லாரா, அக்ரம் மூவரும் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளார். உலக அளவில் சர்வதேச ஒருதினப் போட்டிகளில் அதிக சதங்களை (21) அடித்துள்ள சச்சின் இங்கிலாந்து மண்ணில் இதுவரை ஒரு சதத்தையும் தொட்டதில்லை

---

# சிந்தியா பதில்கள்

✿ வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் எப்போது நடக்கும்?

கி. ஆனந்தராஜ், திருமலை.

நடத்துவது அரசுக்கே நல்லது! ஆயினும் வடக்கு-கிழக்கு இணைந்திருக்கக் கூடியதாக நடத்த விரும்பவில்லை! கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் ஆகஸ்ட் மாதத்தில் என்கிறார் அமைச்சர் அலவி! எனவே மாகாணசபைத் தேர்தல் தற்போதைக்கில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி!

✿ மடுவில் உள்ள அகதிகள் வெளியேற்றப்படுகிறார்களே?

தா. ஜெயபாலன், வவுனியா.

அங்கிருந்து படையினரை வெளியேறுமாறு கூறியதற்கு பதிலடி நடவடிக்கைபோல இருக்கிறது!

✿ சிந்தியா! ஆளும் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே அரசியல் பொதி விடயத்தில் சில பிரச்சனைகளில் இணக்கம் உள்ளதாக நீதியமைச்சர் கூறியிருந்தாரே? இப்போது என்னாச்சு?

இ. நந்தபாலன், திருமலை.

அப்படி எந்த இணக்கமும் உத்தியோகபூர்வமாக ஏற்படவில்லை! நுளம்பு அடிக்கவும், குப்பை பொறுக்கவும் பிராந்திய சபைகளுக்கு அதிகாரம் கொடுக்கலாம் என்பது போன்ற உப்புச் சப்பற்ற விஷயங்களில் வேண்டுமானால் உடன்பாடு இருக்கலாம். இவற்றை இணக்கமாகக் காட்டுவதற்கு அரசு முயல்வது வெளியுலகை சமாதானப்படுத்தும் தந்திரம்! "பொதி செத்துவிட்டது!" என்று எதிர்க் கட்சித் தலைவரே கூறிவிட்டாரே! அது போதாதோ?

✿ நமது தோல்விகளை சிலர் ஏளனம் செய்கிறார்களே, அவர்களை என்ன செய்யலாம்?

அ. ரகுநாதன், கல்கிசை.

அலட்சியம் செய்யலாம்.

உலகப் புகழ்பெற்ற விற்பனைப் பிரதிநிதிகளில் ஒருவர் டிக்கி பெயர்ட். அவர் இளம் விற்பனைப் பிரதிநிதிகளுக்கு வகுப்பு எடுத்தார்.

அப்போது ஒரு இளைஞன்: "நான் வீடு வீடாக விற்பனை செய்யப்போனால் எல்லோரும் என்னை அவமானப்படுத்துகிறார்கள்!" என்று கூறினான்.

அதற்கு டிக்கி பெயர்ட்: "உன்னை அவமானப்படுத்துகிறார்களா? ஆச்சரியமாக இருக்கிறதே! இதுவரை என் வாழ் நாளில் என்னை யாரும் அவமானப்படுத்தியதில்லை. நான் கொண்டு செல்லும் பொருட்களை என் முகத்தில் வீசியடிப்பார்கள். என்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவார்கள். கண்டபடி திட்டுவார்கள். அவ்வளவுதான்!" என்றார் சிரித்தபடி.

அந்த இளைஞன் ஒன்றும் புரியாமல் பார்த்தான். டிக்கி பெயர்ட் அவனிடம் கூறினார்: "அவமானப்படுத்துகிறார்கள் என்று புலம்பினால் நீ எதையும் சாதிக்க முடியாது புரிந்து கொள்!"

✿ சீனத் தூதரகம்மீது அமெரிக்கா குண்டு வீசியுள்ளதே?

எம். இம்தியாஸ், புத்தளம்.

அமெரிக்கா மட்டுமல்ல, எந்தவொரு அநியாயமான சக்தியும் தனக்குரிய சவப் பெட்டியை தானே தன் கையால் தயார் செய்வதுதான் வரலாறு! அமெரிக்கா தனது எதிரிகளை கூர்தீட்டிக் கொண்டிருக்கிறது!

✿ ஜெயலலிதா பிரதமராக முடியவில்லையே?

வி. சிவகுருநாதன், சிலாபம்.

ஜோதிபாசுவின் பெயரைக் கூறினால், யாராவது தன் பெயரைக் கூறுவார்கள் என்று எதிர்பார்த்தார். எதுவும் நடக்கவில்லை. ஆசை காட்டிய சுவாமிமீது உட்காய்ச்சலில் இருக்கிறாராம் அம்மா!



'ஆசையில் ஓர் கடிதம்' படத்தில் பிரசாந்த்-சாந்தினி

✿ சிந்தியா! காதல் கடிதம் கொடுத்தால் என் காதலி ஏடாகூடமாக ஏதாவது செய்துவிட்டால்?

கு. நிரஞ்சன், கற்பிட்டி.

ஆழம் அறியாமல் காலை விடாதீர் நிரஞ்சன். இந்த நேரத்தில் இந்திய தமாஷ் ஒன்று:

பாரதிய ஜனதா கட்சியின் (பி.ஜே.பி.) சின்னம் தாமரை. காங்கிரஸ் கட்சிச் சின்னம் கை. இனி தமாஷைப் படியுங்கள்.

ஒரு அரசியல்வாதியின் மகளை ஒருத்தன் காதலித்தான். இதை எப்படி அவளிடம் கூறுவது என்று பல நாட்களாக தவித்தான்.

பின்னர் ஒருநாள் அவளுடைய பிறந்த நாளில் ஒரு தாமரைப்பூவை எடுத்துச் சென்று அவளிடம் கொடுத்தான்.

உடனே 'பளார்' என்று ஓர் அறை கொடுத்தாள்.

தாமரை கொடுத்ததும், தன் காதலை அவள் புரிந்து கொள்வாள் என்று நினைத்தவன் அதிர்ந்துபோய் அவளைப் பார்த்தான்.

அவள் சிரித்தபடி கூறினாள். "நீ பி.ஜே.பி. சின்னம் தந்தாய். பதிலுக்கு நான் காங்கிரஸ் சின்னம் தந்திருக்கிறேன்!"

✿ தமிழ்க் கட்சிகளது கூட்டு முறிவடைந்து விட்டதுபோல் இருக்கிறதே?

பி. குமாரநாதன், திருமலை.

அது முறிந்து பல வாரங்களாகிவிட்டன. நற் கூட்டு முறிந்தால் கவலைப்படலாம்! தத்தம் தேவை கருதி உருவாகும் கூட்டுக்கள் முறிவது சாதாரண இயல்புதானே!

✿ விஜய், பிரசாந்த் இருவரில் முன்னணியில் நிற்பவர் யார்?

மா. ஜெயந்தினி, கொழும்பு-06.

இருவரும்தான்! (சிண்டு முடியவா பார்க்கிறீர்கள்?)

✿ உலகைப் புரிந்துகொள்ளவே முடியவில்லையே? ஏதாவது வழி இருக்கிறதா?

எம். கமலேஸ்வரன், யாழ்ப்பாணம்.

ரமண மகரிஷி சொல்வதைக் கேளுங்கள்:

"நம்மைத் தெரிந்து கொள்ளாமல் வெளி உலகைத் தெரிந்துகொள்ள முடியாது. நம்மைத் தெரிந்து கொண்ட பிறகோ வெளி உலகில் தெரிந்துகொள்ள ஒன்றும் கிடையாது!"

✿ மனக் கவலைக்கு மருந்து கண்டுபிடிக்க முடியாதா?

பா. ராசரத்தினம், பதுளை.

'வேலை இல்லாதவர்களுக்கு அரிய வாய்ப்பு உடனே வரவும்!' என்று பத்திரிகையில் விளம்பரம் வந்தது. அதனைப் பார்த்துவிட்டு அந்த முகவரிக்கு சென்றார் ஒருவர்.

அங்கே அழுக்கு உடையுடனும், பரட்டைத் தலையுடனும் ஒருவர் அமர்ந்திருந்தார்.

இவன் அவரிடம் "என்ன வேலை?" என்று கேட்டான்.

"நான் ஏகப்பட்ட கவலைகளுடன் இருக்கிறேன். என்னுடைய கவலைகளையும் நீ ஏற்றுக் கொண்டு என்னை விடுவிக்க வேண்டும். நீ ஏற்றுக் கொள்ளும் கவலை ஒவ்வொன்றுக்கும் இலட்ச ரூபாய் தருவேன்!" என்றார்.

உடனே இவன் சந்தேகத்துடன்: "உனக்கு இலட்ச ரூபாய் எங்கிருந்து கிடைக்கும்?" என்று கேட்டான்.

அதற்கு அவர் கூறினார்:

"அதுதான் என்னுடைய முதல் கவலை!"

✿ 'மோனிசா என் மோனலிசா' பார்த்துக் கிழித்தாரா சிந்தியா?

செல்வி எ.ப். ரியானா, கொழும்பு-09.

திரையைக் கிழிக்குமளவுக்கு பொறுமையை சோதிக்கும் படம்தான்! ஆனால் ரி.வி.யின் விலையை உத்தேசித்து முடிவை மாற்றிக் கொண்டேன்! டி. ராஜேந்தரின் பாணியில் சொன்னால், இப் படத்தில் கதையை நம்பவில்லை! சதையை நம்பியிருக்கிறார். பாடல் காட்சிகளுக்கு கண்டபடி செலவு செய்துவிட்டு, நடிகைகளின் துணி விஷயத்தில் பயங்கரக் கஞ்சத்தனம் காட்டியிருக்கிறார்! இப்படத்தை பொறுமையாக பார்ப்பவர்கள் புண்ணியவான்கள்!



'மோனிசா என் மோனலிசா' படத்தில் ரமன்காந்த்-மும்தாஜ்

# திருமறை தரும் பொது நெறி 61

# மும்மதத்தவர்களாலும் போற்றப்படும் எருசலேம்

ஆண்டவருக்கு ஓர் ஆலயம் எழுப்பப்பட வேண்டும் என்ற எண்ணம் மன்னர் சாலமோனிடம் ஏற்பட்டதிலிருந்து மிகப்பிரமாண்டமான அளவில் அதனை அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டார். இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்திலிருந்த சிறந்த கட்டட நிர்மாண நிபுணர்களைத் தேர்ந்தெடுத்தார். இன்றும் உலகின் அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படும் எகிப்து நாட்டின் பிரமிட்டுகளைக் கட்டியவர்கள் இஸ்ரயேல் மக்களல்லவா? அந்நாட்டில் இவர்கள் அடிமைகளாக இருந்தபோது இஸ்ரயேல் கலைஞர்களின் கைவண்ணத்தை ஆதாரமாக வைத்தே எகிப்து நாட்டு பார்வோன்-மன்னர்கள் அப்பிரமிட்டுகளையும் மாடமாளிகைகள் கூட கோபுரங்களையும் அமைத்தார்கள். அக்கலைஞர்களின் வாரிசுகளே எருசலேம் நகரில் இறைவனுக்கான ஆலயத்தை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.



எருசலேம் நகரின் இன்றையத் தோற்றம்.

## ஆண்டவரின் வாக்குறுதி

மன்னர் சாலமோனின்டம் ஆண்டவர் இவ்வாறு கூறியருளினார்:

**“நீ என் நியமனங்களின் படி ஒழுகி, என் நீதிச் சட்டங்களின்படி செயலாற்றி, என் கட்டளைகளைக் கடைப் பிடித்து நடந்து வருவாயாகில், நீ கட்டுகிற இக் கோவிலைக் குறித்து நான் உன் தந்தை தாவீதுக்குச் சொன்ன என் வாக்கை உன்னிடம் நிறைவேற்றுவேன். என் மக்களாகிய இஸ்ரயேலரைக் கைவிட மாட்டேன்!”**

ஆண்டவரின் அநுக்கிரகத்தால் ஆலயம் தூய்மையும் அழகும் நிரம்பிய அற்புத வடிவாக அமைந்தது. கருங்கல் சிற்பங்களும் மர வேலைப்பாடுகளும் வெண்கல வேலைப்பாடுகளும் கைதேர்ந்த கலைஞர்களின் கைவண்ணத்தில் சிறப்புப் பெற்றிருந்தன.

நான்காம் ஆண்டு கோவிலுக்கான அடித்தளம் போடப்பட்டது. இதனைக் கட்டி முடிக்க ஏழு ஆண்டுகளாயின. பதினோராம் ஆண்டு சகல பணிகளும் முடிவடைந்தன.

எருசலேம் நகரம் ஆண்டவரின் ஆலயம் எழுப்பப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை ஒரு புனித நகரமாகவே கணிக்கப்படுகிறது. இஸ்ரயேல் மக்களான யூதமக்களால் போற்றப்பட்ட போதும் இன்றும் யூதமக்களுக்கு மட்டுமல்ல, கிறிஸ்தவ மக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இந்நகரம் புனிதமான நகரமாகவே விளங்கி வருகிறது. காலத்துக்குக் காலம் பல்வேறு படையெடுப்புகளினால் இந்நகரம் கைமாறியபோதும், ஆலயம் சிதைக்கப்பட்டபோதும் இந்நகரின் தெய்வீகத் தன்மையும் புனிதமும் சிதைந்துவிடவில்லை. அவ்வப்போது இடிபாடுகளும் சிதைவுகளும் சீர்திருத்தப்பட்டே வந்துள்ளன.

திரு விவிலிய காலத்திலிருந்து எருசலேம் நகரம் யூதர்களின் அரசியல்-வரலாற்றுடனும் மதத்துடனும் நெருக்கமான உறவு பூண்டிருந்ததை இதுவரை நாம் கண்ட கதைகளின் மூலம் அறிவோம்.

இறைவனின் திருத்தூதரான இயேசு பெருமான், எருசலேம் நகரில் பல அற்புதங்களைச் செய்து காட்டியுள்ளார். இந்நகரிலேயே அவர் சிலுவையில் அறையப்பட்டு, மரித்து மூன்றாவது நாள் உயிர் பெற்றெழுந்து பரலோகம் சென்றார். இதனால் உலகின் கண்ணுள்ள கிறிஸ்தவ மக்கள் எருசலேமைப் புனித நகரமாகக் கருதுகின்றனர். இஸ்லாமியப் பெருமக்களின் புனிதத்தலங்களான மக்கா, மதீனா ஆகியவற்றின் அடுத்த படியாக எருசலேம் நகரைக் கருதுகின்றனர். நபிகள் (ஸல்) பெருமானார் எருசலேம் நகருக்கு வந்தே அங்கிருந்து மிஹ்ராஜ் சென்றதாகக் கருதுகின்றனர்.

இன்றும் எருசலேம் நகரில் யூத மக்களும் கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் செறிந்து வாழ்கின்றனர்.

**தா**வீது மன்னரால் யூதாவின் தலைநகராகப் பிரகடனப்படுத்தப்பட்ட எருசலேம் அவருடைய மகன் சாலமோன் மன்னருடைய காலத்தில் பல்வளங்களும் பெற்றதுடன் ஆண்டவரின் ஆலயம் அமைக்கப்பட்டதால் புனிதமடைந்தது. ஆண்டவருக்கு மன்னர் சாலமோன் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். இருப்பினும் அவரும் ஆண்டவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்காமல் இடையில் தர்ம வழியிலிருந்து பிறழ்ந்தார். மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய நிலையிலிருக்கும் மன்னவரே தவறு செய்தால், அப்பாவி மக்கள் எவ்வாறு நடப்பார்கள்? ‘மன்னர் எவ்வழி மக்களும் அவ்வழி’ என்ற நிலையில் மக்களும் பல தவறுகளை இழைத்து ஆண்டவரின் கோபத்தைத் தூண்டினர். இதனால் மக்கள் பல தண்டனைகளை அனுபவிக்க நேர்ந்தது. இதன் பயனாக எருசலேம் நகரும் ஆண்டவரின் ஆலயமும் பாதிப்படைந்தன.

## எழுச்சியும் வீழ்ச்சியும்

கிறிஸ்துவுக்கு முன் 587, 586 ஆகிய ஆண்டுகளில் பாபிலோனியர்கள் எருசலேம் நகரைக் கைப்பற்றினர். ஆலயத்தையும் சூறையாடினர். பின்னர் பாரசீக மன்னர்களும் கிரேக்க நாட்டரசர்களும் எருசலேமை ஆட்சி புரிந்தனர். மகா அலக்ஸாண்டர் மன்னரும் இந்நகரைக் கைப்பற்றினார். சிரிய நாட்டவர்களும் ஆதிக்கம் செலுத்தினர். சிரிய நாட்டரசனான நாலாவது அன்ரியோச்சுஸ், கிரேக்கத் தெய்வங்களின் வழிபாட்டினை யூத மக்கள் மீது திணிக்க முற்பட்டான். கி.மு.165ல் மீண்டும் யூதமக்கள் அந்நிய ஆதிக்கத்தை அகற்றிவிட்டு ஆலயத்தையும் செப்பனிட்டுக் கட்டியெழுப்பினர். கி.பி.145ல் பூரண சுதந்திரம் பெற்றார்கள். இருப்பினும் இடையில் புகுந்து கொண்ட வேற்றின மக்களின் குழுக்களுக்கிடையிலான மோதல்களினால் எருசலேம் பலம் குன்றிப் போனது.

## உரோமரின் ஆதிக்கம்

இக்காலகட்டத்தில் உரோமராச்சியம் வலுவான சாம்ராச்சியம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் அண்டை நாடுகளை ஆக்கிரமிக்கும் பணியில் இறங்கியது. கிறிஸ்துவுக்கு முன் 63ம் ஆண்டு உரோம் நாட்டுப் படைகள் எருசலேமைக் கைப்பற்றின. 54ம் ஆண்டில் உரோம படைத்தளபதி கிராசஸ் என்பவன் ஆலயத்திலிருந்த விலைமதிப்பற்ற ஏராளமான பொருட்களைச் சூறையாடினான். உரோமப் பேரரசர் யூத மக்களை அடிமைகளைப் போல் நடத்த விரும்பவில்லை. யூத இனத்தவரான ஏரோது என்பவரை மன்னராக நியமித்தார். உரோமராச்சியத்தின் ஒரு சிற்றரசாக எருசலேம் விளங்கியது. ஏரோது மன்னர், சிதைந்து கிடந்த ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்தார்.

உரோமர்களுக்குக் கீழ் ஒரு சிறு இராச்சியமாக எருசலேம் இருப்பதை யூத மக்கள் விரும்பவில்லை. இதனால் எருசலேமில் உரோம ஆதிக்கத்துக்கெதிரான கிளர்ச்சிகள் அடிக்கடி நடைபெற்ற வண்ணமே இருந்தன. தங்களை அடிமைத்தளையிலிருந்து மீட்பதற்கு ஒரு மிசியா தோன்றுவார் என்றே அம்மக்கள் காத்திருந்தனர்.

இத்தகைய ஒரு நம்பிக்கை மக்களிடம் வேரூன்றியிருந்தமையினால் சில போலி வேடதாரிகள் மக்களை விடுவிக்க வந்த மேசியா தாமே என்று தம்மைத்தாமே கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றத் தலைப்பட்டனர். ஆனால் இத்தகைய போலிகளை உரோம சிப்பாய்கள் தேடிப்பிடித்து சிலுவையிலறைந்து கொன்றனர்.

கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு ஆண்டுகளில் இத்தகைய சம்பவங்கள எருசலேமில் நடைபெற்றன.

(தொடர்ந்து வரும்)

# இராஜகுமாரன்

**திருமறை 58 விடை:** ஆமானுடைய வீட்டில்.

**பரிசு பெறுவோர்:**

1. எஸ்.செவ்வந்தி, கல்குடா வீதி, பேத்தாழை, வாழைச்சேனை.
2. எம்.பரமேஸ்வரி ரஞ்சன், 10,வேளிக்க பேள, பரகாதெனிய, வேவுட.
3. எம்.கே.எம்.சித்தீக், 3வது குறுக்குத் தெரு, சந்தைவீதி, ஓட்டமாவடி-01.
4. சிவாஜினி (கண்ணா), ‘சிவபதி’ இணுவில் மேற்கு, யாழ்ப்பாணம்.
5. வின்ஸ்டன் மறியானு, மா ஓயா குறுப், தெஹியோவிட்ட.

**திருமறை 61 வினா:-** உரோமரால் நியமிக்கப்பட்ட மன்னரின் பெயரென்ன?

மே. 22க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 61–தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# செந்தில் விஜயம்

இந்த வாரம் அரசியலுக்கு பாதி முழுக்கு (முழுதாகவல்ல) போட்டு விட்டார் காதிலை பூ கந்தசாமியார். அதனால் நகைச்சுவை நடிகர் செந்திலை சந்திக்கிறார்.



**கா.பூ.க:** வணக்கம் திருவாள செந்தில் அவர்களே! என்ன மிகவும் கவலையாக இருக்கிறீர்கள்?

**செந்தில்:** ஒண்ணுமில்லை யண்ணே. நம்ம கவுண்டமணியண்ணையிடம் உதைவாங்கி ரொம்ப நாளாச்சு. அதுதான் கவலையா இருக்கண்ணே. (பாடுகிறார்)

*அவர் வருவாரா,*
*அவர் வருவாரா*
*ஓய்ந்து போன எந்தன் உடலை*
*எழுந்து ஓடவைக்க*
*உதை தருவாரா?*

**கா.பூ.க:** ஏன் செந்தில் நீங்கள் ஒரு நாளாவது அவரை உதைத்தால் என்ன?

**செ:** (ரஜினி பாணியில் விரலை பூமியை நோக்கி வளைத்துக் காட்டி) என் உதை தனி உதை! வேணாம் என்னை விட்டிடுங்க. நான் உதைச்சா அவரு தாங்க மாட்டாரு! பின்னாடி நான் உதை வாங்க ஆளே இருக்காது! என் உடம்பு உதை வாங்காமல் ஒழுங்காக இருக்காது!

**கா.பூ.க:** உங்களுக்கு பிடித்த நடிகர் யார்?

**செ:** பில்கிளின்ரன்! ஏன் என்று கேட்கிறீங்களா, தப்புப் பண்ணிப்போட்டு, அதை மறைக்க குப்பு குப்பென்று குண்டு போட்டுக்கிட்டிருக்காரு. என்னமாய் வசனம் எல்லாம் பேசி உலகத்தையே அசரவைக்கிறாரு. நம்ம நடிகர் திலகம் அவர்கிட்ட தோத்தாரு போங்க.

**கா.பூ.க:** பிடித்த நடிகை?

**செ:** எப்போதுமே ஜெயலலிதாதாங்க! காரணத்தை கேட்காதேங்க! சமீபத்திலதான் அவங்க ஆடிட்டரை செருப்பாலே புரட்டி எடுத்திருக்காங்க!

**கா.பூ.க:** உங்கள் கனவில் யார் யாரெல்லாம் வருவார்கள்?

**செ:** தொடையழகி ரம்பா, தொப்புள் அழகி சிம்ரான் என்று சொன்னா கிளு கிளுப்பாகத்தான் இருக்கும்! ஆனா என் ரேஞ்சுக்கு அவங்க என் கனவில வரமாட்டாங்க. நான்தான் அவங்க கனவில போய் சில்மிஷம் பண்ணியிருக்கிறேன்! நம்ம ரேஞ்சுக்கு பாடகி மரடோனாதான் வாருங்க!

**கா.பூ.க:** அது மரடோனா இல்லை மடோனா.

**செ:** எப்ப பேரை மாத்தினாங்க, என் கிட்ட சொல்லவேயில்லையே, ஓகே, நெக்ஸ்ட்?

**கா.பூ.க:** வாஜ்பேய் ஆட்சிக் கவிழ்ப்பு பற்றி உங்க அபிப்பிராயம்?

**செ:** கவிழக் கூடியதாக இருந்தது கவிழ்ந்தவங்க தப்பேதவிர, கவிழ்த்தவங்க தப்பே இல்லை. இனி வாரவங்க என்றாலும் உறுதியாக இருந்தாக்க யாரும் கவிழ்க்க முடியாதுங்க! குனிந்து நின்னா குட்டத்தான் செய்வாங்க. கவிழ்ந்து நின்னா கவிழ்க்கத்தான் செய்வாங்க. எப்படி என் தத்துவம்?!

**கா.பூ.க:** இப்போ கவுண்டமணி இங்கே நின்னா என்ன சொல்லுவார் தெரியுமா?

**செ:** தெரியுங்க. நானே சொல்லிடறேன். ஏண்டா, கரிச்சட்டி வாயா, உனக்கெல்லாம் ஒரு தத்துவமாடா. ஏன்டா இம்சை பண்ணுறீங்க? மவனே! இனி தத்துவம் பேசினே, அடுத்துப் பேச நாக்கே இருக்காது. இழுத்துவைச்சு அறுத்துப்புடுவேன் அறுத்து. ஓடறா நாயே.... என்று கூறிக்கிட்டே உதைப்பாருங்க. நான் என்ன பண்ணுவேன் தெரியுமா?

(செந்தில் ஓடுகிறார். ஓடியே போனார்)




## விசேட அறிவித்தல்

### விளம்பரம் விளம்பரத்துக்காகவே

நீங்களும் நம்மோடு இணைந்து படையப்பர்களாகலாம் என்று நாங்கள் விடுத்த அறிவித்தலை நம்பி படையப்பர்களாக மாறுவதற்கு ஆசைப்பட்டு வந்துவிட வேண்டாம் என்றும், அவ்வாறு வந்தால் புலியப்பர் என்ற சந்தேகத்தில் உங்களை துளைக்கும் துளையப்பர்களாகவும், உங்களை உடைக்கும் உடையப்பர்களாகவும் நாம் மாறும் நிலை ஏற்படும் என்பதையும், உலக விளம்பரத்துக்காக கொடுக்கப்பட்ட படையப்பா விளம்பரங்கள் விளம்பரங்களுக்காக மட்டும்தான் என்பதையும் மறந்துவிடாதீர்கள். நம்பி ஏமாந்து வந்து எங்களை உங்கள்மீது சந்தேகப்பட வைக்காதீர்கள் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரதாரர், யாழ்ப்பாணம்.

காதிலை பூ கந்தசாமி

அருள் ஜுவலர்ஸ்
AROL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது பவுண் நகைகள் மின்னிப் பேசுகின்றன.
105, நாலி வீதி வெள்ளவத்தை, கொழும்பு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

↓ மேலை நாடுகளில் ஆடைகளது அளவுகள் குறைந்தாலும், அழகு குறைவில்லை. வித்தியாசமான சிந்தனையோடு ஆடைகளை வடிவமைக்கின்றனர். படத்தில் நவ நாகரிக நங்கை அணிந்திருக்கும் ஆடையை உற்று நோக்குவோம்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

# அலங்காரம்



↓ புலமையும் வறுமையும் பிரிக்க முடியாத என்பது பொது விதியல்ல.

[illegible]

என்னே ஒரு ரசனை பார்த்தீர்களா?

மிக்கிமௌஸ் பொம்மைகள் உலகப் புகழ்பெற்றவை. பொம்மைகள் வடிவத்திலேயே ஆடையை வடிவமைத்து அசத்தியுள்ளனர்.

ஒரே ஒரு சந்தேகம், குழந்தைகள் பார்த்துவிட்டு, 'பொம்மையைத் தா' என்று அடம்பிடித்தால் இந்த அம்மணி என்ன பண்ணுவார்?!

# விழா

↑ சோவியத் யூனியனின் வீழ்ச்சியோடு சோசலிச நாடுகள் பல வீழ்ந்தன. ஆனாலும் சீனா, வியட்நாம், வடகொரியா, கியூபா போன்ற நாடுகள் சோசலிச பாதையில் தொடர்ந்து நடைபோடுகின்றன.

சீனாவில் பாரம்பரிய கலைகள் இன்றும் சிறப்போடு விளங்குகின்றன.

படத்தில் ஆடுபோல கச்சிதமாக தோன்றுவது ஒரு மனிதர்தான். ஆடுபோல தன்னை அலங்கரித்தபடி ஆடுகிறார்.

பீஜிங்கில் 'லாமா' கோயிலின் வருடாந்த திருவிழாவில், பக்தர்கள் ஆடுகள் போல தம்மை அலங்கரித்தபடி நடனமாடி வருவர். லாமா என்பது ஆடுகளில் ஒரு ரகம். சோசலிச நாடாக இருந்தாலும் மதம் தனிப்பட்டவர்களது நம்பிக்கை சார்ந்த விடயமாக கருதப்படுகிறது. அரசு அதில் தலையிடுவதும் இல்லை. தட்டிக்கொடுப்பதும் இல்லை.

அதுபோல அங்கும் மூட நம்பிக்கைகள் முற்றிலும் அழிந்துவிடவில்லை. அவற்றை அரசு ஊக்குவிக்காது. வரம்பு மீறினால் தடுக்கவும் தயங்காது. இந்த ஆட்டுத் திருவிழாவையும் அரசு தடை செய்வது கிடையாது. அதனால் ஜமாய்க்கிறார்கள் பக்தர்கள்.

நம் நாட்டிலும் ஆடுகளுக்கு விழா எடுப்பது உண்டு. அது பலிகொடுப்பதற்காக. ஹி.ஹி.ஹி.

இங்கு ஆடுகள் மட்டும்தான் பலியிடப்படுகிறதா? என்று நீங்கள் கேட்கலாம். மனிதர்களும்தான்.




# சோடனை




↑ 1998இல் அமெரிக்காவில் ஹூஸ்டன் நகரில் ஒரு வித்தியாசமான கண்காட்சி நடைபெற்றது. கார் உரிமையாளர்கள் தங்கள் கார்களை அழகாக அலங்கரித்து வந்து பரிசுகளை தட்டிச்செல்லலாம் என்று கார் உற்பத்தி நிறுவனம் ஒன்று அறிவித்தது. பரிசை வெல்ல கார் உரிமையாளர்கள் பலர் குதித்தனர் களத்தில்.

ஒவ்வொரு விதமாக கார்களை அலங்கரித்து வந்தனர்.

சித்திரக் கார் கண்காட்சி என்பது இந்த குட்டப்பட்ட பெயர். நம்நாட்டில் சித்திரத் தேர்கள்தான் இருக்கின்றன. சித்திரக்கார் கண்காட்சியில் பலரையும் கவர்ந்து பரிசு வென்ற கார்களில் இதுவும் ஒன்று.

வீட்டுத் தோட்டத்தில் இருந்த காய்கறிகள், கனிகள் மூலமாக 90 விதமான அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்கா [illegible] மாநிலத்தைச்சேர்ந்த ஜெனன் என்பவர் இக் காரை அலங்கரித்திருந்தார். பார்ப்பதற்கு அழகாக இருக்கிறதல்லவா? ஆடு, மாடுகளுக்கு அருகே காரை நிறுத்தி வைத்தால் [illegible] தொலைந்தது சத்தம்.

# கப்டன்




➔ அர்ஜுன் ரணதுங்காவை சென்ற உலகக் கோப்பையின் போது 'கிழச்சிங்கம்' என்று சில கிரிக்கெட் விமர்சகர்கள் கூறினார்கள்.

ஆனால் அந்தச் சிங்கம்தான் உலகக் கிண்ணத்தை வென்றெடுத்து உயர்த்திப் பிடித்தது.

இம்முறையும் கடும் கேலிகள். ரணதுங்கா, அரவிந்த, திலகரத்ன, மகாநாம, சனத், களு ஆகியோர் உட்பட வயதானவர்களைக்கொண்ட அணியாகிவிட்டது இலங்கை அணி.

இந்த வயதானவர்கள் திறமைசாலிகளாக இருந்தாலும், தசைகள் ஒத்துழைக்காது. மூட்டுக்கள் உரசும். களைப்பு, சலிப்பு தோன்றும் என்றெல்லாம் விமர்சனங்கள்.

இந்தவருடம் 14 போட்டிகளில் ஆடிய இலங்கை அணி பத்தில் தோல்விகண்டுள்ளது.

இம்முறை உலகக் கோப்பை நிச்சயமாக இலங்கைக்கு கிடையாது என்பது தான் சர்வதேச கிரிக்கெட் விமர்சகர்களது ஒருமித்த கருத்து.

"அதுவும் நன்மைக்குத் தான்" என்கிறார் ரணதுங்கா. "எங்களைப் பற்றி குறைவாக மதிப்பிடுவது நாங்கள் வெற்றி பெறுவதை சுலபமாக்கும்" என்கிறார் அவர்.

ஆனால், அவர் நினைப்பதுபோல இம்முறை வெற்றிபெறுவது அத்தனை சுலபமான விஷயமாகத் தெரியவில்லை.

இலங்கை அணியின் பலம், பலவீனம் என்பவற்றை நன்கு ஆராய்ந்து, ஏனைய அணிகள் வியூகம் வகுத்துள்ளன.

எந்த பந்து தடுப்பாளரை நிறுத்தினால் சனத்தை அமுக்கலாம் என்பது தெரியும்.

கடந்த உலகக் கோப்பை போட்டியில் இலங்கை அணி 7 போட்டிகளில் ஆடியது. அத்தனையிலும் வெற்றி.

இலங்கை அணி அப்படி வெற்றிபெறும் என்றோ, ஏன் அரை இறுதிக்குக்கூட தகுதி பெறும் என்றோ எவரும் சென்றமுறை நினைத்திருக்கவில்லை.

அதனால்தான் இம்முறை விம்பாப்வே அணியிடமும் உஷாராக இருக்கின்றன ஏனைய அணிகள்.

இலங்கை அணி வீரர்களுக்கு வயதாகிவிட்டது. அர்ஜுன் ரணதுங்க இளம் கிழவராகிவிட்டார் என்று கிண்டலடித்தாலும், அவர் ஒரு மகாதிறமைசாலி என்பதை கிரிக்கெட் உலகம் ஒப்புக் கொள்கிறது.

உலகக் கோப்பை போட்டிகளில் 24இன்னிங்ஸ் ஆடி, 835 ஓட்டங்களை குவித்திருக்கிறார் ரணதுங்கா. தற்போது விளையாடி வரும் வீரர்களில் உலக கோப்பை போட்டிகளில் அதிக ஓட்டங்களை குவித்தவர் ரணதுங்கா தான். தற்போதுள்ள கப்டன்களில் அதிக வயதானவரும், பழுத்த அநுபவசாலியும் அவர்தான்.

# 1வது பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் சானக உதயங்க (Chanaka Udayanga)

முல்லைத்தீவு-தங்கலவையைச் சேர்ந்த திரு திருமதி [illegible] தம்பதியினரின் அருந்தவப் புதல்வன் சானக உதயங்க தனது முதலாவது பிறந்த தினத்தை 15.05.99 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சின்னம்மாமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் உதயங்கவை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்- அம்மா-அப்பா, திருகோணமலை



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பாத, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் மே 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.